ஞானசம்பந்தம்

ஏழாவது ஆண்டு மலர்

தருமபுர ஆதீனம்

திருப்பாதிரிப்புலியூர்

திருவதிகை

திருக்கோலக்கா





இதழாசிரியர்:
தருமபுர ஆதீனம் நாகலிங்கத் தம்பிரான்

பொருளடக்கம்.

அப்பர் காலத்து அரசியல்	K. M. வெங்கட்டராமையா, M.A.B.O.L.,	38
அன்பரை ஆட்கொண்ட அதிசயம்....	வை. குஞ்சிதபாதம் பிள்ளை	19
உயிரவை நிலை	கே. ஆறுமுக நாவலர்	44
எட்டு	செப்பறைச்சுவாமிகள்	16
ஏழில்	மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார்	40
ஒன்றுமாம் யாவுமாம்	R. K. விசுவநாதன் M. A.	59
கவுணியன் கட்டுரை	ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.,	1
சங்கச்செய்யுளின் பெருமை	மாணவி. சு. கரும்படுசொல்லி	62
சண்பகமாறன்	ச. த.	80
சிறு குறும்பு	ச. தண்டபாணி தேசிகர்	27
தமிழிசை	ரா. சண்முகசுந்தரம் பிள்ளை	76
தமிழ்நூல்களும் கல்வெட்டுக்களும்...	வை. சுந்தரேச வாண்டையார்	66
தருமத்தை விரிக்கிறோம்.	M. R. ஜம்புநாதன்	56
தலையான மனிதர்	க, வெள்ளைவாரணம்	10
திருஞானசம்பந்தரும் இயற்கையும்	வி. சிவக்கொழுந்து	8
நாலாயிர திவ்யப்பிரபந்தம்	ரா. புருஷோத்தம நாயடு	46
பறவைகளைத் தூது அனுப்பினாள்	கோவைகிழார்	4
புறப்பொருக்கு மணிகள்	ய. மஹாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L.	97
பையப்போ	M. ஆறுமுக தேசிகர்	22
மயிலையிற்செய்த அற்புதம்	குகப்பிரியை	35
மலரும் மணமும்	(சித்தாந்ததீபிகை)	57
விளையாடிய வித்தகன்	ம. பாலசுப்ரமணிய முதலியார் B. A. B., L.,	25
வெள்ளியம்பலவாணத் தம்பிரான்	தி. பட்டுச்சாமி ஓதுவார்	30
வேலை காலியில்லை	ஜி. சுப்ரமணியப்பிள்ளை M. A. B. L.	14
Life of Cheraman Perumal I	Thudisai-Kizhar	86
Siva Ninda Stuti	Y. Mahalinga Sastri, M. A., B. L.,	99

டாக்டர் உ. வே. சா
நூல் நிலையம்,
-600090.

பிரதிகள் 600,

"ஞானசம்பந்தம்"

7-வது ஆண்டுமலர்

விலை ரூ. 4—0—0]   [தபாற்செலவு இலவசம்

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்வார்களாக.

விலாசம்:—

செயலாளர்
'ஞானசம்பந்தம்' காரியாலயம்.
தருமபுரம், மாயவரம் P. O.
தஞ்சை ஜில்லா.

திருக்கை வழக்கம்

பொழிலில் பல நிறப் பூக்கள் மலர்கின்றன. மணத்தை வீசுகின்றன. பொய்கைகளில் சிவப்பும் வெள்ளையுமாகத் தாமரைகள் பூக்கின்றன. எல்லாப் பூக்களும் விரும்புவது எதனை? தம்மிடமுள்ள இன்பத் தேனை வருத்தாது உண்ணும் வண்டுகளை விரும்புகின்றன. கண்கொட்டாது பார்த்துக் கருத்தில் அடைத்துக் கனிந்த உள்ளத்தால் கவிதைமழை சொரியும் கவிப்புயலின் வரவை நோக்குகின்றன; பறித்துச் சூடி, பதிகளுள்ளத்தை மகிழ்விக்கும் பாவையரை நோக்குகின்றன; நீலமும் சிவப்புமாகி விரும்பிக் கையேற்றுக் கசக்கிப் பிழியும் சிறுவர்களையும் எதிர்நோக்குகின்றன. இவ்வாறு இவ்வுலகத்து நாதன் மக்களின் மனவளர்ச்சிக்கேற்ப இயற்கை இன்பத்தை எய்துவிக்கின்றார்.

இதுபோலச் சித்திதருநாதனும் பத்தி தருநாதனும், பரநாதனும், தென்தருமை வாழ்நாதனுமாகிய, தவஞானச்செல்வர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் தமது திருப்பெயரைத் தாங்கிய ஞானசம்பந்த மலரை உலகினுக்கு அளிக்கின்றார்.

இம்மலர் சுவையறிந்துணரும் புலவரை நோக்குகின்றது; குறும்பு செய்யுங் குருளையரை – விளையாட்டு வெள்ளத்தில் நீந்தும் இளைஞரை நோக்கி நிற்கிறது. பார்த்து மகிழும் பலரையும் பார்க்கிறது; கண்வழியாகக் கருத்திற் புகச்செய்யும் ஓவியப் புலவரை உற்று நோக்குகிறது. ஆதலால் எல்லாக் கலையிலும் சிறந்த தமிழுலகம் தெய்வத் தமிழ் மணஞ் சிறந்த மலரை அன்புடன் ஏற்று இன்புறுமாக.



என்றும் இன்பம் பெருகுக!

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன ஸ்தாபகர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

கவுணியன் கட்டுரை.

ரா. பி. சேதுப்பிள்ளை.

'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பது இந்நாட்டிலே ஒரு பழமொழி. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அழுதது ஓர் அருந்தமிழ்க் குழந்தை. அதன் தந்தையார் திருக்குளத்தில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அம்மையார் குளத்தின் கரையிலே தோன்றினர்; பொற்கிண்ணத்திலே பாலை நிறைத்து அப்பாலனுக்கு ஊட்டினர். அந்தப்பால் குழந்தையின் ஊனப் பசியைத் தீர்த்தது; ஞானப் பசிக்கும் நல் விருந்தாக அமைந்தது.

இவ்வாறு பாலூட்டிய அம்மை யார்? எல்லாவுலகையும் ஈன்ற தாய் அவளே! எல்லாவுயிர்களையும் காத்தருளும் கருணைத்தாய் அவளே! அத்தாயினிடம் ஞானப்பால் குடித்த பிள்ளை 'ஞானசம்பந்தர்' என்று பெயர் பெற்றார். கலைஞானமும், மெய்ஞ்ஞானமும் கைவரப்பெற்றுக் கவிபாடத் தொடங்கினர். அம்மையப்பராக விளங்கும் ஆண்டவனை அகங் குழைந்து பாடினர்.

"போதையார் பொற் கிண்ணத்து
அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன்
கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே"

என்ற திருப் பாட்டில் உமாதேவியார் அமுதூட்டிய கருணையும், அவ் வம்மையாருடன் அமர்ந்தருளும் சிவபெருமானது செம்மையும் திருஞானசம்பந்தரே குறித்துள்ளார்.

ஞானசம்பந்தர் பிறந்தமையால் பெருமையுற்ற ஊர் சீர்காழி ஆகும். வளம் மிகுந்த சோழ நாட்டிலே சிதம்பரத்துக்கு அருகே அமைந்தது சீர்காழி. பழங்காலத்தில் பன்னிரு பெயர்கள்கொண்டு விளங்கிற்று அவ்வூர். பிரமபுரம், வேணுபுரம், தோணிபுரம், கழுமலம் முதலாகிய பன்னிரு பெயர்களாலும் அவ்வூர் தேவாரத்திலே பாடப்பட்டிருக்கின்றது.

இத்தகைய பெருமை சான்ற சீர்காழியில், மறையவர் குலத்தில், கவுணிய கோத்திரத்திலே பிறந்தமையால் திருஞானசம்பந்தர்க்குக் 'கவுணியன்' என்ற பெயரும் வழங்கலாயிற்று. அவரே தம்மைக் கவுணியன் என்று தேவாரக் கவிதையிற் குறித்துள்ளார்.

"மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை"

என்பது அவர் திருவாக்கு. கவுணியன் கட்டுரையாகிய தேவாரத்தால் வேத நெறி தழைத்தது. சைவ நெறி விளங்கிற்று. பக்தி வெள்ளம் தமிழ்நாடெங்கும் பரந்து பாய்ந்தது.

இக் கவிஞரது திருவாக்கு அருள்வாக்கு. ஆதலால் எல்லாவகைச்சுவையும் இவர் கவிதையில் உண்டு. அவற்றுள்ளே தலைசிறந்து நிற்பது பக்திச்சுவை. ஆண்டவனுடைய அளப்பருங் கருணையை அவர் வியந்து பாடும்பொழுது கருங்கல் மனமும் கரைந்துருகும். திருவையாற்றிலே கோயில்கொண்ட ஈசனைப் பாடுகின்றார்;

"புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி,
அறிவழிந்திட்டு, ஐமேலுந்தி,
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமரும் கோயில்"

என்ற பாட்டில் அமைந்த பக்திச்சுவை நம் உள்ளத்தை அள்ளுகின்றதன்றோ? படுக்கையிலே கிடக்கின்றான் ஒருவன். நோய் முற்றி விட்டது. மருத்துவரெல்லாம் கைவிட்டார். பொறிகலங்கி, நெறிமயங்கி மூச்சு மேலும் கீழும் வாங்குகின்றது. இப்படிச் சஞ்சலம் கலந்தபோது அஞ்சேல் என்று அருள்செய்ய வல்லன் ஆண்டவன் ஒருவனே. அப்பெருமான்

திருக்கோயில் திருவையாற்றிலே உள்ளது. அங்கே அடியார்கள் ஆனந்தமாக ஆடிப் பாடுகின்றார்கள்; மத்தளம் ஒலிக்கின்றது. மாதர்கள் நடனமாடிக் கொண்டு திருக்கோயிலைச் சுற்றி வருகின்றார்கள். மத்தள ஒலியைக் கேட்ட சில மந்திகள் இடி முழக்கம் என்று எண்ணி மயங்குகின்றன. விரைந்தோடுகின்றன. மரக்கிளைகளில் ஏறி நின்று 'மழை வருமோ' என்று மேலே மேகத்தைப் பார்க்கின்றன. இவ்வியற்கைக் காட்சியை எழுதிக் காட்டுகின்றார் இளங்கவிஞர்;

" வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம் ஏறி
முகில் பார்க்கும் திருவையாறே "

என்று பாடும்பொழுது செஞ்சொல்வின்பம் தேனெனவந்து நம் செவியிற் பாய்கின்றதன்றோ?

இன்னும் காதல் முறையிலே ஆண்டவனை நோக்கித் திருஞானசம்பந்தர் பரிந்து பாடிய பாடல்கள் சிறந்த இன்பம் தருவனவாகும் காதலனாகிய ஈசனை,

" தோடுடைய செவியன் விடையேறி
ஓர் தூ வெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி
என் உள்ளம் கவர் கள்வன் "

என்றுபாடினார். உள்ளங் கவர்ந்த கள்வனைக் காணவும், அவர் திருநாமத்தைக் கேட்கவும் ஆசை கொடுக்கின்றது. இனிய மொழி பேசும் இளங்கிளியையும், அன்பின் சுவையறிந்த அன்னம் அன்றில் முதலிய பறவைகளையும் அழைத்துத் தம் ஆற்றாமையை அறிவிக்கின்றார். சிறையாரும் மடக்கிளியே! இங்கே வா ; உனக்குத் தேனும் பாலும் கலந்து உண்ணத் தருவேன்; உன் திருவாயால் என்னையாளும் ஈசனின் திருநாமத்தை ஒருமுறை பேசாயா என்று பரிந்துகேட்கின்றார். இன்னும் கடற்கரைச் சோலையில் பேடையோடு உலாவும் ஆண் அன்னத்தையும், அன்றில் பறவையையும் அழைத்து அவர் பாடும் பான்மையைப் பாருங்கள்;

" பொன்னம் பூங் கழிக்கானல்
புணர் துணையோ டுடன் வாழும்
அன்னங்காள்! அன்றில்காள்!
அகன்றும் போய் வருவீர்காள்
கன்னவில்தோள் சிறுத்தொண்டன்
கணபதீச்சரம் மேய
இன்னமுதன் இணையடிக்கீழ்
எனது அல்லல் உரையீரே "

என்று காதற்சுவை யறிந்த பறவைகளைக் காதலனிடம் தூது விடுகின்றார்.

இவ்விதம் சிவகதிக்கு வழிகாட்டும் திருஞானசம்பந்தர் கவிதையில் அவரது பிள்ளையுள்ளமும் வெளிப்படுகின்றது. எப்போதும் குரங்கைக் கண்டால் குழந்தைகளுக்குக்கொண்டாட்டமல்லவா? குரங்குக்குப் பேர்போன குற்றாலமலையில் குழந்தைகள் கூடிநின்று "குற்றாலத்துக் குரங்கே; கொப்பைவிட்டு இறங்கே" என்று கொட்டமடிப்பதை இன்றும் காணலாம். திருஞானசம்பந்தர் குற்றாலத்திற்குச் சென்றபோது குரங்குகளைக் கண்டார்; ஒரு வானரம் வாழைத்தோப்பிலே புகுந்தது. வாழைக் குலைகளின் மேலேறி, குட்டிகளோடு இருந்துகொண்டு வாழைப்பழங்களை விழுங்கிய வண்ணமாயிருந்தது. இக் காட்சியை நமக்குக் காட்டுகின்றார் கவிஞர்;

" மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம் "

என்பது அவர் பாட்டு.

கண்ணப்பர் பணிசெய்த காளத்திமலைக்குச் சென்றார் திருஞானசம்பந்தர். அங்கே கொழுத்த கருங்குரங்குகள் குதித்து விளையாடக்கண்டார்.

" கல்லதிர நின்று கருமந்தி
விளையாடும் காளத்தி மலையே "

என்று பாடினார். திருநெல்வேலியில் தாம்பிரபரணியாற்றிலுள்ள பூந்துறையில் நீராடச் சென்றார் பிள்ளைக் கவிஞர். அங்கு நின்ற நெடுஞ்சோலையில் குரங்குகள் கிளைக்குக் கிளை தாவிக்கொண்டிருந்தன. அப்படித் தாவிப் பிடிக்கும்பொழுது அசைந்தாடிய மலர்களி

விருந்துசெந்தேன் சிந்துவதாயிற்று. இவற்றையெல்லாம்கண்ட கவிஞர் ஒரு பாட்டிசைத்தார்.

" கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர
மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வேலியுறை
செல்வர் தாமே ''

என்பது அப்போது எழுந்த பாட்டு. அவர் வாக்கின் சிறப்பினால் பூந்துறை என்பது சிந்துபூந்துறையென வழங்குகின்றது.

குரங்கைக்கண்டு மகிழும் குழந்தைகள் யானையைக் கண்டாலும் விடுவதில்லை. அகலாது அணுகாது அதைத் தொடர்ந்து செல்வர். ஆணும் பெண்ணுமாய்ச் சென்ற இரண்டு யானைகளை ஒரு மலையடிவாரத்திலே கண்டார் திருஞானசம்பந்தர். அவற்றைப் பின்தொடர்ந்தார். ஓங்கி உயர்ந்து நின்ற ஒரு வேங்கை மரத்தை நோக்கிச் சென்றன அவ் யானைகள். அதன் கிளைகளில் கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்த பொன்னிறப் பூக்களைத் துதிக்கையாற் பறித்துத் தலையிலே தாங்கிக்கொண்டு வந்து ஒரு பலாமரத்தடியில் இருந்த ஈசன் பாதங்களில் இட்டு வணங்கி நின்றன. இக்காட்சியை ஒரு இனிய பாட்டிலே அமைத்துக் காட்டுகின்றார் திருஞானசம்பந்தர்.

" பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்திக்
கூந்தற் பிடியும் களிறும் உடன்
வணங்கும் குறும்பலாவே ''

என்று பாடினார். அஃறிணைப் பொருள் என்றும், ஐயறிவுயிர் என்றும் சொல்லப்படுகின்ற யானை முதலிய விலங்குகளும் ஈசனை வணங்கும் இந்நாட்டில், இலங்கு நூல்கற்று ஆறறிவுயிர்களாய் விளங்கும் மானிடர் ஆலயந் தொழுதல் வியப்பாகுமோ? என்று குறிப்பாக உணர்த்துகின்றார் கவிஞர்.

இத்தகைய இனிய சொல்லும் பொருளும் அமைந்த பாடல்களை நாள்தோறும் பாடினார் திருஞானசம்பந்தர். ஈசனது பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்பது அவர் கொள்கை. அவர் பாட்டு தமிழ் நாட்டாரது உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. பாணர் குலத்திலே தோன்றித் தமிழிசை வாணராய் விளங்கிய திருநீலகண்டயாழ்ப்பாணர் என்ற சிவனடியார் திருஞானசம்பந்தருடன் தலந்தோறும் சென்றார். அவர் பாடிய தேவாரத் திருப்பாட்டை யாழில் ஏற்றி இன்னிசை யமுதமாக வழங்கினார். இயற்றமிழ் இனிமையும் இசைத்தமிழினிமையும் நுகர்ந்து தமிழ்நாடு இன்பவாரியில் திளைத்தது. புத்துயிர் பெற்றது. அதனைக் கண்டு ஆனந்தமுற்ற அடியார்களில் ஒருவர் சுந்தரமூர்த்தி. அவர் திருஞானசம்பந்தர் ஆற்றிய தமிழ்த் தொண்டைத் தலைக்கொண்டு போற்றியுள்ளார்;

" நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞான சம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக் கிரங்கும்
தன்மையாளன் ''

என்று பாடினார். தினந்தோறும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தருக்கு, ஈசன் பொன்னாலாகிய தாளத்தைப் பரிசளித்தது பொருத்தம் என்று காட்டுகின்றார் சுந்தரமூர்த்தி. ஈசன் இசைவடிவாயிருக்கின்றான் என்பது திருஞானசம்பந்தர் கருத்து. அப்பெருமான் பண்ணோடு இசை பாடும் அடியார்க்கு மண்ணுலக வாழ்வும் விண்ணுலக வாழ்வும் தருவான் என்று கூறுகின்றார்.

" பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள்
குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் ''

என்பது அவர் பாடிய தேவாரம்.

இவ்வண்ணம் தமிழ்மொழிக்கும் சிவநெறிக்கும் தலைசிறந்த தொண்டாற்றிய திருஞானசம்பந்தர் தமிழ்மாமணியாகவும் சைவ சிகாமணியாகவும் விளங்குகின்றார். அவர் திருமொழிகள் என்றும் தமிழ்நாட்டிலே நின்று நிலவும்; அவர் திருவடிகள் என்றும் சைவவுலகத்தில் நின்று இலங்கும்.

"என்றும் அடியவர் உள்ளத்திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்துதிப்பன நல்ல சங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக் குரியனஒண் கவியைப்
பொன்றும்கவுணியன்சைவ சிகாமணி பொன்னடியே"

என்று போற்றினர் நம்பியாண்டார் நம்பி.



பறவைகளைத் தூது அனுப்பினாள்.

கோவை கிழார்.

தலைவி தனியே இருக்கிறாள். தான் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட தலைவன் ஒரு அலுவலின் நிமித்தம் வேறு நாடு சென்றிருக்கிறான். சென்று நாளாயிற்று. அவன் வரக்கூடுமென்று எதிர்பார்த்தகாலமும் கடந்து விட்டது. எப்போது வருவார் என்று பார்த்துக்கொண்டே நெஞ்சு அழிந்து கொண்டிருக்கிறாள் தலைவி. அவள் படுந்துயரம் சொல்ல ஒண்ணாதது. சாளரத்தின் வழியாக வெளியே பார்க்கிறாள். எதிரே பாதை தெரிகிறது. இப்பாதையின் வழியாகத்தான் காதலன் வரக்கூடும். நெடுந்தூரம் வரைக்கும் பாதையில் எவரும் காணோம். கண்ணெடுத்துப் பார்க்கிறாள்; எதிரே ஒரு கிளி பறந்து வருகிறது. நெஞ்சைச் சிறிது சரிப்படுத்திக்கொள்கின்றாள். இந்தக் கிளி வெகு விரைவாகப் பறக்க முடியுமல்லவா? முன் காலத்தில் பல காதலிகளுக்கு இது துணைபுரியவில்லையா? ஆகையால் இதனை என் காதலன் பால் தூது விடுவோமே என்று மனப்பால் குடித்துக்கொண்டு அதைக் கூப்பிடுகிறாள். அக்கிளியை அழைக்கும்போது அது செய்ய வேண்டிய செயல் பறக்க வேண்டியதாகையால் அதன் சிறகுகளை மேன்மைப்படுத்தி,

சிறையாரும் மடக்கிளியே!

என அழைக்கிறாள். ஆனால் அதனை அழைப்பதற்கு ஒரு ஆசைகாட்டுவதற்காக 'இங்கேவா; உனக்கு உண்பதற்காக முறையாகத் தேனோடு பால் தருகிறேன்' என்று ஆசைச் சொற்களைக் கூறுகின்றாள்.

இங்கேவா தேனொடுபால் முறையாலே உணத்தருவன்

என்று அழைக்கிறாள்.

இதற்குள் கிளியின் குணம் இன்னது என்று அறிந்த தலைவி அதனால் அந்த பயனையே பெறலாம் என்று எண்ணினாள். கிளி பேசக்கூடியது; வெகு இனிமையான குரலால் அது பெயரைச் சொல்லும். ஆகவே எனது அருமந்த தலைவனது திருநாமத்தைச் சொல்லச் செய்யலாம். அவனுடைய வரவு காண நாள் ஆயினும் அவனது நாமமாகிலும் கேட்டு மகிழலாம் என்று எண்ணினாள். அதை மும்முறை இனிய குரலால் கூறினாலும் போதும் என்பது அவளது ஆசை. அதை நிறைவேற்றிக்கொள்ள,

தோணிபுரத்தீசன் துளங்கும் இளம் பிறையாளன்
திருநாமம் எனக்கொருகால் பேசாயே.

என்று வினயமாகக் கூறினாள். தன் தலைவனை நினைக்கையில் அவனது ஊரின் சிறப்பைக் கூறுவது அழகன்றோ! அது கடற்கரையில் உள்ளது. அக்கரையில் தோணித்துறை உண்டு. அதிலே பவளமும் முத்தும் அலைகளால் ஒதுக்கப்படும். அவைகளிலே பவளம் கிளியினுடைய மூக்கைப்போல் உள்ளதல்லவா என்று நினைத்து,

மொய்பவளத்தொடு தரளம்
துறையாரும் கடல் தோணிபுரம்

என்று வருணிக்கிறாள். இவ்வாறு பறந்து வரும் கிளியைத் தலைவி அழைக்கும் பாடலை முழுதும் காண்போம்.

சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத்தொடு தாளம்
துறையாருங் கடற்றோணி புறத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.

இவ்வாறு வந்த கிளி பெயரைமாத்திரம் இனிமையாகக்கூறிப் போய்விட்டது. ஆனால் தலைவிக்கோ அது திருப்திசெய்யவில்லை. தலைவனை யாராவது கூவிக்கொண்டுவர கிடைப்பார்களா என்று எதிர்பார்த்தாள். மீண்டும் சாளரத்தின்வழியே நோக்கினாள். அங்கு ஒரு இளங் குயிலைக் கண்டாள். அது மாமரத்தில் இருந்தது. அம்மரத்தின் பால் நாறும் மலர்கள் பூத்திருந்தன. அவைகளில் இளம் மொக்குகளை அக்குயில் கொத்திக்கொண்டிருந்தது. அதோடு சும்மா இருக்கவில்லை. அழகாக இனிய குரலில் பாடிக்கொண்டுமிருந்தது. அவ்வின்னிசை எல்லாரையும் மகிழச்செய்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட குயில்தான் என்னையும் மகிழ்விக்கும்; என் இச்சையையும் நிறைவேற்றும் என்று எண்ணி அழைக்கிறாள். அப்பகுதி,

பால்நாறும் மலர்ச்சூதப் பல்லவங்கள் அவைகோதி
ஏனோர்க்கும் இனிதாகமொழியும் எழில் இளங்குயிலே!

என்பதாகும்.

அதனை அழைத்து, 'ஓ குயிலே! நீ இருக்கும் அழகான மரச் சோலைபோல மற்றொரு அழகிய பொழில் உண்டு; அப்பொழிலில் எப்போதும் தேன் பொழியும். அப்பொழில் சூழ்ந்திருக்கும் ஊர் ஒன்று இருக்கிறது. அவ்வூரின் பெயர் திருத்தோணிபுரம் என்பது. அங்கே அழகிய கோயிலிலே என் தலைவர் இருக்கின்றார் அவரே அமரர்களுக்கெல்லாம் அரசர். அவரிடம் செல். உனது இனிய குரலால் அவரை அழை. உன்னிடம் வரச் சொல்லி ஒருதடவை கூப்பிடுவாய். இதுவே உன்னிடம் நான் கேட்கும் வேண்டுகோள் என்று பொருள்படும்படி,

தேனாரும் பொழில்புடைசூழ் திருத்தோணிபுரத் தமரர்
கோனாரை என்னிடைக்கே வர ஒருகால் கூவாயே

என்று குயிலினுடைய இயல்புகளை எல்லாம் கூறி இந்த ஒரு சிறிய விண்ணப்பத்தைத் தெரிவிக்கிறாள். தன் இனிய குரலால் அழைத்தால் எப்படிப்பட்ட வன்னெஞ்சனும் நெஞ்சுருகி வருவானல்லவா? அதைக் கருதியே தலைவி குயிலை அழைத்துத் தலைவனிடம் அனுப்புகிறாள்.

தலைவனிடம் குயிலை அனுப்பிப் பயன் இல்லை. தன் வருத்தம் முழுதும் தெரிவிக்கும் தன்மையுள்ள வேறொரு பறவையை அனுப்பினால்தான் காரியம் நிறைவேறும் என்று எண்ணி எது வருமோ என்று சாளரத்தினிடை காத்துக்கொண்டிருக்கிறாள். அங்கே இரண்டு அன்றில் பறவைகள் வந்தன. அவைகளைக் கண்டவுடனே தலைவிக்கு ஒருபுறம் பொறாமை; மற்றொருபுறம் மகிழ்ச்சி. 'இந்த இரண்டும் ஆணும் பெண்ணுமாக விட்டுப் பிரியாமல் இருக்கின்றனவே; எனக்கு ஏன் அந்த இன்பநிலை கிடைக்கவில்லை' என்ற பொறாமையடைந்தாள். மற்றொருபுறம் இப்படிச் சேர்ந்தே வாழும் பறவைகளைத் தூது அனுப்பினால் உடனே அவைகளின் பண்புகளைக் கண்டு தலைவர் இங்கே வர இசைவார் என்று மகிழ்ந்து அவைகளை விளிக்கிறாள். இவ்வாறு அன்றில்களை அழைக்கும்போது அவற்றின் குணங்களை விதந்து கூறுகிறாள்.

அன்றில்காள்! பிரிவுறும்நோய் அறியாதீர் மிகவல்லீர்

என்று கூவி, தன் பிரிவுநோய் காட்டி, 'நீவிர் பிரிவுநோய் அறியாதீர்; ஆகவே நீவிர் மிக வல்லீர்; இச்செயலில் தொழிற்படுவதற்குத் தகுதி வாய்வீர்' என்கிறாள். அவ்வன்றில்கள் வெகு தொலைவிலுள்ளவையல்ல. தலைவியின் வீட்டு முன்றிலில் உள்ள பெண்ணையில்வாழ்கின்றவை எனச் சுட்டிக் காட்டுகிறாள். ஆகவே,



அவைகளை அழைப்பதற்கு அவளுக்கு ஒரு உரிமை உண்டல்லவா?

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ்
முயங்குசிறை அன்றில்காள் !

என்கிருள். அன்றில்களை அழைத்து 'என் தலைவன் திருத்தோணிபுரத்தில் உள்ளான் அவன் அடையாளம் கொன்றை அணிந்த சடை உள்ளதேயாகும்; அவன் ஊரிலே தென்றல் உலாவுகிறது. அது அவனை என்பால் இழுப்பதற்கு ஏதுவாக இருக்கலாம். நானோ இங்குத் தனியாக இருக்கிறேன். அவனை நினைத்து நினைத்து எனக்குப் பயமேற்பட்டிருக்கிறது. அதனை ஒழிப்பதற்கு அவன்தான் தகுதியானவன்; அவனிடம் நீங்கள் சென்று என் துன்பநிலையைக் கூறுவீர்' என்று மிகப் பரிதாபத்துடன் கூறுகிருள்.

தென்றலார் புகுந்துலவும் திருத்தோணி புரத்துறையும்
கொன்றைவார் சடையார்க்கு என் கூர்பயலைக்கூறிரே

என்கிருள். பறவைகளின் குணம் அறிந்து அதனை முகமன் கூறித் தன் குறையைக்கூறி அதனை நிறைவுபடுத்திக்கொள்ளும் பேச்சு எத்தனை பொருத்தமாக இருக்கிறது. அவளுடைய கல்வியின் ஆழம் அளக்க முடியுமோ?

இனி, தன் பயலைப்பற்றிக் கூறுவதற்குப் பூவை (நாகணவாய்ப்புள்) யும் சரியான பறவை என்று அறிந்து அதனையும் விளிக்கிருள். அதனைப்புகழ்ந்து,

நற்பதங்கள் மிக அறிவாய்
நான் உன்னை வேண்டுகின்றேன்

என்கிருள். அப்பறவையும் கிளியைப்போல் அழகாகப் பேசும் அன்றே? அதன் வாயும் 'பொற்பமைந்தவாயலகு' என்று கூறி, பூவை நல்லாய்! எனப் பெரும் மதிப்புதந்து போற்றுகின்ருள். தோணிபுரத்து மறையாளனுக்கு (மறை பேசுகிறவனுக்கு) அவனைப்போலப் பேச்சில் வல்ல நீயே என்பயலைப்பற்றிப்பேச வல்லாய் என்று வேண்டுகிருள்.

தோணிபுரம் என்ற மறுபெயர் கொண்ட கழுமலம் 'கழியுலாம் கடல் கானல்' சூழ்ந்ததல்லவா? அந்தக்கழிகளிலே நாரைகள் மிகுதி உண்டு. அந்நாரை காணத்தக்க அழகுள்ளது; செங்கால் கொண்டது; அதனை,

காண்டகைய செங்கால் ஒண் நாராய்!

என்று கூறுகிருள். உன் தோணிபுரத்திலே ஆண்டகை ஒருவன் உண்டு; அவனிடம் அடிபணிந்து கூறுவாய். பூண் அணிந்த தனங்கள் மெலிந்தன; பொன்னிறத்தின் பசப்பு ஏறிற்று; அவள் இனி என்ன செய்வாள் என்று என் நிலையை அறிவிப்பாய்' என்று கூறுகிருள்.

பின்னும் இரட்டையாய் எப்போதும் வசிக்கும் கபோதகங்களாகிய புருக்களை விளித்துத்தன் நிலைமை அறிவித்துச் சொல்லுகிருள். மேல்நாட்டிலும் புருக்களைத் தம்பதிஅன்பிற்கு எடுத்துக்காட்டாக உரைப்பதுண்டு. அதே கருத்தை இத்தலைவியும் தெரிவிக்கிருள்.

இனிச் சிவந்த கொண்டையுடைய ஆண் சேவலை அழைத்துத் தன்பயலைக் கூறும்படிச் சொல்வதன்றி 'என் பரிசு உரைத்தால் உனக்குப்பழி உண்டோ? ஆகவே நீ மொழிய வேண்டும்' என்று பழி சொல்லி வற்புறுத்துகிருள். கோழி காலந்தவருது கூவும் இயல்புடையது. தவறினல் உலகப்பழிவரும். ஆகவே பழிவாங்காது கடமைசெய்யும் நீ என்பழியை ஏற்கவேண்டாம் என்று கூறுகிருள்.

இனி இளங்குருகை விளித்துத் தன் பசப்பைக் கூறச்சொல்லியும் அன்னங்களை அழைத்துத் திருவடி கூடுமாறு விண்ணப்பித்தும் பாடுகிருள்.

இறுதியாக, அவள் அழைத்தது ஒரு வண்டாகவேண்டும். ஆனல் அவள் அழைத்ததோ முதலில். அதுவும் ஒரு சிறப்பைக்காட்டுகிறது. வண்டு கமலத்தில் தேன்பருகுவதற்குப்

பெடையோடு சேர்ந்து இசைபாடுவது. அதுவே தலைவியைத் தலைவனுடன் சேர்ப்பிக்குந் தகுதிகொண்டது. அதுவே தோணிபுரமாகிய கமலத்தில் ஆண்வண்டாகிய பண்டரங்கரிடம் பெண்வண்டாகிய தலைவியைச் சேர்ப்பிக்க இன்னிசைபாடி இன்பமாகிய தேனைப் பருகுவிப்பது. ஆகவே அதனை அழைத்து அவளுடைய நிலையை ஒருகால் பகரச் சொல்லுகிருள். அவ்வாறு தூதனுப்பி, தோணிபுரத்திலிருக்கும் தலைவனைத் தலைவி அடைவதே இந்தத் தூதின் நோக்கமாகும்.

இந்தத் தூதிலே ஈடுபடக் கேட்கப்பட்ட பறவைகள் பத்து. அளி (வண்டு), குருகு (கொக்கு), வாரணம் (சேவல்), நாரை, கபோதகம் (புறு), அன்னம், அன்றில், குயில், பூவை, கிளி என்பன.

தலைவி கூற்றாகச் சம்பந்தப் பெருமான் கூறிய இத்தூதின் பொருள் அறிந்தார் சிவபோகம் சேர்வர் என்று அவரே கூறுகிருர். இங்கே தலைவி உயிர்; தலைவன் பதி; தூது செல்வோர் பூதாதிதத்துவங்கள்.

உயிர் இந்தபிறப்பிறப்புக்களில் உழன்று திரியும்போது பதியை நோக்கிப் பசப்புற்று வருந்தி, அவனை அடைய விரும்புவதே வீட்டு இச்சை என்னப்படும். அதனைத் தூது என்ற அகப்பொருள் இலக்கணத்தால் சம்பந்தர் தோணிபுரப்பதிகத்தில் விளக்குகிருர். உலக இன்ப உவமானத்தைக்கொண்டு பேரின்பப் பொருள் எய்தும்வகை உலகத்திற்கு அறிவுறுத்துவதே இப்பதிகத்தின்நோக்கம். அதன் பொருளை அம் முறையில் காண்போம்.

சிவபெருமான் பித்தன்

பித்தன் என்பது உலகினரை நோக்க அறிவிழந்தவன் என்றும், இறைவரை நோக்க அருள் வசப்பட்டவன் என்றும் பொருள் தரும். "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்னும் பழமொழியின்படி தாயானவள் தன் குழந்தைமீது வைத்த அன்பு மிகுதியால் அதனிடத்தில் பித்துடையளாகின்ருள். அவ்வாறே இறைவனும் உயிர்களின் மீது வைத்த கருணை மிகுதியால் பித்துடையவராயிருக்கின்ருர். தாயானவள் தன் குழந்தை தன் சொல்வழி வராமல் தன்னை விட்டு விலகிச் சென்று எவ்வளவு தீங்குகள் புரியினும், அதன்மீது வைத்த பாசப்பித்தால் அதன் குற்றங்களைக் கருதாது அதற்கு இதமே செய்ய விரைவது போல். இறைவனும் தமக்கென யாதொரு உருவும் பெயரும் தொழிலும் இல்லாதிருந்தும், உயிர்கள் மீது வைத்த கருணை மேலீட்டினுல், "பால்நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து" அவைகள் ஆணவமல வசப்பட்டுத் துன்புறுவதற்கிரங்கி, பலவகைப்பட்ட உருவமும் பெயரும் தொழிலும் தாங்கி, அவைகளுக்குப் பலவகைப்பட்ட தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து, அவ்வாணவமல வலியை யடக்கித் தமது திருவடியின்பத்தைத் தரவேண்டி இடைவிடாது உபகரித்துக்கொண்டிருக்கிருர். இவ்வாறு அவர் உபகரித்துக் கொண்டிருந்தும் உயிர்கள் அவரை மறந்து ஆணவமல வசப்பட்டு ஐம்புல வேடரோடு கூடி அழிகின்றன. இப்படி உயிர்கள் பலகாலும் தம்மை விட்டு விலகித் தீய நெறியிற்சென்று நரகத்தில் வீழ்வதற்கு இறைவனும் பலகாலும் இரங்கி, அவைகள் செய்யும் நல்வினை தீவினைகளுக் கேற்றவாறு அறக்கருணையும் மறக்கருணையும் புரிந்து இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகுமாறு செய்தருளி, கடைசியாகத் தமது பரமானந்தப் பதமலர் நீழலிற் சேர்த்துக்கொள்ளுகின்ருர். இவ்வாறு இறைவனும் அருள் முந்துறுத்த ஐந்தொழிலியற்றிச் சர்வான்மாக்களுக்கும் உபகரித்தல் மாத்திர மன்றி, தம்மோடு ஒத்துச் சென்று தம் திருவடியின்பத்தைப் பெற முயலும் அடியவர்களுக்குப் பெரும் பித்தராய் எளியரின் எளியராகின்றனர்.

திருஞானசம்பந்தரும் இயற்கையும்.

வித்துவான் வி. சிவக்கொழுந்து.

ஆண்டவன் படைப்புதிறம் உலகம் முழுவதும் பரவிக்கிடக்கிறது. அத்திறம் மலையாகவுயர்ந்து காட்சியளிக்கிறது; கடலாக ஆழ்ந்து காணப்படுகிறது; நிலமாகப் பரந்து நிலவுகிறது; காட்டிலே மரமாகவும் செடியாகவும் கொடியாகவும் கவின்பெற்றுத் துலங்குகிறது. வானிலே விளங்கும் ஞாயிறும் திங்களும் எண்ணற்ற விண்மீன்களும் அவன் படைப்பின் திறமன்றிவேறென்ன? நிலத்திலேகாணப்படும் பல்வகையான தாவரவர்க்கங்கள், விலங்கினங்கள், பறவையிட்டங்கள் முதலியவற்றின் விசித்திரமான ஒழுங்கெல்லாம் இறைவன் கருணையிற்பூத்த இயற்கைத் தோற்றங்களல்லவோ ?

கடவுள் படைப்பில் மக்கள் உயர்ந்தவர்; அவர்களிலும் இறைவன் கருணையை அறிந்து வியந்து அவன் அருட் பெருமையை மக்கட்கு உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்தும் ஞானிகள் மேம்பட்டவர்கள். இம்மேன்மையாளரே உலகமுய்யத்தோன்றும் அவதார புருஷர்கள்; சமயாசாரியர்கள்; அருட்குரவர்கள். இவ்வருளாளர்கள் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றபடி தம் புலமைத்திறத்தால் ஆக்கிய திருமுறைகள், பிரபந்தங்கள் முதலியவற்றை அருட்கொடையாக நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

திருஞானசம்பந்தப் பெருமான் இறைவன் திருவருள்பெற்றவர்; தேவாரம் பாடிய முதல்வர்; நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நாவலர். இப்பெருந்தகையார் அருளிய ஞான ஊற்றாகிய தேவாரப் பதிகங்களிலே இறைவன் படைப்புத் திறமான இயற்கையின் அழகுகள் பல பொங்கி வழிகின்றன. அவற்றில் சிலவற்றை எடுத்துக் கூறுவது இக்கட்டுரை.

கழுத்தலங்காரம்

திருஞானசம்பந்தர் அவதாரம் செய்த திருப்பதி சீகாழி. அப்பதிக்கு அவர் அருளிச் செய்த பதிகங்கள் அறுபத்தெட்டு. இவ்வளவு பதிகங்கள் வேறு எந்தச் சிவாலத்துக்கும் அருளிச்செய்யப்படவில்லை. தமக்கு ஞானம் வழங்கிய பதியல்லவா? ஆகவே அங்கு மிகுதியாகப் பாடலுற்றார்போலும்; சீகாழித் தெருவெல்லாம் மலைபோன்று மாடங்கள் உயர்ந்துள்ளன; அடுத்து மஞ்சு(மேகம்) படிந்த மதில்கள் ஓங்கியுள்ளன; அப்பால் கழுநீரும் கமலமும் பூக்கும் வாவிகளும் உள்ளன; கழை போன்று உயரும் கரும்புகள் வளர்ந்த வயல்களும் வேழத்தின் கைபோல் குலையீனும் வாழை வளரும் தோட்டங்களும் காணப்படுகின்றன.

"வேழக் கைபோல் வாழைக்காய்க்
குலையீனும் கலிக்காழி"

"கழையார் கரும்பு கண்வளர்
சோலைக் கலிக்காழி"

"மலையார் மாடம் நீடுயர் இஞ்சி மஞ்சாரும்
கலையார் மதியம் சேர்தரும் அந்தண் கலிக்காழி"

அப்பால், பாக்குமரச் சோலையுளது. ஓங்கித் தழைத்த பாக்குமரத்தைக் கண்ணுற்றால் புலவர்களுக்குப் பெண்களின் கழுத்து கருத்தில் தோன்றுதல் இயல்பு. காரணம் ஒப்புமை. கமுக மரத்தின் பட்டைகள் பொதிந்தபசுமைக் கழுத்து, மணிகள் பூணும் பாவையர் கழுத்துக்கு உவமையாகும்.

"எல்லிப் பணி புனைந்து
வல்லிக் கமுகை வென்ற—கழுத்தினாள்"

என்பர் குற்றாலக் குறவஞ்சி யாசிரியர்.

ஒரு பாக்குமரம்; உச்சியில் வெண்மையாய் அரும்பியிருக்கிறது. அதன் கீழே பசுமையான காய்கள் கொத்தாகத் தொங்குகின்றன. அதனடியில் செம்மையான பழங்கள் குலையாகப் பழுத்துள்ளன. நமது அருட்புலவரான ஞானசம்பந்தப் பெருந்தகை இவ்வருமையான காட்சியைக் கண்டார். மங்கையர் கழுத்தும் கழுத்தின் முத்துமணிகளும் மரகதக்(பச்சை)கல்பதித்த மாலைகளும் பவளச் சரங்களும் கருத்தில் தோன்றின.

"எண்ணார் முத்தம் ஈன்று மரகதம்போற் காய்த்து
கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழி"

என்று காழிநகரையும் கமுக மரத்தையும் பாடினார். அம்மையப்பர் அருள் ஞானம் வழங்கிய பதியைச் சம்பந்தர் புகழும் முறை படிக்கப் படிக்க இன்பந் தருவதாயுள்ளது.

சிறுமியர் குடித்தனம்.

விருத்தாசலத்தின் தமிழ்ப்பெயர் திருமுதுகுன்றம் என்பது. ஆங்கு மணிமுத்தாநதி பாய்கிறது. மணியும் முத்தும் கொழித்ததால் அப்பெயர் பெற்றது அந்நதி. குன்றம் அடுத்த ஊர் ஆதலின் ஞானசம்பந்தர் காலத்தே அங்குக் குறவர்கள் மிகுதி. குறவர் குலச்சிறுமியர் சிற்றில் இழைத்து விளையாடுகின்றார்கள்; சிறுசோறு சமைத்துக் குடித்தனம் செய்யத் தொடங்குகின்றார்கள்; ஆற்றில் திரண்டுவரும் மணியையும் முத்தையும் முறத்தில் வாரிக் கொழித்து மணியை விலக்கி முத்தை உலையில் இடுகின்றார்கள்; முத்து சோறாகிறது. இச்சிறுமியரின் குடித்தனம் கூறும் சம்பந்தர் தேவாரப்பகுதி வருமாறு:

'திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே''

அரசுபுரி அன்னம்.

ஒரு அரச சபையை மனத்தில் நினைத்துக் கொள்வோம்; சபையில் என்னென்ன காணப்படும்? சிம்மாசனம் இடப்பட்டிருக்கும்; அரசன் விளக்கமாக அவ்வாசனத்தில் வீற்றிருப்பான்; ஆசனத்துக்குமேலே குடைவிளங்கும்; பக்கத்தில் நின்று பணியாளர் கவரிவீசுவர். இந்த அரசவைக் கோலத்தைத் திருவீழிமிழலை என்னும் திருப்பதியில் உள்ள தாமரைத் தடாகத்திலே நமக்குத் திருஞானசம்பந்தர் காட்டுகிறார்.

குளத்திலே தாமரை மலர்ந்திருக்கிறது; பூவுக்குமேலே இலை உயர்ந்து விளங்குகிறது. குளத்தைச் சூழ்ந்துள்ள வயல்களில் செந்நெற் பயிர்கள் முதிர்ந்து காற்றில் அசைகின்றன; பயிர்கள் சாமரைபோன்று வீச இலையாகிய குடையின்கீழ் தாமரைமலராகிய ஆதனத்தில் இளமையான அன்னம் சென்று வீற்றிருக்கின்றது. அன்னந்தான் அரசன். இனி, அன்னம் அரசுபுரியும் அழகைப் பாட்டிலே பார்ப்போம்;

'' செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச் சாமரை யிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே.''

நடனக்காட்சி.

கார்காலம்; மேகக்கூட்டம் இடியோசையுடன் வானத்தில் செல்கிறது; அதைப் பார்த்த மயில்களுக்குக் கொண்டாட்டம்; தமது பசுந்தோகையை விரித்து ஒய்யாரமாக ஆடுகின்றன; அப்பால் குளத்திலே காந்தள் மலர்கள் மலர்ந்துள்ளன. கரையிலே கொன்றை மரம் மலர்ந்து பொன்போன்ற பூக்களைச் சொரிகின்றது; மலருள்ளவிடத்தில் வண்டுகளை விருந்துசொல்லி அழைக்கவேண்டுமா? எங்கும் வண்டுகளின் ரீங்காரம். இந்த அருமையான இயற்கைக் காட்சியையும் ஓசையையும் ஒழுங்குபடுத்தித் திருஞானசம்பந்தர் ஓர் நடனசாலையாக்குகின்றார். மயில்கள் நடனமாதராகவும், மேகம் மத்தளக்காரராகவும், வண்டுகள் பாடகராகவும் உருவகமாகின்றன.

'' வரைசேரும் முகில்முழவ
மயில்கள் பல நடமாட வண்டுபாட ''

நடனசாலையில் பார்வையாளரும் உண்டு; அவர்கள் கண்குளிர ஆட்டத்தைப் பார்த்துவிட்டுச் சும்மாவிருப்பார்களா? பொற்காசு தருகின்றார்கள். கொன்றை மரங்களாகிய பார்வையாளர் தரும் மலராகிய பொற்காசை, மயில்கள் சார்பில் நின்று கை ஏந்திப் பெறுவதாகக் கீழேயுள்ள காந்தள் மலரைக் கற்பனை செய்து காட்டுகின்றார் திருஞானசம்பந்தப் பெருமான்.

'' விரைசேர் பொன் இதழிதர
மென்காந்தள் கையேற்கும் மிழலையாமே''

இத்தகைய நற்காட்சியைக் கண்ட ஆளுடையபிள்ளையார் இக்காட்சிப் பொருள்களுக்கு உயிர்ப்பாயிருக்கும் சிவபரம் பொருளினது எங்குமாய் — எல்லாமாகிய தன்மையை முதல் இரண்டடிகளில் வியந்துள்ளாராதலின் பாட்டு முழுவதையும் ஒருமுறை காண்போமாக.

'' உரைசேரும் எண்பத்து நான்குநா(று)
ஆயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்(து)அவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும மிழலையாமே. ''

தலையான மனிதர்.

வித்துவான். க. வெள்ளைவாரணம்.

தம்மைச் சார்ந்துள்ளவர்களின் விருப்பத்தினையும் முயற்சியினையும் நன்குணர்ந்து, தம்மால் பிறரெவர்க்கும் ஒரு சிறு துன்பமும் ஏற்படாதபடி நடந்துகொள்ளுதலே மக்கட் பண்பு எனப்படும். 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்' (கலித்தொகை கஉஉ) என ஆசிரியர் நல்லந்துவனார் கூறுகின்றார். மக்கட் பண்பு என்று சொல்லப்படுவது தம்மைச் சூழ்ந்து வாழும் எல்லா மக்களின் இயல்பினையும் அறிந்தொழுகுதலாம் என்பது மேற்காட்டிய தொடரின் பொருளாகும். இத்தகைய பண்புடையவர்களே மனிதர் என்று மதிக்கத்தகுஞ் சிறப்புடையவராவர். தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பண்புடைய பெரியார் சிலர் இவ்வுலகத்தில் இருத்தலால்தான் இவ்வுலகம் அழியாது நிலைபெறுவதாயிற்று என்றான் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி யென்னும் பாண்டியன். மக்கட் பண்புடைய பெரியார் சிலர் காலந்தோறும் உலகத்தில் வாழ்ந்துவருதலால்தான் இவ்வுலகியல் நடைபெற்றுவருகின்றது; இல்லையேல் மண்ணோடு மண்ணாய்ச் சிதைந்தொழியும் என்றார் திருவள்ளுவர். இவர்கள் வாய்மொழிக்கு இலக்கியமாக மக்கட் சமுதாயத்துள் தலைசிறந்து விளங்குபவர்களே தலையான மனிதர் எனப் போற்றப்பெறுபவராவர். இப்பெரியோர்களின் இயல்பினையும் கடமையினையும் தமிழறிஞர்கள் காலந்தோறும் நன்கு அறிவுறுத்திவந்துள்ளார்கள்.

ஐம்பொறிகளால் நுகரும் பொறியுணர்வு மட்டுமேயுடைய விலங்குகளினின்றும் மக்களை வேறு பிரித்து உயர்த்துவது கல்வி கேள்விகளால் உளதாகிய நல்லறிவேயாகும். ஒருவர் எல்லாக் கலைகளையும் தமது வாழ்நாளில் முற்றக்கற்றல் இயலாத தொன்றாம். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணிபல' ஆதலின் தன் வாழ்க்கையில் இன்றியமையாது கற்றற்குரியன இவையென ஆராய்ந்து நற்பொருள்களைக் கற்றல்வேண்டும் என அறிஞர் அறிவுறுத்துவாராயினர். எத்துணைக் கற்றவராயினும் 'யாம் அறிவினாற் குறையுடையேமல்லோம்' எனத் தம்மைத்தாமே வியந்தொழுகுதல் அறியாமையின்பாற் பட்டதே என்பதனை,

> "வெண்மை யெனப்படுவ தியாதெனின் ஒண்மை
> உடையம்யாம் என்னும் செருக்கு"

என்ற குறளால் தெய்வப்புலவர் அறிவுறுத்துகின்றார். இத்தகைய செருக்கினை மேற்கொண்டு தமக்கும் பிறர்க்கும் தீங்கினைத் தேடித்தரும் புல்லறிவு மக்கள் வாழ்க்கையில் என்றும் காணப்பட்டுவரும் நோயாகும். அறியாமையென்னும் இத் தீரா நோயினைத் தீர்த்தற்குரிய வழியினைத் தமிழ் முன்னோர் பலர் ஆராய்ந்து கண்டுள்ளார்கள். அவர்கள் கண்டுணர்த்திய நன்னெறியில் ஒழுகுதலே நமது கடமையாகும். மக்கள் ஒவ்வொருவரும் அறிவினால் குறைபாடுடையராதலையும், எல்லாருள்ளத்திலும் நீக்கமற நிறைந்து அறிவினை வழங்குந் திருவருளாற்றல் ஒன்று உண்டென்பதனையும், மாசற்ற பேரறிவே அதன்வடிவென்பதனையும், அம் முழுமுதற் பொருளின் உதவியினாலேயே தம்மைப்போன்ற உயிர்கள் யாவும் அறிவினைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதனையும் உலகத்தார் தம்முடைய வாழ்க்கை அநுபவங்களால் படிப்படியாக உணரத்தலைப்பட்டார்கள். விழைவு அறிவு செயல் என்னும் மூவகை ஆற்றல்களினாலும் குறைவுடைய மக்கட் கூட்டத்தார் தம் குறைகளைக் காலந்தோறும் படிப்படியாக உணர்ந்துகொள்ளுதற்கும் ஒரு பேரறிவு துணைசெய்து வருகின்றது என்பதை நாம் மறத்தலாகாது.

இங்ஙனம் காலந்தோறும் நம் குறைகளை உள் நின்று புலப்படுத்தி நம்மனோர்க்கு நல்லுணர்வு வழங்கும் முழுமுதற் பொருளையே நம் தமிழ் முன்னோர் கடவுள், இறைவனென்னும் பெயர்களாற் குறித்துப் போற்றுவாராயினர். உலக வரலாற்றில் கடவுள் உணர்ச்சி இன்ன காலத்தில் தோன்றியதென வரையறுத்தலியலாது. அவ்வுணர்ச்சி தோன்றாத இருட்காலமும் ஒன்றுண்டு எனக் கருதுதல் பொருத்தமே.

> "தேசம் உமை அறிவதற்கு முன்னோபின்னோ
> திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

எனவரும் ஆளுடைய அரசர் வாய்மொழி அத்தகைய இருட்காலமொன்று உண்டென்பதைப் புலப்படுத்துவதாகும்.

தொன்றுதொட்டே உயிர்க்குயிராய் உள் நின்றுணர்த்தியும் எல்லாப் பொருள்களிலும் நீக்கமறக் கலந்தும் அவற்றுளொன்றிலும் தோயாது அப்பாற்பட்டுக் கடந்துநின்று உலகினை யியக்கியருளுவது பேரறிவுப் பொருளாகிய முழுமுதற் கடவுளாம். அப் பெருமானின் உண்மையுணர்ந்து தெளிந்த மக்கள், தம் விருப்பம் அறிவு செயல் இவற்றின் வளர்ச்சிக்கு அவ்விறைவனது திருவருட்டுணையினையே வேண்டிநின்று, பிறவுயிர்களின் வாழ்க்கையிற் குறுக்கிடாது ஒழுகுதலே கடவுள் வழிபாடாகும். உயிரினும் சிறந்த ஒழுக்க நெறியே இவ்வழிபாட்டு முறையாகும். இதன்கண் நிலை பெற்றுநின்றோர் இவ்வுலகியலின்பங்கள் எல்லாவற்றையும் பெற்று நீடுவாழ்வார். "பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க, நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்னும் பொதுமறை ஈண்டு உணர்தற்குரியதாம். உலகத்துப் பல கலைத்திறங்களையும் கற்றலால் வரும் பயன் கலைக்கெல்லாம் பொருளாகி நின்ற இப்பேரறிவு வழிபாட்டினை மேற்கொள்ளுதலொன்றேயாகும். எல்லார்க்கும் மனச்சான்றாய்நின்று இறைவன் அறிவுறுத்தும் நல்வழியினைப் பின்பற்றி நடக்க விரும்பாது தாம் நினைத்தபடியே நடப்பவர்கள் எத்துணை அறிவு நுட்பம் வாய்ந்தவராயினும் தன் நலத்தினையே விரும்பி பிறர் நலங்களை மறந்து தமக்கும் பிறர்க்கும் கேடு சூழ்பவராவர். அதனால் அவர் கற்றன யாவும் ஒரு சிறிதும் பயன்படாதொழியுமே எனத் தெய்வப் புலவர் இரங்குகின்றார். "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்" என்ற குறட்பா இவ்விரக்கத்தினால் எழுந்ததே. வாலறிவு என்னுந் தொடர் தூய மெய்யுணர்வைக் குறிக்கும். மெய்யுணர்வே இறைவனது நிலைக்களம் என்பார், அப்பெருமானை வாலறிவன் என வழுத்தினர். ஞானத்திரளாய் நின்ற கடவுளை அறிவினால் வழிபடுதலே நிலைத்த வழிபாடாகும்.

> "ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
> ஞானத்தாய் உனை நானுந் தொழுவனே"

எனத் திருநாவுக்கரசடிகளார் இவ் வழிபாட்டின் உயர்வினைத் தெளிவித்தல் அறிக.

தமக்கு நல்லறிவு சுரக்கும்பேரறிவுப் பொருளாகிய இறைவனை வணங்கித் தம்மையுணர்ந்த பெரியோர்கள், தம்மைச் சார்ந்துள்ள ஏனையமக்களையும் தம்மைப்போல அவ்விறைவனது பாதுகாப்புக்கு உரியவர்கள் என்று கருதும் விரிந்த நல்லறிவுடையவராய் விளங்குவார்கள். தம்முடைய செயல் முயற்சிகளால் உலகப் பொதுவாழ்வில் எவ்வகையிடையூறும் நேராதபடி தம்மைக்காத்து ஒழுங்கான கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடப்பார்கள். பிறர் யாரையும் அருவருப்பாகக் கருதி வேற்றுமை பாராட்டமாட்டார்கள். நிறவேற்றுமை கருத்து வேற்றுமை முதலியவற்றால் பகைமை கொள்ளமாட்டார்கள். தம்மால் வழிபடப் பெறும் ஆண்டவனது திருவுள்ளத்திற்குத் தம்மைப் போலவே பிறரும் முற்றுரிமையுடையார்கள் என்பதனைத் தெளியவுணர்ந்துகொள்ளுந் திறம் அவர்களது சிறப்பியல்பாகும். உலகிற் பொய்யாகப் புனைந்து கொள்ளப்பட்ட ஒருபோதும் இடங்கொடுப்பதில்லை. தளர்வில்லாத உள்ளமுடைய அவர்கள், ஐயத்தினாலும் அருவருப்பினாலும் மக்களை வேறுபடுத்தி

இகழ்வதில்லை. அறிவின்பயனும் அருள் நிரம்பிய அவர்களது நல்லமனம், இவ்வுலகில் உயிர்கள் அடையுந் துன்பத்தினை யிடைவிடாது எண்ணி யெண்ணி யுருகுவதாகும். நெக்கு நெக்கு நினையும் அவர்தம் நெஞ்சத்தின் இயல்பினைப் பிறர் துன்பங்கண்டு அவர்தம் கண்களிலிருந்து வழியும் கண்ணீரே புறத்தார்க்குப் புலப்படுத்தும். 'நிறையுடையார் இடர்களையாய்' எனப் பிறர்துயர்க்கிரங்கி அப்பெரியோர் இறைவனைவேண்டி அழுது சொரியுங் கண்ணீர், ஆண்டவனுக்கு அவர்கள் ஆட்டும் திருமஞ்சன நீராகும். இங்ஙனம் வேற்றுமையின்றி எல்லாவுயிர்களிடத்திலும் பேரன்பு கொண்டு உலக அமைதி வேண்டி முழுமுதற் பொருளை யிறைஞ்சும் இயல்புடையோரே **'மனிதரில் தலையான மனிதர்'** எனப் போற்றத் தகும் சீர்த்தியுடையோராவர்.

இத்தகைய அருட்செல்வர்களின் திருத்தொண்டுகளும் வாய்மொழிகளும் நம்மனோர் உள்ளத்தைத் திருத்தித் தூய்மை செய்வனவாம். நம் தமிழ்நாட்டில் ஆயிரத்திருநூறு ஆண்டுகளின் முன்தோன்றிய தலையாய மனிதர் ஆளுடைய அரசரே யென்பதனைத் தமிழகம் நன்குணரும். அக்காலத்தே மக்களனைவரும் வேற்றுமையின்றி ஒருங்கிருந்துவழிபடும் தமிழர் கடவுள் வழிபாட்டுமுறை மாறியதனால் தமிழ்வேந்தர் மூவரும் தத்தம் வலிகுறைந்து அரசியலாட்சியில் தளர்ச்சியடைவாராயினர். மக்கள் உள்ளத்திற்கு உறுதியளிக்கும் கடவுட்கொள்கை சிறிது சிறிதாக நெகிழவே தமிழ்மக்களின் அறிவும் வீரமும் தொழிலாற்றலும் சிதைந்தொழிந்தன. சுருங்கக் கூறின் தமிழ் நாகரிகமே மறைந்துபோயிற்று என்ற இழிநிலை யுண்டாயிற்று. தமிழ்வேந்தர் ஆட்சியிழந்தனர். அயல் வேந்தர் தமிழகத்தை யடிப்படுத்தினர். அதனால் தமிழ்மக்கள் அச்சம் மீதூர்ந்த அடிமை வாழ்வு வாழ்ந்துவந்தனர். இத்தகைய அல்லற்காலத்தே தமிழ்நாட்டில் தோன்றிப் பலவகையிடையூறுகளிலும் செம்மேனிப் பேராளனாகிய சிவபெருமானுடைய திருவடிகளைத் தளர்வின்றிப் பற்றிநின்று, தமிழ் மக்கள் அனைவரையும் ஒருநெறிப் படுத்தி உய்வித்தருளிய உரவோர், தமிழரசராகிய திருநாவுக்கரசராவார். அப் பெருந்தகையார் அருளிய 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னுந் திருமொழி, இவ்விந்தியப் பெருநிலப் பரப்பிலும் இலங்கை, பர்மா, சாவகம் முதலாகக் கடல் கடந்து செல்லுதற்குரிய பிறநாடுகளிலும் தமிழர் வீரத்தினைப் புலப்படுத்தி அரசுசெலுத்திய முதலாம் இராசராசசோழன் அவன் மகன் இராசேந்திரனாகிய கங்கை கொண்ட சோழன் முதலிய தமிழ்ப் பெருவேந்தர்களைத் தோற்றுவித்துப் பணிகொண்டது. இங்ஙனம் தம் வழிபாட்டின் திறத்தால் பிற்காலத்தே தமிழர் ஆட்சியினை நிலைபெறச் செய்தருளிய திருநாவுக்கரசடிகள், 'தலையான மனிதர்' எனப் போற்றுதற்குரிய பெரியோரின் இயல்பினை ஓர் அழகிய திருக்குறுந்தொகைச் செய்யுளால் இனிது விளக்கியருள்கின்றார். அத்திருப் பாடல்,

> அனுசயப்பட் டதுவிது என்னாதே
> கனிமனத்தொடு கண்களும் நீர்மல்கிப்
> புனிதனைப் பூவணூரனைப் போற்றுவார்
> மனிதரில் தலையான மனிதரே.

என்பதாகும்.

வாழ்க்கையிலே காணப்படும் போலி வேறுபாடுகளை மனத்துட்கொண்டு பிறப்பினால் ஒத்த மக்களிடையே உயர்வு தாழ்வு பேசி ஏனையோரை அருவருத்து வெறுத்தல் கூடாதெனவுணர்ந்து பெரியோர் அவ்விழி செயலை விலக்கியொழுகுவர் என்பார், 'அனுசயப்பட்டு அது இது என்னாது' என்றார். அனுசயப்படுதல்—பிறரைக் கண்டு அவர் தம் குணஞ்செயல்களைத் தகாதன எனக்கொண்டு அருவருத்து வெறுத்து விலகுதல். அது இது என்றல்—அஃது உயர்ந்தது இது தாழ்ந்தது எனக் கூறி வேற்றுமை பாராட்டுதல். இதனால் இவ்விரு செயல்களும் உயர்ந்தோர்க்குரியன அல்ல என விலக்கியது காண்க. இவ்வாறு அருவருப்பின்றி யொழுகும் பெரியோரது நெஞ்சம் உலக மக்களின் துயரங்களை யெண்ணித் தானே கனியும் இயல்புடையது என்பதும், அவ்வுள்ளத்தின் கனிவு, அன்புடையார்

அடையுந் துன்பத்தினைப் புலப்படுத்தும் கண்ணீரைத் தோற்றுவிப்பதென்பதும் புலப் படுத்துவார், 'கனிமனத்தொடு கண்களும் நீர் மல்கி' என்றார். இவ்வுண்மை 'கவியேன் மானுட வாழ்க்கை யொன்றாகக் கருதிடிற் கண்கள் நீர்பில்கும்' எனவரும் நம்பியாரூரர் அநுபவ வாய்மொழியால் நன்கு புலனாகும். பிறர் துயர்க்கிரங்கிக் கண்ணீர்விட்டுக் கசியும் நெஞ்சினராகிய சான்றோர்கள், பிறர் துய ரத்தினை நீக்குதல் கருதி இடைவிடாது இறைவனைப் போற்றிச் செய்தற்குரிய பணி களைத் திருந்தச்செய்து உலகிற்கு நலஞ் செய்வ ரென்பார் 'கனிமனத்தொடு கண்களும் நீர் மல்கிப் புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்' என்றார். பூவனூர் என்றது சோழநாட்டுச் சிவதலங்களுள் ஒன்று. அங்குக் கோயில் கொண் டெழுந்தருளினமை நினைந்து இறை வனைப் பூவனூரன் எனப் போற்றினர். தன் நலங்கருதாது பிறவுயிர்களின் துன்பநீக் கத்தைக் குறிக்கொண்டு கடவுளை வழிபடு வோரே அறிவாற் சிறந்த தலைமக்கள் ஆவர் என்பார், 'பூவனூரனைப் போற்றுவார் மனிதரில் தலையான மனிதரே' என அவர்தம் சீர்த்தியினைப் போற்றிப் பரவினர்.

தலையாய மனிதரின் இயல்பினையும் திருத் தொண்டினையும் தெளிவாக அறிவுறுத்திய இச் செந்தமிழ்ப்பாடல் படிப்போருளத்தைத் திருத்திப் பணிகொள்ளும் நீர்மையதாம். சமூகத்துறையிலும் பொருளாதாரத் துறை யிலும் அரசியல் கிளர்ச்சிகளிலும் உயர்வு தாழ்வுடையராய் ஒற்றுமையின்றிப் பல வேறு கட்சியினராக இக்காலத்தில் தமிழ் மக்கள் சிதர்ந்துள்ளார்கள். பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் உடையராய்த் தாழ்ந்த தமிழகத்தை மீண்டும் உயர்நிலைக்குக் கொண ரப் பாடுபடும் நல்லறிஞர்கள், திருநாவுக்கரசர் போன்ற பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் அறிவுறுத்தருளிய செந்நெறியினைப்பின்பற்றி யொழுகுதல்வேண்டும்.

தலையான மனிதர்களின் சால்பினை விளக்கும் இத் திருக்குறுந்தொகையானது, தமிழர்களிடையேயுள்ள பொருந்தா வேறு பாடுகளை நீக்கி 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் ஒருமையுணர்வுடன் எதிர்காலத் தமிழக ஆட்சிக்குரிய செயல் முறைகளை விரைந்து மேற்கொள்ளுதற்குரிய சார்பினையும் உணர்வாற்றலையும் நம்மனோர்க்கு வழங்கும் இயல்புடையதாகும். இவ்வாறு உலகமக்கள் நன்னெறி யொழுகி இன்புறு தற்குரிய அரிய கருத்துக்களை இனிய தமிழ்ப் பாடல்களால் வழங்கியருளிய திருநாவுக்கரசர் போன்ற செம்புலச் செல்வர்களைத் தமிழ் நாடு தக்காங்குப் போற்றிப் பயன்பெறுவ தாகுக.

வேலை காலியில்லை.

வித்துவான், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M. A , B. L.

இளம்வயதுப் பிள்ளைகளுக்கு, அதிலும், கல்லூரி மாணாக்கர்களுக்கு வேடிக்கை, ஆடல், பாடல் என்றால் நிரம்பப்பிடிக்கும். நாடகக் காட்சிகள், நடிகர்கள், நடிப்பின் ஏற்றத்தாழ்வுகள் இவைகளைப் பற்றியே பேசிப் பொழுதுபோக்குவதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். வீட்டில் சொல்லாமலே நாடகம் பார்க்க நழுவிவிடுவார்கள். இரவில் உறக்கம் கெட்டுக் கண்விழித்தால் உடம்புக்கு ஆகாது என்று பெற்றோர் கண்டிப்பதுண்டு. நாடகங்களிற் புத்தியைச் செலுத்தினால் படிப்பு கெட்டுவிடும் என்று பெரியோர் திட்டுவார்கள். அதனால், இரவில் படுக்கையை விரித்துத் தலையணைமேல் ஒரு செம்பைக்கவிழ்த்துத் துணிபோட்டு மூடிவிட்டு நாடகப் பிரைக்குக் கம்பியை நீட்டும் தம்பிமார்கள் பலர் இருக்கின்றார்கள். படிப்பை நிறுத்திவிட்டு நாடகத்திற் சேர்ந்துவிட நாவூறும் நவீன யுவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இப்பொழுது நாடகத்திற்குப் பதிலாகப் பேசும்படம் வந்திருக்கிறது. அதிற் சேர்ந்து நடிக்க விரும்பாத இளம் பிள்ளைகள் குறைவுதான். ஆனால் அவர்களைச் சேர்த்துக் கொள்வோர் தான் இல்லை. முகவெட்டுப் போதாது; குரலினிமை இல்லை; நடிப்புத்திறன் காணாது; வேலை காலி இல்லை என்று மனம் முறியக் கழிக்கப்படுவார்கள். எங்குப்போனாலும் தான் 'வேலை காலியில்லை' என்று ஒரு அட்டை தொங்கிக்கொண்டிருக்கிறது.

அப்பரடிகளுக்கும் இத்தகைய நெருக்கடி ஒருகால் ஏற்பட்டது. அவருக்குக்கூட நாடகம் என்றால் மிகவும் பிடிக்கும். எந்தவிதமாவது ஒரு நல்ல நாடக சபையிற் சேர்ந்துவிட வேண்டும் என்று எண்ணினர். நடிப்புக்கு இடம் இல்லாது போயினும் வேறு ஏதாவது ஒரு வேலையை அங்குச் செய்து கொண்டு நாடகத்தைக் கண்டு களித்துக் கொண்டிருக்கலாம் என்று அவருக்குத் தோன்றியது. அற்காக ஒரு பெரிய கலைமலி கூத்துக் கூட்டம் ஒன்றை நெருங்கினர். அதற்குத் 'திருச்சிற்றம்பலத் தாண்டவமூர்த்தி ஆனந்த நடனசபை' என்று பெயர். அந்த சபையின் தலைவர் கூத்தன் என்பவர் மிகவும் நல்லவர். நடராஜன், நடனசபேசன், ஆடலரசன், அற்புதக்கூத்தன், ஆனந்தக் கூத்தன் என்ற விருதுகள் பல பெற்றவர். அவர்பொன்னம்பலப் பொதுவில்நடம்புரிகின்ற பொற்பினை அப்பர் கண்டார். அவ்வாடல்புரிகோலத்தைக் குழைந்து நோக்கினர். கூத்தன் தனது பவழம்போல் மேனியிற் பால் வெண்ணீறு பூசிப் பனித்தசடை விரித்துத் திசை முகம் அலம்பக் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்புடன் புருவம் குனித்து அரும்புமலர்ப்பாதம் இனிதெடுத்து ஆடுவதை அகம் உருகித் தொழுதார். அவரது ஆட்டத்திலே மனதைப் பறிகொடுத்த அப்பர் மற்ற வேலைகளையெல்லாம் மறந்தார். அவ் ஆட்டக்காரர் பின்னாலேயே தேட்டமாய் அலைந்தார். நடனசபையில் தன்னையும் சேர்த்துக் கொள்வார்கள் என்று நினைத்தார். அழைப்பார் ஒருவரும் அங்கில்லை. தனக்கும்ஆடத்தெரியும், நடனக்காரருக்கு ஆவன எல்லாம் செய்யத் தெரியும், பக்க உதவியோ, குற்றேவலோ எதுவும்புரியலாம், ஏன்? தனக்கு அவர்கள் வேலை கொடுக்கலாகாது என்று எண்ணினர்.

நடராஜர் தமது சபையினருடன் திருவாரூர் வந்து தங்கினர். அங்கும் விடாது தொடர்ந்து சென்றார் அப்பர் அடிகள். தக்க சமயம்பார்த்து ஒரு விண்ணப்பத்தையும் நீட்டினர். எதற்கு? நாடகசபையில் ஏதாவது ஒருவேலை வேண்டும் என்று. எதற்கும் வேலை காலியில்லை என்று எழுதிய அட்டை தொங்க விடப்பட்டது. அதைக்



கண்டு திகைத்துப்போன திருநாவுக்கரசர் நடராஜனையே நேரிற் கண்டு கேட்கத்தொடங்கினர்.

"ஐயனே! நானும் ஆடவேண்டும் என்று கேட்கவில்லை; உன்னுடன் போட்டியிட ஓங்காரியாலும் முடியாது என்பது எனக்குத் தெரியும். மற்ற வேலை ஏதாவது கொடுத்தால் நான் திறம்படச் செய்து உண்மையாய் உழைப்பேன், நீ ஆடலரசன், நடராஜன்; உன்னை மிஞ்சியாட ஒருவராலும் முடியாது. நீ ஆடும்பொழுது தூபம்போடவேண்டாமா? ஓமகுண்டத்தில் நெய் பொழியும் வேலையையாவது எனக்குக் கொடு என்னைவிடச் சிறப்பாக வேறு யார் அதனைச் செய்யமுடியும்? "

"அதற்கும் வேலை காலியில்லை. உன்னைவிட மிகச்சிறந்த நான்மறையோர்கள் நான் நான் என்று ஏறட்டு நிற்கின்ருர்கள்"

"பின்னணி இசை, பக்கப்பாட்டுக்காவது என்னை வைத்துக் கொள்ளலாமல்லவா ?"

•

"அதற்கும் வேலை காலியில்லை. தும்புரு என்ன, நாரதன் என்ன, கின்னரர், கிம்புருடர் கந்தருவர் என்ன, இவர்கள் எல்லாம் காத்துக்கொண்டிருக்கும் பொழுது, நீ எந்தமூலை? "

"வண்டோங்கு செங்கமலக் கழுநீர் மல்கும் மதமத்தம் மதியமுடன் செஞ்சடைமேல் சூடிக்கொண்டு, எண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று இசைசேர நடமாடும் உன் ஆடற்கோலத்தையாவது நான் இங்கிருந்து கண்டு பரவலாமா?

"ஐயோ! அதற்கும் இடம் இல்லையே. இந்திரனும் தேவர்களும் அடித்துப் புடைத்துக் கொண்டு முன்னின்ருர் முதுகுதீயப் பின்னின்ருர் இடித்துக் கொண்டு, என் இலக்கச் சூலைகள் வாய்தல் பற்றி உந்திநிற்பதை நீ உற்றுக்காண். காலியில்லை"

"நீவைத்து அயர்ந்தபொருளைத் தேடிஎடுத்துக் கொடுக்கவாவது நான் பயன்பட மாட்டேனு?"

"அந்த வேலையும் காலியில்லை. தேடும்வேலை திருமாலுக்கும் நான்முகனுக்கும் என்றே பிரமலிபி இருக்கும் பொழுது நீ ஏன் அதைச்செய்யவேண்டும்? உன் தலையெழுத்தா?"

"ஆ! இப்பொழுது எனக்கு நினைவுவந்தது. இதையாவது நான் செய்துகொண்டு இருக்கிறேன். நீ ஆடி அலுத்த நேரத்தில் உன் காலைப் பிடித்து விடுவதற்காவது என்னை அமர்த்திக் கொள்."

"நன்று சொன்னுய்; அந்த வேலையும் காலியில்லை. பார்வதியும் கங்கையும் யார்முந்தி என்று போட்டி போடுகிருர்கள். அவர்களின் மெல்லிய கரத்திற்கே என்பாதம் சிவந்து விடுகிறது".

"அப்படியானுல், உங்கள் நாடகசபையில் ஒருசின்ன வேலையும் காலியில்லையா?"

"வேலை காலியில்லை".

எப்படி இருக்கும் அப்பர் அடிகளுக்கு? மனம் வருந்திப் பாடுகிருர் பாருங்கள்:—

ஆடுவாய் நீநட்டம் அளவிற் குன்ரு
அவியடுவார் அருமறையோர் அறிந்தேன் உன்னைப்
பாடுவார் தும்புருவும் நாரதாதி
பரவுவார் அமரர்களும் அமரர் கோனும்
தேடுவார் திருமாலும் நான்முகனும்
தீண்டுவார் மலைமகளுங் கங்கையாளும்
கூடுமே நாயடியேன் செய்குற்றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகொண்டீர்க்கே.

எட்டு.

செப்பறைச்சுவாமிகள் உரை.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்கள் எட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்கள் எட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சேவடி யடைந்தார் களைகணெட்டும்
நகையெட்டு நாளெட்டு நன்மை யெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

இதன்பொருள்

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய முதல்வரே! சதாசிவ தத்துவத்தின் வைகும் நீவிர் இவ்வா றீண்டு வைகுவது மெனின் எம்மை ஆண்டை யுயிர்கள் வழிபடுமாறெவ்வா றென்றெண்ணி அவை தாம் தம்நிலையினின் றவாறே எளிதின் வழிபட்டுய்தற்பொருட்டுப் புறத்தே திருமேனி கொண்டருளி, பலவேறுகப் பரந்த இந்நிலவுலகின் கண் பலவேறு திருக்கோயில் கொண்டருளுங்கால் அவை தம்முள், இத் திருவாரூர் திருக்கோயிலாக் கைக்கொண்டருளிய திருநாளாவது.

ஒரோவொன்றும் தனித்தனி எண்வேறு திறப்பட்ட பதினாற் பகுதியவாய் வைத்துச் சுட்டிக்காட்டிய வினையீட்டல், துய்த்தல், காரகம், புறமலர், பொழில், மலை, பாலிப்போர், மூர்த்தி, குணம், கரம், மணம், ஆனந்தம், அகமலர், திசை என்னும் இவை தம்மைப் பொதுவகையான் வைத்து விளக்குதற்கு முன்னை நாளா? பின்னை நாளா? பலதலைப்பட்டனவாய இவை தம்முள் இவையல்ல மற்றிதுவேயென ஒருதலை துணியுமாறின்றி ஐயப்பாடுடைமையின் ஆகலின் அதனை யொழித்துத் துணியுமாறு எந்தை தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்குமாறு என்பது குறிப்பெச்சம்.

திருவாரூர் கோயிலாக் கொண்டநாளென்பதூஉம், தெரிப்பதற்கு முன்னே பின்னே என்பதூஉம் முறையே புகை முதலிய அனைத்தின் முன்னும் தனித்தனி சென்றிசைந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நிற்கும், நாளென முன்வருதலின் இதுவும் அதுவென்பது தானே போதருமென்னும் கருத்தால் முன்னே பின்னேவென வாளா வோதியொழிந்தார். தெரித்தவென்பதும் அது.

கலை யென்பது புகை முதலிய மூன்றனேடும் முரணுமை இலேசாற்கொள்க; புகை, போக்கு, புலம், பூ, பொழில், கலை, காப்பு, நாள், நன்மை, திகை, காட்சி, நகை, மலர், களைகண் என்னும் முறைவைப்புடைமை யுடையவாதற்கு உரியவாயினும் செய்யுளாகலின் இவ்வாறு பிறழவைத்தார்.

காரகம் எட்டாகலின் வினையீட்டல் துய்த்தல்களும் எட்டாயின. நகுதல், நகை யென்பன போலப் புகுதல் புகையென்பன ஒரு பொருட்கிளவி. அஃது தோன்றலென்னும் பொருட்டாகலானும் காரகமுன் வருதலானும், வினை நிகழ்ச்சியின் மேற்றாய் நின்றது; துய்க்கப்படுவன, தோன்றுதுபோதலின், அது அப்பெயர்த்தாயிற்று. வினையீட்டல், துய்த்தல்கட்கு அதுபற்றி இடமாய் நிற்பனவாய காரங்கள் அதுபற்றிப் புலம் எனப்பட்டன; இடம் என்றது ஈண்டுத் துணைக்காரணமாதலை; தளம் தலமெனப் போலியாயிற்று, தளப்பூ என

இயையும், பலவேறு மரங்களின் றெகுதியே பொழில் எனப்படும். ஆகலின் ஈண்டிவை தம்முள் ஒரோவொன்றும் தனித்தனி மிக்குழி அவற்றோடு ஏனைய ஏழுங் குறைந்து தம்முட் கூடுங்கால் அக்கூட்டமே ஈண்டுப் பொழி லெனப்பட்டுப் படும் பாகுபாடு எட்டாக வேறு வேறு வைத்தெண்ணப்பட்டன. இனிப் பொழிற் கேதுவாகிய எண்வகை மரங்களையே எண்பொழிலென வைத்தெண்ணினர் எனி னும், தனித்தனி அவ் வெண்மரங்களின் தொகுதியை அவ்வாறு வைத்தார் எனினும் அமையும்.

கலை என்புழி ஐ பகுதிப்பொருள் விகுதி. கல் என்பது மலை என்றவாறு. காப்பு ஆகு பெயர். காட்சிப்படும் வடிவை காட்சியென உபசரித்தார். வடிவு மூர்த்தமென்பன ஒரு பொருட் கிளவி; எஞ்ஞான்றும் களைகணின்றி யமையாதாய உயிர் சேவடியைத் தலைக்கூடுழி எண் குணங்கள் களைகணு நிற்பனவாகலின் அதுபற்றி அவை அவ்வாறோதப்பட்டன.

நகை என்பதனுள் நகரம், கீரன் நக்கீரன் என்றாற்போல, ந சிறப்புப்பொருள் தந்து நின்றது. நாள்பற்றிச் செய்யப்படு மணத்தை நாளென்று ஓதினர். அவை அறிவு, குணம், என்பனபோல ஈண்டு ஏற்புழிக்கோட லான் நன்னுளை யுணர்த்தி நின்றது. நன்மை-ஆனந்தம், அது மனுடானந்த முதல் எண் வகைப்படும் என்பது சிவதருமோத்திர முதலியவற்றுட் காண்க. இனி நன்மை சித்தி எனினும் அமையும். சிறந்த நலத்தார் என விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது, நலமெனப்படு மெவற்றினும் சிறந்த நலமாவது வீடு பேறென்ப. ஈண்டு அதனையுடையார் என்றது சீவன் முத்தரை; ஏனைய வெளிப்படை.

உயிர் காரகத்துள் ஒன்றாக வைத்து எண்ணப்படுதல்பற்றி ஆண்டோதினர், அதுவே எண்வகை வடிவுள்ளும் ஒன்றாக வைத் தெண்ணப்படுதலின் ஈண்டுங்கூறினர். காரகமும் வடிவும் தம்முள் வேறாகலின்.

மலர் மரத்தோடு உடன் தோன்றாமை யானும் தெரித்தற்கு முன்னே பின்னே என்ற தனான் ஈண்டு எடுத்துக்கொண்டது அவை தூலமாய்த் தோன்றற் கேதுவாய கால விசேடமே பிறிதன்று ஆகலானும், முற்பிற் பாடுடையனவாய அவையிரண்டும் தோன்றுங் காலம் இடையிட்டுத் தம்முள் வேறாகலானும் மலரும் மரமும், வேறாக வைத்து எண்ணப் பட்டன. ஈண்டோதியவற்றை உபலக்கணமாக வைத்து ஓதாதொழிந்த ஏனையவும் தெரித் தற்கு முன்னே பின்னே என வைத்துரைத்துக் கொள்க.

இஃதென் சொல்லியவாறோ வெனின், இம்மை மறுமை வீடுகட்கு ஏதுவாகிய இவை தோன்றற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளெனக் கடாயி னார்க்கு அங்ஙனம் ஐயப்படக் கூறு முகத்தான் அவ்வாறாயினும் ஆட்பாலவர்க்கருளும்......தலை நின்றிவை கேட்கத்தக்கார் என விடுத்த வாறாயிற்று.

இனி இவ்வாறன்றி, புகை போக்கு என் பதற்குப் பொருள் பிறப்பு இறப்பெனக் கொண்டு, தத்துவம் முப்பத்தொன்றும் இனம் பற்றி எண்வகைப்படுதலின் அவற்றினின்றும் தோன்றும் தூல தேகம் பற்றி நிகழும் அவையும் அவ்வாறு எண்வகைப்படுத்து ஓதப் பட்டன எனவும், புலமென்றது புரியட்டக வுடலெனக்கொண்டு, விட்டும் பற்றியும் வரும் ஏனைத் தூலவுடல் போலாது வீடுபேறுந் துணையும் இடையறவுபடாது உயிர் நிற்றற்கு இடமாகலின் அதுபற்றி அது புலமெனப் பட்டது எனவும், பூதலமென்றது உலகமெனக் கொண்டு காட்சிப்படும் தீவேழனோடு காட்சிப் படாத கீழ்மேலுலகங்களை ஒன்றாக வைத்து

எண்ணப்பட்டது எனவும், பொழில் என்பது பூஞ்சோலை எனக்கொண்டு மேருவைச் சூழ்ந்த பொழில் எட்டாம் எனவும், மேருவின் திசை நான்கினுமுள்ள உய்யானம் நான்கனோடு மேருவின் மேலுள்ள மரம் நான்கும் ஏனை மரங்களை நோக்க உயர்மையும் பெருமையு முடைமையின் அவையுமுளப்பட ஈண்டுப் பொழிலெனப்பட்டன வெனவும், கலைஎன்பது தலைமைபற்றி வேதமெனக்கொண்டு மூல வேதம் நான்கும் உபவேதம் நான்கும் எனவும், காப்பு காட்சி என்பனவற்றை முறையே, கா+பூ, காண்+சி எனக் கண்ணழித்து புறமல ரெட்டெனவும், இலக்குமிகள் எண்ம ரெனவும், களைகண் என்பது எண்வகைப் பத்தி யெனவும், நகை என்பது ஒளியாக லானும் அது சத்திக்குப் பரியாயப் பெயர் ஆகலானும் அதுபற்றி ஈண்டு எண்வகைச் சத்திகளை உணர்த்திற்றெனவும், நாளம் என்பது அம்முக் கெட்டு நின்றதெனக் கொண்டு, மண் முதல் நாளமென்பதுபற்றி இதய கமல தளம் எட்டெனவும், நன்மை என் பதனுள், மை மலம் எனக்கொண்டு மல குணம் எட்டெனவும், அகமலர் என்றது முதனிலைத் தொழிற் பெயரெனக்கொண்டு இயமம் முதலிய அட்டாங்க யோகங்களை யுணர்திற்றெனவும், திகை என்பதை தீ+கை= எனக் கண்ணழித்து உயிருணர்ச்சிக் கேது வாகிய இறைவன் கைகள் எட்டெனவும் பொருள் கோடலும் ஒன்று; இவற்றை இன்னும் ஈண்டுரைத்தவாறுபற்றி விரித்து உரைத்துக்கொள்க. தீ - அறிவு.

உரைக்குமாறுரைக்கும் பொருள் பொருந் துவனவாய்ச் சிறந்தன பிறவுளவேல் கோடற் பால. அறச்சிறிதாய பரவுடலை ஆனந்த மெனத் திரியக்கொண்டு தருக்குப் பெருக்கு முயிர்போலவும், ஓராறும் உணர்விலியாய ஒரு வற்கு ஒருவன் ஓர் ஆறு காட்டுமாயின் பின் அக்காட்டியான் உபகாரத்தை மறந்து தான் கண்டதாய்க் காண்பான் ஒப்பவும், இயை பற உரைத்தற்கெழுவாரும் இழுக்குரைத்தற் கெழுவாரும் இனி உளராவர் போலும்.

எண்வகைப்பத்தி, திருத்தொண்டர் புராண சாரம்.

தொண்டர்அடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்த லழகார்
துளங்கியவர்ச் சனைபுரித லுருகுதிங்கிய மங்கள்
கொண்டபணி திருவடிக்கே கொடுத்தல் ஈசன்
குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு
மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்ப லுன்னன்
மருவுதிருப் பணிகாட்டி வருவ வாங்கி
உண்டிகொளா தொழிதலென இவையோ ரெட்டும்
உடைய ரவர் பத்தரென உரைத்துளாரே.

காரகம் எட்டாவன சித்தி 2 ம் சூத்திரம்.

உலகுடல் கரணங் கால முறுபல நியதி செய்தி
பலவினை கொண்டு கன்மம் பண்ணுவதுண்பதானல்
நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா
தலகிலா வறிவனணை யணைத்திடும் அருளினாலே.

உலகு, உடல், கரணம், காலம், நியதி செய்தி, (இன்னதற்காக இது பயனாக) வென்னும் இரண்டு காரகங்களையும் நியதி என்பதனாற் றழீஇனர்.

இவ்வுரை சிதம்பரம் தேவார ஆசிரியர், திருவாளர் S. இராமலிங்க ஓதுவாரவர்கள் தந்துதவியது.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
    நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்
    இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம்ஆர்க்கும் குடியல்லாத் தன்மை யான
    சங்கரன்நல் சங்கவெண் குழைஓர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
    கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே.

—திருநாவுக்கரசர்



அன்பரை ஆட்கொண்ட அதிசயம்.

வித்துவான். வை. குஞ்சிதபாதம் பிள்ளை.

உலகில் மக்கள் அன்புடனும், அமைதியுடனும், இன்புற்று வாழ்ந்திருக்க வேண்டுமாயின், அவர்களிடையே உண்மை ஞானத்தைப் புகட்டி, நீதியும் ஒழுக்கமும் இறையுணர்ச்சியும் உடையவர்களாய் வாழப் பணிசெய்வது சான்றோர் கடமையாகும். அப்பணியை, ஆன்றோர் அடைந்துநின்ற அருள் அனுபவநிலைகளைக் குறிக்குங் கட்டுரைமூலமாகவும், சொற்பொழிவு வாயிலாகவும் ஆற்றுதல் சாலச் சிறந்ததாகும். இவ்விருவகைப் பணிகளையும் நம் தருமையாதீனம் ஊனசம்பந்தத்தை ஒழிக்கத் தோன்றிய "ஞானசம்பந்தம்" என்னுந் திங்கள் நல்லிதழ் வாயிலாகவும், அரிய பெரிய நூல் வெளியீடுகள் வாயிலாகவும், தொண்டர்கள் வழியாகவும் செய்து வருகின்றது. இச்செயல் பாராட்டற்குரித்தாம்.

நமது சைவ சித்தாந்த சாத்திரங்களின் தலைமணியாக விளங்கும், மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோத எட்டாஞ் சூத்திரத்தில் "ஐம்புல வேடர்களிடையே அகப்பட்டு மயங்கிநிற்கும் தொல்லுயிரைப் பக்குவமறிந்து அரன் குருவாக வந்து ஆட்கொண்டு உபதேசித்துத் தன் திருவடிகளில்சேர்த்துக் கொள்ளுகிறான்" என்று கூறப்பட்டுள்ளது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

என்பது அச்சூத்திரம்.

சிவஞானபோதத்தின் வழிநூலாகிய சிவஞான சித்தியாரை இயற்றியருளிய, மெய்கண்டதேவரின் மாணவராகிய ஸ்ரீமத் அருணந்திசிவாசாரியரும் அச்சித்தியாரில் இவ்வெட்டாஞ் சூத்திரக் கருத்தை விளக்குமிடத்துச் சித்தாந்த சாத்திரத்தின்கண்ணே சிவபெருமான் தன் திருக்கண் நோக்கால் பக்குவான்மாக்களை ஒரு பிறவியிலேயே சீவன் முத்தராகும்படி ஆட்கொண்டு, மலமகற்றிப் பிறவியறுத்து, ஞானம் அளித்து, ஆனந்தம் பொழிந்து தமது திருவடி முத்தியை அருளுகின்றான் என்று சொல்லியிருக்கவும் அதனையறியாது உலகோர் மூர்க்கராகிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று பித்தேறியவர் போற் பிதற்றிப் பிறவிப் பெருங்குழியில் விழுந்து உழல்கின்றார்களே இது என்ன விபரீதம் என்னுங் கருத்தமைத்தருளிய,

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுஎன்னபிராந்தி"

என்னுந் திருப்பாட்டு ஆண்டவன் ஆன்மாக்களை ஆட்கொண்டருளும் அருமையினைத் தெளிவாக விளக்கியிருத்தல் காண்க.

இங்ஙனம் சித்தாந்த சாத்திரம், ஆண்டவன் ஆன்மாக்களை ஆட்கொண்டருளும் முறைமையினை இலக்கணவாயிலாக விளக்கியிருத்தலைத் தெள்ளிதின் உணர்ந்தோம். ஆயினும் அதற்கு இலக்கியமாக அரனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்றோர் உளரோ எனில்? பல்லோருண்டு. அவர்களில் ஒருவரைப்பற்றி இங்குச் சிறப்பாகக் கூறுவோம்.

இற்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன் தென்பாண்டிநாட்டின்கணுள்ள திருவாதவூரில் திருவவதாரஞ்செய்த வாதவூரடிகள் சகல கலைகளையும் ஓதியுணர்ந்து ஞானநெறியில்நின்ற பெரியார். அவர் அரிமர்த்தன பாண்டியனிடத்தில் முதல் அமைச்சராயிருந்து அரசியலலுவல்களை அழகுற நடத்திவந்தபோதிலும், அவர் ஞானத்தில் நாட்டமுடையவராய்க் குருவை வேட்டுநின்றார். இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்தெய்துங்காலம் நெருங்கினமையின், அமைச்சராம் வாதவூரர், அரசன் ஆட்சிக்கு வேண்டிய குதிரைகள் வாங்கச்சென்ற காலையில், வழியில் "திருப்பெருந்துறை" என்னும் இடத்தில் குருந்தமரத்தடியில் இறைவன் மானிடச் சட்டைதாங்கிக் குருபரனாகவந்து வாதவூரரை ஆட்கொண்டு அருள்செய்தான்.

இதனைக் கண்டுங் கேட்டும் விண்டார் ஆர்? என்று வினவலாம் சிலர். ஒருவர் ஒருநிகழ்ச்சியைக்

கண்டுங் கேட்டும் விண்டனவெல்லாம் மெய்யெனக் கொள்வதற்கில்லை; கண்டார் கண்டவொன்றைப் பிறழ உணரவுங்கூடும்; கேட்டார் பிறர் கூறுங் கற்பனைகளை உண்மையென நம்பவுங்கூடும். ஆகவே, இவர்கள் ஒரு வரலாறுபற்றிக் கூறுவனவெல்லாம் உறுதியென்று அறுதியிட்டுக் கூறமுடியாத புறச் சான்றேயாமென்பர் ஆராய்ச்சியாளர். ஆதலால், வாதவூரன்பரை அத்தன் ஆட்கொண்ட அதிசய வரலாற்றை அவ்வன்பர் திருவாய்மலர்தருளிய அகச் சான்ருகிய திருவாசகமென்னும் தேன் வெள்ளத்தி லிருந்து சிற்சில துளிகளை ஆங்காங்கே எடுத்துக் காட்டி இவ்வரிய வரலாற்றை முடிப்பாம்.

திருவாதவூரடிகள் தாமருளிய திருவாசகத்தின் கண்ணே இறைவன் தம்மை யாட்கொண்டருளிய வரலாற்றைச் சற்றேறக்குறைய நூற்றைம்பத்தோ ரிடங்களில் வெளிப்படையாகக் கூறியுள்ளார்கள். முற்காலத்துச் சான்றோர்களில் வாதவூரடிகளைப் போல் இறைவன் குருவாகவந்து அருளியபெருமையை எவரும் அன்பால் உள்ளம் உருகி இத்துணை விரித் துக் கூறினரில்லை. இறைவன் குருவாகவந்து ஆட் கொண்ட வரலாற்றை வாதவூரடிகள் திருவாச கத்திற் சிலவிடங்களில் விரித்தும், பலவிடங்களில் தொகுத்தும் சுட்டியுள்ளார்கள். அவற்றுள் சில காண்போம்.

முதற்கணுள்ள சிவபுராணத்தில் அடிகள் தம்மையாட்கொண்ட சிவபரம் பொருளின் திருப் பெயரைத் துவக்கத்தில் "நமச்சிவாயவாழ்க" என்று வாழ்த்திக், குருவாகவந்து ஆட்கொண்டதைக் "கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்று மூன்ருமடியிற்சுட்டி வாழ்த்தியுள்ளார். அப் பரம்பொருளின் முத்தாந்தப் பாதமலர்களை வாழ்க என்று ஐந்துமுறையும், வெல்க என்று ஐந்துமுறை யும், போற்றி என்று எட்டுமுறையுந் துதித்து உள்ளார்கள்.

மேலும் இறைவன் குருவாகவந்த செய்தியை,

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனுகி அருளிய பெருமையை"

எனவும்,

"மெய்தரு வேதிய னுகி வினைகெட
கைதர வல்ல கடவுள் போற்றி"

எனவும் போற்றித் திருவகவலிலும்,

"கொடுரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே"

என்று ஆனந்தமாலையிலும் பிறவிடங்களிலுங் கூறி இருப்பதாலறியலாம்.

அடிகள் குருமணியின் திருவடி கண்டதையும், அவர் திருவடிகாட்டியதையும் "மெய்யேயுன் பொன் னடிகள் கண்டின்று வீடுற்றேன்", "நிலந்தன்மேல வந்தருளி நீள்கழல்கள் காட்டி" எனச் சிவபுராணத் தும், "பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத் தெனையாண்ட" எனக்குயிற்பத்திலும், "மலரடி இணைகாட்டி", "விரைமலர்க் கழல்காட்டி", "இணை மலர்க் கழல்காட்டி" என அற்புதப்பத்திலும், "காயத்துள்ளமுதூற ஊறநீ கண்டுகொள்ளென்று காட்டிய சேயமாமலர்ச் சேவடி" எனச் சென்னிப் பத்திலும், பிறவிடத்துங் கூறியிருத்தல்காண்க.

குருபரன் திருமேனிகாட்டி யாண்ட தன்மையை "மொக்கணியருளிய முழுத்தழன மேனி, சொக்க தாகக்காட்டிய தொன்மையும்" எனப் போற்றித் திருவகவலிலும், "செந்தழல்புரை திருமேனியுங் காட்டித் திருப்பெருந்துறையுறை கோயிலுங்காட்டி, அந்தணனுவதுங் காட்டி வந்தாண்டாய்" எனத் திருப்பள்ளி யெழுச்சியிலும், பிறவிடங்களிலும் கூறியிருப்பது கொண்டுதெளிக

குருமணியாக வந்தவர் சிவபெருமான் தானு? மணி வாசகர் நேரே அவரைக் கண்டாரா? என்று ஐயப் படுவாருளராயின், அன்னர் ஐயம் அகலும்படியாகத் தான்கண்ட அனுபவத்தை அடிகள், "கண்ணுல் யானுங்கண்டேன் காண்க, கருணையின் பெருமை கண்டேன் காண்க, சிவனென யானுந் தேறினன் காண்க, அவனெனை ஆட்கொண்டருளினன்காண்க" எனத் திருவண்டப்பகுதியிலும், "நனவிலும் நாயேற் கருளினை போற்றி" எனப் போற்றித் திருவகவலி லும், "களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டின்றே" எனக் கோயிற்றிருப்பதிகத்தும், ஏனைய பதிகங்களிலும் வெளியிட்டுள்ளார்கள்.

அடிகள். இறைவன் தமக்குக் கண்ணேக்கால் தீகைஷ புரிந்ததைக் "கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி" எனச் சிவபுராணத்தும், "புணர்ப்பதொக்க எந்தையென்னை யாண்டு பூண நோக்கினய்" "ஈறிலாதநீ எளியை யாகிவந் தொளி செய் மானுடமாக நோக்கியும்", "போத என்றனைப் புரிந்து நோக்கவும்" எனத் திருச்சதகத்தும், பிற இடத்தும் விளக்கியுள்ளார்கள்.

குருபரன் வாக்கால் உபதேசித்ததைக், "கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை மீட்டேயும் பிறவா மற் காத்தாட் கொண்டான்" எனத் திருச்சதகத்தும்,

"மன்ன, என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றி னுய்" எனச் செத்திலாப்பத்திலும், "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" எனத் திருவேசறவிலும், "ஓங்காரத்துட் பொருளை, ஐய னெனக் கருளியவா ருர்பெறுவா ரச்சோவே" என அச்சோப்பதிகத்தும், மற்றும் பல விடங்களிலும் அடிகள் அருளியிருப்பதாலறியலாம்.

இறைவன் திருவடி தீக்ஷை செய்த பெற்றியினை "என்னையும் ஒருவனுக்கி யிருங்கழல், சென்னியில் வைத்த சேவக போற்றி" எனப் போற்றித் திருவகவலிலும், "இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே", "சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்" எனத்திருப்பூவல்லியிலும், "திருவடி என்தலைமேல் நட்டமையால்" எனக்குலாப்பத்திலும் பிறவிடத்தும் கூறியிருப்பதுகொண்டு உணரலாம்.

மற்றும், முற்குறித்த "சித்தாந்தத்தே" என்னும் சிவஞானசித்தித் திருப்பாடலில், சிவன் குருவாகவந்து அருள்புரியும முறைமை குறித்திருப்பதற் கிணங்க, மாணிக்கவாசகர் திருவாசகத்துள், "கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி" என்றருளியிருப்பதால் சிவன் திருக்கடைக்கண் சேர்த்தியதையும, "என்னையும் இருப்பதாக்கினன்" என றருளியதால் சிவன் முத்தராக்கியதையும், "அறைகூவி ஆட்கொண்டு" என்றமையால், ஆட்கொண்டதையும, "சித்தமலம் அறுவித்து" என்பதால் மலங்கழுவியதையும, "பிறவியை வேரறுப்பவனே" என்றமையால் வரும் பிறப்பறுத்ததையும், "கேளாதன வெல்லாங் கேட்பித்து" என்பதால் ஞானேபதேசம் அருளியதையும், "உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து" என்றருளியமையால் ஆனந்தம் பொழிந்ததையும், "தன்கழலே சேரும வண்ணம், ஆகியெனக் கருளியவாருர் பெறுவா ரச்சோவே" என்றருளியிருப்பதால், முத்தாந்தப் பாதமலர்க்கீழிருக்கும் பேறுபெற்றதையும் விளக்கியுள்ளாராதலின், சித்தாந்த முத்திநிலையை மாணிக்கவாசகப் பெருமான் பெற்ருரெனபது மலையிலக்காம்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்று கூறி அழுதடியடைந்த அன்பராகிய மாணிக்கவாசகர் கனவிலுங் தேவர்க்கரிய சிவபெருமான், நனவே புகுந்து தம்மையாட்கொண்ட சிறந்த நன்றியை நினைந்து "உள்ளந்தாளிலிருந்து உச்சியளவும் நெஞ்சாயுருகவேண்டும்; உடம்பெல்லாங் கண்ணுகிக் கண்ணீர் வெள்ளம பாயவேண்டும; அப்படி எனக்கு உண்டாகவில்லையே, ஆதலால், என் நெஞ்சுங் கல், என் கண்ணிணையும் மரம்" என்னுங் கருத்தமைய,

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ் மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணய் அண்ணு
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே"

எனப் பாடியிருப்பதால் அடிகளின் அன்பின் பெருக்கையும் ஆற்றுமையினையும் நன்கறியலாம். அடிகளின் அன்பின் பெருமையினை, நன்குணர்ந்தே "திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்" என்று முற்றத்துறந்த பட்டினத்தடிகளும் 'வாதவூரையனன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ?" என்று தாயுமான அடிகளும் பாராட்டிக் கூறுவாராயினர்.

வாதவூரடிகள் ஆண்டவன் பெருமையினையும், தமது சிறுமையினையும், தன்னை ஆட்கொண்ட அருமையினையும் நினைந்து வியந்து,

"வைப்புமாடென்று மாணிக்கத் தொளியென்றும்
மனத்திடை யுருகாதே
செப்புநேர் முலை மடவரலியர் தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பிலாதன உவமனி லிறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே"

என அதிசயப்பத்தில் கூறியுள்ளார்கள். அடிகள் "அப்பன் ஆண்டு அடியரிற்கூட்டியதை அதிசயம்" என்று கூறியிருத்தலின், இக்கட்டுரைக்கும் "அன்பரை ஆட்கொண்ட அதிசயம்' என்னும் பெயர் சூட்டப்பெற்றது.

இதுவரையுங் கூறியதிலிருந்து சிவபெருமான் மாணிக்கவாசகர் முன் குருவாகத்தோன்றி திருவடியுந் திருமேனியுங் காட்டியதை மணிவாசகர் நேரே கண்டு சிவனே குருவாய் வந்தாரென்பதை உணர்ந்தன ரென்பதூஉம், அக்குருபரன் கண்ணேக்காலும், வாக்காலும், திருவடியாலும் தீக்ஷைபுரிந்து ஆட்கொண்டாரென்பதும், இப்பேறு எவர்க்குங் கிடைத்தற்கரியதொன்றென்று அதிசயங்கொண்டா ரென்பதும் இறுதியில் பொன்னம்பலக்கூத்தன் புனைகழல் சேர்ந்து திருவடி முத்தி பெற்ருரென்பதும் பிறவுந் தெளிவாகும்.

பையப்போ.

வித்துவான், M. ஆறுமுகதேசிகர்.

குழந்தைகளைக்கண்டால் குழந்தைகட்குக் கொண்டாட்டம். இணைபிரியவேமாட்டார்கள். சேர்ந்து விளையாடுவார்கள். இதுபோலவே தான் காளைப்பருவமுடையானும்; தன்னோடு ஒத்த வயதுடையானையே தனக்குத் தோழனாகக்கொள்வான். நற்காரியமாயினும் சரி; தீய காரியமாயினுஞ் சரியே. இருவரும் சேர்ந்தே செல்வார்கள். கிடைக்கும் பயனைப் பெறுவார்கள். முதியோர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களும் உண்டநேரம் போக முதியோர்களைச் சார்ந்து உரையாடிக்கொண்டிருப்பார்கள். ஆனால் இவர்களைக் குழந்தைகள் கண்டால் பரிகாசம் செய்வார்கள். அதுமட்டுமல்ல; சேய்மையில் நின்றுகூட சிறு கற்களை எடுத்தும் எறிவர். சிறிதும் பிடிக்காது. இது சிறுபிள்ளைகளியல்பு. என்ன செய்தாலும்சரி; முதியோர்கள் இத்தகைய சிறுவர்களிடத்தில் கோபங்கொள்வார்களா? மாட்டார்கள்; சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனல்லவா? சிறுவர்கள் மிக வேகமாக ஓடினால் அது இவர்கட்குப் பொறுக்காது. இப்பாலன் இப்படி ஓடுகின்றானே தவறி விழுந்தால் என்ன ஆகும் என்றெல்லாம் இவர்கள் மனம் எண்ணும். எண்ணவே வாயிலிருந்து கருணை ததும்பும் சொற்கள் வெளிவரும். பார்த்துப்போ; பத்திரமாகப்போ; மெல்லப்போ, பையப்போ என்றெல்லாம் சொல்வார்கள். இது முதியோர் இயல்பு. மற்றும் சிலர் தம்மால் போற்றி வளர்க்கப்படுகின்ற அஃறிணைப் பொருள்களிடத்துங்கூட இத்தகைய பல சொற்களைக் கையாளக் காண்கின்றோம். ஆகவே அன்புமீதூர்கின்ற இடமெல்லாம், கருணைமீதூர்கின்ற இடமெல்லாம், காதல்மீதூர்கின்ற இடமெல்லாம் இத்தகைய சொற்றொடர்கள் தம்மையறியாமலேயே வெளிப்படுகின்றன என்பது பெறப்படும்.

* * * *

இயற்கை அழகில் மலையழகும் ஒன்று. அதுவும் பெரிய மலை; இறைவன் உகந்து எழுந்தருளியிருக்கும் மலை என்றால் அதன் அழகு எப்படியிருக்கும். மான், சிங்கம், புலி, யானை, கரடி முதலிய பற்பல மிருகங்களும் அதில் வாழ்கின்றன. வாழ்க்கையும் நேசத்தோடு கூடியதே. மற்றும் அதில் வசிப்பவர்கள் குறவர் குறத்திகளே. குறவர் இயல்போ ஆயுதங்களோடு சென்று வேட்டையாடுதல்; அகப்பட்ட விலங்கினங்களை எடுத்துவருதல்; தத்தம் மனைக் குறத்தியிடம் கொடுத்துச் சமைக்கச்சொல்லுதல். உண்டு களித்தல். இவ்வாறு அவர்கள் வாழ்க்கை சென்று கொண்டிருக்கும்.

* * * *

ஒருநாள் குறவன் வேட்டையாடச் செல்ல நினைந்தான். வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டான். தான் தனியாகப் புறப்பட்டான். நெடுந்தூரஞ் சென்றான். மலைவளங்காணவும் பெருமானை வழிபடவும் கருதி ஆங்கு வந்த ஒரு புலவர் பெருந்தகையார் குறவன் செல்லும் வேகத்தைக் கண்டார். வேடிக்கை பார்க்கலாமென்று பின்தொடர்ந்தே சென்றார். முன் செல்லும் குறவனுக்கு விலங்குகள் ஒன்றும் காணப்படவில்லை. மலையிடமெங்கும் அலைந்து திரிந்தான். கிடைக்கப்பெறவில்லை. கால்கள் தளர்ந்தன. ஆனாலும் ஊக்கம் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. மற்றோர்புறம் வெறுங்கையுடன் திரும்பலாமா? நமது ஆண்மைக்கும்

வீரத்துக்கும் என்ன மதிப்பு? போனாலும் போகட்டும். திரும்பச் சென்றால் மனைவி பரிகசிக்கமாட்டாளா? என்றெல்லாம் பல எண்ணங்களாகிய அலைகள் மனக்கடலில் தோன்றி மறைகின்றன. நாற்புறமும் பார்த்துச் செல்கின்றான். சிறிதுதூரஞ் சென்றதும் மான்கள் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டான். மிக்க ஆசையுடன் வில்வளைத்துக்கொண்டே அருகில் சென்றான். மான்கள் இவனைக் கண்டதும் ஓட்டம்பிடித்தன. ஆனாலும் ஒரு பெண்மான்மட்டும் இவனது அம்புக்கு இலக்காயிற்று. வீழ்ந்து இறந்தது. எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டான் குறவன். நெடுநேரமானதால் மிக வேகமாகவே தன் குடிசைநோக்கி வந்தான். கணவன் வரவை எதிர்பார்த்துநின்ற குறத்தியும் இன்முகத்துடன் நோக்கினாள். 'இந்தா; இதை எடுத்துச் சமைத்துவா உண்போம்' என்றான்.

•

மானைக் கையில் வாங்கினாள் குறத்தி; உற்றுப் பார்த்தாள். கோபம் அதிகரிக்கின்றது. புருவமேறிட்டது. கோபத்தின் எல்லைக்கோ அளவில்லை. கண்டகுறவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ரொம்பநேரமாயிற்றே அதற்காகவா? அல்லது மானிறைச்சி இவளுக்குப் பிடிக்கவில்லையா? ஏன் இவ்வாறு இவள் சினங்கொள்கிறாள் என்று எண்ணிப் பார்க்கிறான். குறத்தி மானைக் கீழேவைத்தாள். குறவனை நோக்கினாள். பேச ஆரம்பிக்கின்றாள். 'இன்றளவும் நான் நினைத்திருந்த எண்ணம் இப்பொழுது தப்பாக அல்லவா முடிந்துவிட்டது. என்னிடத்தில் உனக்கு அன்பு உண்டு என்று எண்ணியிருந்தேனே. இல்லையென்பதைக் காட்டிவிட்டாயே. இம்மான் பெண்மானல்லவா? இதனைக் கொல்லலாமா? துணையைப் பிரிந்த கலைமான் என்ன துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்; ஆராய்ந்துபார். காதலென்பது இன்னது என்று விளங்கவில்லையா? நீ என்னைப் பிரிந்து சென்றாயே; அப்பொழுது அப் பிரிவு எனக்கு எத்தகைய துன்பத்தை உண்டாக்கியிருக்கும். உனக்கோ அத் துன்பம் நேரவில்லைபோலும். நேர்ந்திருந்தால் நீ இத்தகைய காரியத்தைத் துணிந்து செய்வாயா? மற்றும் பெண்மானைக் கொல்வது உனது ஆண்மைக்கும் வீரத்துக்கும் இழுக்கு அன்றோ?'

'கலைபிரிய இம்மான் கொணர்தல் இழுக்கு'

என்றாள். வேட்டை விளையாட்டைப் பார்த்துச் சென்ற புலவரும் இதுகாறும் குறவனுடன் இருந்து அவன் செயலைக்கண்டு, மனையாட்டியின் கோபச்சொற்களையும் கேட்டிருந்ததால் அவருக்கும் மானினிடத்தில் இரக்கம் உண்டாயிற்று. பரம்பொருளின் செயல் நினைவுக்கு வருகின்றது. என்ன? இறைவனை அழித்தொழிக்கவேண்டி, தாருகவனத்து முனிவர்கள் பெரிய யாகஞ் செய்தார்களே; அதன்கண் தோன்றிய பல பொருள்களையும் இறைவனிடத்து அனுப்பினார்களல்லவா? அவைகளுள் மானும் ஒன்றாயிற்றே. அதை அவர் என்ன செய்தார்? யானையை உரித்ததுபோல் உரித்தனரா? அல்லது முயலகனைத் திருவடியால் அழுத்தியதுபோல் அதையும் அழுத்தினரா? இல்லையே. தனது திருக்கரத்தால் எடுத்து "நீ எப்பொழுதும் என் கரத்தின்கண் அமர்க" என்று அருள்செய்தனரே. எவ்வளவு ஆசை அவருக்கு மானிடத்து இருக்கவேண்டும். பெருமானது திருக்கரத்திலமர்ந்து விளங்கும் சிறப்பினைப் பெற்ற மானின் குலத்துதித்த இப் பெண்மானை இவன் கொன்றது முறையல்லவே என்று பலபட நினைக்கின்றார். இந்நினைவெல்லாந் திரண்டது. அது ஒரு சிறிய பாடலாக வெளிவந்தது.

மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கிச்
சிலைநுதலி சீறிச் சினைத்து—கலைபிரிய
இம்மான் கொணர்தல் இழுக்குஎன்னும் ஈங்கோயே
மெய்மான் புணர்ந்தகையான் வெற்பு.

* * * *

பின்னொருநாள்; குறவனுக்குக் குலத்தொழிலைவிட மனமில்லை; காலையில் எழுந்தவுடன் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டான். வேட்டைக்குச் சென்றான். முன்பு வந்த புலவர் இன்றும் வந்தனர். குறவனைத் தொடர்ந்தார். நெடுந்தூரஞ்சென்றும் குறவனுக்கு ஒரு விலங்காவது கண்ணுக்குப் புலப்படவில்லை. இன்னும் சிறிதுதூரஞ் சென்று பார்த்தால் ஏதாவது அகப்படாதா என்ற எண்ணம்கொண்டு நடந்தான். விலங்குகள்

தூரத்தே உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டான். மட்டற்ற மகிழ்ச்சி. வில்லை எடுத்து நிறுத்தினன். அம்பை வைத்துக் குறிபார்த்தான். விலங்கின் பார்வை பளிச்சென்று பட்டது. அப்பார்வை குறத்தியின் மருண்ட பார்வையை நினைவுக்குக் கொண்டுவந்தது. சற்று உற்றுப்பார்த்தான்; நிதானித்தான். ஓகோ இது மான்; அதிலும் பெண்மான்; மானின் பார்வை மங்கையர் பார்வையைப் போலல்லவா இருக்கின்றது. நமது காதலியின் நினைவை இப்பொழுது கொண்டவந்த இம்மானுக்கு நாம் என்ன கைம்மாறுசெய்வது? கொல்ல நினைத்தோமே; என்ன அறிவீனம் என்று கருதினன். கையிற்கொண்ட வில்லைக் கீழே நழுவவிட்டான். மேலும் அதன் இளமை அழகும் குறவனை வசீகரித்தது. ஓசைபடாமல் அருகிற் சென்றான். சென்றவனின் பண்பட்ட உள்ளத்தன்மையை அஃறிணைப்பொருள் எப்படித் தெரிந்துகொள்ளமுடியும். நமக்கு அருகில் வருகின்றான் என்றதைக் கண்டவுடனே மான் அஞ்சித் துள்ளி ஓட ஆரம்பித்தது. ஓடுதல் குறவனுக்கு மனம் பொறுக்கவில்லை. கீழே தவறித் தடுமாறி விழுந்தால் கால்கள் ஒடிந்துவிடுமே; உடம்பிலடிபட்டால் இரத்தம் வருமே என்ற கருணை உள்ளத்தில் தோன்றியது.

"கன்னிமான்! பையப்போ"

என்று மிக அன்போடு சொன்னன். குறவனது இத்தகைய விழுமிய செயலைக் கண்ட அப்புலவர் ஒரு சிறிய வெண்பாவில் அக்கருத்துக்களை அடக்கி நமக்குத் தந்துள்ளார்.

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
கையிற் கணைகளைந்து 'கன்னிமான்!—பையப்போ'
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு.

* * * *

நமது பரமாசாரிய மூர்த்திகளுள் முதலாமவர் திருஞானசம்பந்தப் பிள்ளையார். தமது இளம் பருவத்திலேயே சிவனருளால் சிவஞானம் பெற்று விளங்கியவர். அடியார் கூட்டங்களோடு தல யாத்திரை செய்தவர். யாத்திரையில் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கின்றார் மதுரைமா நகரத்திலிருந்து அரசியார் ஆணையின்படி பிள்ளையாருக்கு அழைப்பு வருகின்றது; பிள்ளையாருடன் அப்பரடிகளும் ஆங்கு உடனுறைகின்றார். அழைப்பிற்காகப் புறப்பட முற்பட்ட பிள்ளையார் இளம் பருவத்தராதலின் அடிகள் அருளுகின்றார்; பிள்ளாய்! அங்குள்ள அமணர்கள் மிக வஞ்சகர்; செல்லல் கூடாது என்று. ஆயினும் பிள்ளையார் இறைவன் திருவடித் துணை எண்ணிப் புறப்பட்டு ஆங்குச் சென்றார். அமைச்சரும் அரசியாரும் எதிர்கொண்டு பணிந்து வரவேற்க ஆலயத்தினுட் சென்று பெருமானை வணங்கிப் பதிகம் பாடி ஆங்கோர் திருமடத்தில் தங்கினர். பொறாமையுற்ற சமணர்கள் தம் சார்பிலிருந்த அரசன் உத்திரவு பெற்றுப் பிள்ளையாருறையும் திருமடத்தில் தீ வைத்தனர். அறிந்த பிள்ளையின் உள்ளம் என்ன எண்ணிற்று? மாதவர் துயிலும் இம்மடத்தின் பக்கம் குற்றச்செயல் செய்கின்றனரே பாவிகள் எனப் பரிவுகொண்டது. என்பொருட்டு செய்தது இத் தீங்கு; ஆயினும் இது அடியவரைச் சாருமோ? சாராது; அரசனெவ்வழி குடிகள் அவ்வழியல்லவா? ஆதலால் இச்செயலுக்குக் காரணம் மன்னவன் என்ற முடிவுகொண்டது. கண்ணுதல் கருணைவெள்ளத்தைக் கண்ணாரக் கண்டு பருகித்திளைக்க பிள்ளையின் திருவுள்ளத்தினின்றும் கருணைச் சொற்கள் தோன்றுகின்றன.

'பையவே சென்று பாண்டியற்கு ஆகு'

எனத் தீயை நோக்கிப் பணித்தது. அன்போடு அளாவிய சொற்களைக் கேட்ட அஃறிணைப் பொருளாகிய தீயும் ஞானசம்பந்தம் பெற்ற ஞானப் பிள்ளைக்கு அடிமைத்தொழில் செய்யும் பேறு பெற்றேமென்று மகிழ்ந்து ஆணையைச் சிரமேற்றாங்கிச் சென்றது. மன்னனைப் பற்றி வெதுப்பத் தொடங்கியது. இவ்வரலாற்றுண்மையைக் கூறவந்த சேக்கிழார்பெருமான் 'பையவே செல்க' என்ற சொற்றொடரைப் பிள்ளையார் கூறவந்த காரணத்துடன் குறித்தருளுகின்றார்.

வன்மைபுரி காயம் மரப்பாவைதன்னை அரன்
கன்மமெனும் சூத்திரத்தால் கட்டியே—நன்மை தின்மை
ஆட்டுவது நாடாது அறிவிலார் தம்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை.

— குருஞானசம்பந்தர்.

விளையாடிய வித்தகன்.

ம. பாலசுப்பிரமணிய முதலியார்.

சைவத்தில் விளையாட்டுக்கு இடமுண்டா? என்று சிலர் கேட்கின்றனர். விபூதிப்பூச்சும், கோயில்வழிபாடும் தான் சைவம்போலும் என்பது இவர்கள் நினைப்பு. இவர்கட்கு வாய்ப்பூட்டு போடுவதற்கென்று அவதரித்த மூர்த்தியே சுந்தரமூர்த்தி சுவாமிகள். விளையாட்டு விளையாட்டு (sports, sports) என்று எங்கு பார்த்தாலும் பேரிரைச்சல் கேட்கின்ற இக்காலத்தில், சைவ நன்மக்கள் ஆயிரத்திருநூறு ஆண்டுகட்குமுன்பே, விளையாட்டுக் கலை வளர்ச்சியில் மிக்க உயர்வுபெற்றிருந்தனர் என்ற செய்தி நமக்குப் பெருமைதரும். இதைச் சிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆரூரிற் புற்றிடங்கொண்ட பரமன் தனது அசரீரி வாக்காக, நம்பி ஆரூரருக்கு "நின்வேட்கைதீர வாழி மண்மேல் விளையாடுவாய்" என்று கட்டளையிட்டனன். சுந்தரரும் விளையாட்டில் நிரம்பவும் ஈடுபட்டு இருந்த செய்தியைப் பல இடங்களிற் காண்கிறோம். அவர் நல்ல உரம்பெற்ற உடல் நலமுடையவர், திரண்ட தோள்வலியுடையவர், கம்பீரமான நடையுடையவர் என்பவற்றிற்கு, அவர் திருவாக்கிலேயே அகச் சான்றுகள் நிரம்பவுள்ளன. "மலைமலிந்த தோள் ஊரன் வனப்பகையப்பன், மல்லின் மல்கு திரள் தோள் ஊரன், திருமருவும் திரள்தோளான்" என்று முறையே திருக்கருப்பறியலூர்ப் பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், காந்தாரப் பண்ணில் திருவாரூர்ப் பதிகம் ஆகிய இவைகளின் ஈற்றுச் செய்யுள்களில் தம்மைக் குறிப்பதை நோக்குக. கானாட்டுமுள்ளூர்ப் பதிகத்தில் "**மதயானை** நாவலாரூரன்" என்பதையும் நோக்குக. "உள்ளக் களிப்பினொடும் வென்றி **அடல்விடைபோல்** நடந்து" என்று இவர் நடையழகைச் சேக்கிழார் புகழ்ந்துள்ளார் (தடுத்-129)

இவர் உலகபோகத்தை வெறுக்காது (ஆனால் அதிலேயே தோய்ந்து கடவுளையே மறக்கும், மறுக்கும், பலரைப்போலல்லாது) நிரம்ப அநுபவித்தார். "மாளிகை மருங்கு சோலை போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச் சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவிசு" முதலியன இவர் வாழ்க்கைக்கு இன்பமளித்தன (தடுத்-183). இவர் "பரவையெனும் மின்னிடையாளுடன் கூடி **விளையாடிச்** செல்கின்றார்" (தடுத்-182) இவர் திருவாரூர் வீதியிற் செல்லும்போது "கைக்கிடா குரங்கு கோழி சிவல் கவுதாரி பற்றிப் பக்கமுன் போதுவார்கள் பயில்மொழிபற்றிச் சென்றனர் (ஷை 187) தமக்கு இன்பநுகர்ச்சிப் பொருள்களாகத் திருநாகைக் காரோணப் பதிகத்தில் இவர் வேண்டியவைகளைத் தொகுத்துப் பார்த்தால், வேறு எவரும் அக்காலத்தில் எதையும் கேட்டிருக்கமுடியாதென்றே தோன்றும். "முத்தாரம், மணிவயிரக்கோவை, மெய்க்கினிதாநாறும் கத்தூரி, கமழ்சாந்து, காம்பினொடு நேத்திரங்கள், ஆரூர் புகப்பெய்த அருநிதியமதனில் முக்கூறில் ஒருகூறு, காற்றனைய கடும்பரிமா, பொற்சுரிகை, பொற்பூ, பட்டிகை, கறிவிரவு நெய்சோறு முப்போதும்" வேண்டினார். வேண்டியவாறே பெற்றார் என்று சேக்கிழார் கூறுகிறார் (கழறிற்-63). இவற்றிலிருந்து சிவபெருமான் திருக்குறிப்பும் நன்கு விளங்குகின்றது. உலகபோகத்தை ஒரு சிறிதும் குறைவின்றி ஆழமாக முகந்த செய்தியைத் திருநொடித்தான்மலைப்பதிகம் தெரிவிக்கின்றது "வாழ்வையுகந்த நெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு **ஆழமுகந்த** என்னை"

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரைக் காணத் திருவாரூர் சென்றார். அறுசுவை விருந்து அவருக்கும் பரிசனங்கட்கும் அளிக்கப் பெற்றது. அத்துடன் சுந்தரர் நின்றாரில்லை.

"நங்கள்பிரான் **அருள்மறவா நல் விளையாட்டினை** நயந்தார்" (கழறிற்-125). இவ்விளையாட்டு வகைகளைச் சேக்கிழார் அடுத்த பாட்டில் விவரிக்கிறார்:—

"நிலைச்செண்டும் பரிச்செண்டும்
வீசிமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல்
கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால்
வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின்
அமர் விரும்பி அமர்கின்றார்"

இவ்விளையாட்டு வகைகளை இக்காலத்திய polo, bull-fight, cock-fight முதலியவற்றோடு ஒப்பிடலாம். சேரமான் பெருமாள் நாயனர் அழைக்க, நம்பியாரூரர் மலைநாடு செல்கின்றார். அங்கு அவருக்கு நடந்த உபசாரங்களுள் பல விளையாடல்களும் இடம்பெற்றன. செண்டு ஆட்டம், நீர்விளையாட்டு, தண்டாம், யானைப் போர், மற்போர் முதலியன இங்கு குறிக்கப் பெறுகின்றன (கழறிற் 155).

இங்கே கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. இவர்கள் விளையாட்டெல்லாம் அருளுக்கு மாறாகக் கொலையும் துன்பமும்விளைவிப்பன அல்ல. இக்காலத்தில் ஐரோப்பிய அமெரிக்க நாகரிகங்களில் Pigeon shooting, Hunting, Fishing (புறாக்களைச் சுட்டுக் கொல்லுதல், நரிவேட்டை, மீன்பிடித்தல்) முதலியன உயர்ந்த விளையாட்டு வகைகளாகக் கருதப்படுகின்றன. ஒருமணி நேரத்தில் 500 புறாக்களைத் துப்பாக்கியால் சுட்டான், 1000 சுட்டான் என்பதே பெருமையாகத் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவருவதுண்டு. குதிரைமேலேறிப் பலவாறாகத் துரத்திச் சென்று, பதுங்கமுடியாமல் ஓட்டமெடுக்கும் ஏழை நரியைச் சுட்டுக்கொல்வது இக்காலத்தில் வேட்டை எனப்படுகிறது. மீனை ஒருமுனையிலும் முட்டாளை ஒருமுனையிலும் உடையது மீன்பிடிக்கும் கோல் என்றார் டாக்டர் ஜான்ஸன் (A fishing rod is a rod with a fish at one end and a fool at the other) இவைகள் "இன்னார் யார்" (Who is who) என்ற புத்தகத்தில் பல பிரமுகர்கள் விளையாட்டாகக் குறிக்கப்பெறும் பெருமையுடைத்து மேல்நாட்டு நாகரிகம். சைவர்கள் விளையாட்டு; என்றும் நங்கள்பிரான் **அருள்மறவா** நல் விளையாட்டாகவே திகழ்க.

ஆனல், விளையாட்டிலேயே மூழ்கிக்கிடந்து, ஆண்டவனை அறவேமறக்கும் வீணரும் சிலருண்டு. விளையாட்டே கூடாதென்று எப்போதும் பொறிபுலன் நுகர்ச்சிகளையே ஒழிக்கும் வீணரும் உண்டு. (பொறியில் சமண் என்று ஞானசம்பந்தர் பல இடங்களிற் கூறுவதை நினைவுகூர்க). பட்டினத்தடிகள் திருஇடைமருதூர் மும்மணிக்கோவையில் "புண்ணிய புராதன!" என்று தொடங்கும் செய்யுளை நாம் நன்கு உணர்தல்வேண்டும். முற்றத் துறந்த அடிகள் எச்சரிக்கை செய்வது யாது? "பலபல மாக்கள், மக்களை மனைவியை ஒக்கலை ஓரீஇ, மனையும் பிறவும் துறந்து நினைவரும் காடும் மலையும் புக்கு...உண்ணு துழன்றும்... யாக்கையைத் தளர்வித்து...சாலவும் ஒறுப்பர்; ....யாங்கள் எல்லாம்....அறுசுவை அடிசில் வறிது இனிதருந்தாது ஆடினர்க்கென்றும் பாடினர்க்கென்றும், வாடினர்க்கென்றும்வரையாது கொடுத்தும்....ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து... இவ்வகை இருந்தோமாயினும் அவ்வகை மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த முத்தியும் இழந்திலம் முதல்வ! ... நலத்தின் வழார் நின் நாமம் நவின்றோரே" என்ற உபதேசத்தை என்றும் மறவாது, வாழ்க்கையில் அனுஷ்டித்து அருள்மறவா நல்விளையாட்டில் ஈடுபடுதலே சைவர் கடமையாகும்.

எனவே, உலகெங்கும் விளையாட்டுப் போட்டிகள் நித்தியமாக நடைபெறும் இக்காலத்தில், ஆஸ்திரேலியாவில் இந்திய விளையாட்டுக் குழுவினர் புகழ்பரப்பும் இம் மாதத்தில், சைவர்களும் அருள்மறவா விளையாட்டினை மேற்கொள்வார்களாக. விளையாடிய வித்தகனும் நம்பியாரூரன் அருளும், திருத்தருமபுர ஆதீனத்தின் பொருளும் இதற்குத் துணை செய்வதாக.



சிறு குறும்பு

வித்துவான். ச. தண்டபாணி தேசிகர்.

உலகமே ஒரு நாடகமேடை. நாமெல்லாம் நாடக பாத்திரங்கள். நாம் நுகரும் இன்பத் துன்பங்கள் நாடகத்தில் நுகரும் சோக, வீர, காம முதலிய சுவைகள். நாடகத்துள் நாடகம் (அந்தர்நாடகம்) நமது குடும்பவாழ்க்கை. நம்முடைய கூட்டுறவை ஒரு தவயோகியார் அவர்தான் வள்ளுவர் 'கூத்தாட்டு அவைக்குழாத் தற்று' என்பர். குடும்ப நாடகத்தில் சிறந்த நடிகர்கள் ஒருவனும் ஒருத்தியும். அவர்கள் நடிப்பில் விருந்துண்டு. ஏழைகட்கு இரங்கி உணவளிப்பது நடக்கும். துறந்தார்க்குத் துணையாக, திக்கற்றவர்களுக்குப் பெருந்துணையாக எல்லாவுதவிகளும் நடைபெறும். அத்தகைய குடும்ப நாடகம் நடிப்பார்க்கும் இன்பம். பார்ப்பவர்க்கும் இன்பம். நடிகர் சுவைத்து நடிக்காத நாடகம் உப்பில்லாக்கறி. தான் நுகராதவன் பிறரை எப்படி நுகரச்செய்ய முடியும். அப்படியேதான் கல்வியிலும். இசைத் தட்டுக்குணர்ச்சியில்லை. இசைப்புலவர் பாட்டில் நேரே எழுச்சி தோன்றுமாறுபோல தட்டுக் கேள்வியில் உணர்ச்சியும் தட்டித்தான் போகிறது. அதுபோலன்றிக் குடும்ப நாடகம் நடிப்பவர்க்கும் இன்பம். பார்ப்பவர்க்கும் இன்பம். அந்நாடகத்தில், இன்பத்தின்விளைவு குழந்தைகள். நாடகத்தின் பெரும்பயன் யாவும் குழந்தைகளின் பெருக்கத்தையும் பிறக்கத்தையும் பொறுத்தேயிருக்கின்றன.

குழந்தைகளும் மரப்பாவைபோல வைத்த இடத்தில் வைத்தபடி இருந்தால் மகிழ்ச்சியில்லை. குழந்தைகள் கையைக் காலை அசைக்கப் பரபரக்கவேண்டும்; உண்ணவேண்டும்; உடல் பருக்கவேண்டும் என்று பரபரக்க வேண்டும் முதலில். பின்னர் உற்றுநோக்க வேண்டும். பலநிறங்கள் கலந்த பொருள்களைப் பார்க்கவேண்டும் பற்றவேண்டும் என்ற பரபரப்பு. அதனால் உடலும், உணர்வும் ஒரு மிக்க வளர்கின்றன. பின்னர் கொட்ட, வார, கவிழ்க்க, தூக்க, பிசைய, குடிக்க விரும்பும். இவைகள் எல்லாம் அந்தக் குழந்தை நடிகருடைய கூத்துக்கள். இந்தக் கூத்துக்கள் ஒரு கோவையாக முறையாக இரா. ஆயினும் பெரு நடிகருடைய பாவநிறைந்த (மெய்ப்பாடு) கூத்தைக்காட்டிலும் இதனிடத்து எல்லாருக்குமே ஒரு தனி மகிழ்ச்சி. யாழின் கோணவிடத்தும் ஒரு அழகு இல்லையா? வளைந்து வளைந்து செல்கின்ற ஆறுதானே தேங்கித் தேங்கி நீரை நிறைத்துச் செல்கிறது. அதுபோலக் குழந்தைகளின் கோணற் குறும்புகளுக்காகவே உலகம் காத்திருக்கிறது. உவகை மலிகிறது. ஒரு புலவர் மிகவிரிவாகக் 'குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும், நெய்யுடையடிசில் மெய்பெற விதிர்த்தும்' என்று கூத்தியலைக் குறித்தார். ஒருவர் மிகமிகச் சுருக்கமாக 'மக்கள் சிறுகை யளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிது' என்றார். சுருக்கியோ பெருக்கியோ எல்லாருஞ் சொன்னதென்ன! குழந்தைநாடகம் எல்லாரானும் விரும்பப்பெறுவது என்பதுதானே!

அந்தக் குழந்தை ஐந்தாறு ஆண்டு நிரம்பியபின் நடிக்கும் நடிப்போ இன்னதன்மையதென்று சொல்லமுடியாது. அந்த நிலைக்குத்தான் சிறுகுறும்பு என்று பெயர். செய்வது

என்னமோ தவறுதான். தவறிழைத்தால் கோபந்தான் வரவேண்டும். குழைந்தைமை (மகன்மை) வந்து குறுக்கிடும். கோபம் மாறும். மனக்களத்திலேயே கோபமும் சாந்தமும் குத்துச்சண்டையிடும். குறும்பைக்கண்ட வெறுப்புணர்ச்சி கோபத்திற்குத் தூபம் போடும். மகன்மை சாந்தத்திற்குத் துணையாக இருந்து வெற்றிகாட்டும். கோபந் தோற்கும். சாந்தம் வெல்லும். குழந்தைகள் குறும்பு செய்யும்போது 'ஒரு புத்தி நுணுக்கம் இழுக்கிறது பாருங்கள்' என்று பாராட்டச்செய்யும். விஷமக்காரன்தான்; மேதாவி; சுறுசுறுப்புக்காரன் என்றெல்லாம் சொல்லச்செய்யும் இத்தகைய குடும்ப நாடகம் நமக்கு எப்படி வந்தது. நமக்குக் கற்றுக்கொடுத்தது யார். நாடக வாத்தியாரை நினையாவிடின் நாடகம் உருப்படுமா? மொழிப்பயிற்சியில் வாத்தியாருக்கு என்ன தெரியும் என்று சொல்லுகிற மாணவர்கள் இருந்தாலும் இசையினும், கூத்திலும் இருப்பதில்லையே! ஆதலால் நாடக வாத்தியார் யார்? அவர்தான் சோமாஸ்கந்தர். போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைக் கொடுத்தும், யோகியாயிருந்து யோகநல்லுணர்வளித்தும் ஆட்டுவிக்கும் ஆசிரியர். அம்மையும் அப்பரும் ஆகிய ஒருவனும் ஒருத்தியும் அவர்தான். அவர்கள் குடும்ப நாடகமே உலகிற்கு வழிகாட்டி. அவர்கள் உண்மையும் உணர்வுமாக (சத்தும் சித்துமாக) ஒன்றிக் குடும்பம் நடத்துகின்றார்கள். உண்மையும் உணர்வும் இன்பத்தையளிப்பன. பொய்ம்மையும் அறியாமையுமே துன்பவித்துக்கள். அந்த இன்பமே செல்வமுத்துக்குமரன். அவன் குறும்பு எல்லாக் குறும்புகட்கும் வழிகாட்டுங் குறும்பாக வல்லவா இருக்கும்.

1. அம்மை மடிமீது குழந்தைக் குமரனை வைத்திருக்கிறாள். குழந்தை வாயிலிருந்து வாணி வடிகிறது. அதனால் அம்மையின் மடிக்கலமே நனைந்துவிடுகிறது. ஆறுநாளில் அனைத்துலகிற்கும் ஆநந்தம் அளிக்கும் குழந்தை மடியிலேயே கிடக்குமா? மடிமீது தவழ்ந்து ஏறுகிறது. அதனுடைய சிறுகால்கள் அம்மையின் அடிவயிற்றில் படுகின்றன. அப்போது அம்மைக்கு உண்டாகின்ற இன்பப்பெருக்கு அளவிட்டுச் சொல்லக்கூடியதா! இல்லை. இல்லை. அப்படியே வயிறுகுளிர்ந்துவிடுகிறது.

2. அங்கிருந்து வலப்பக்கத்து இருக்கும் தகப்பன் மார்பில் தாவுகிறது. மார்பு விரிந்த அகன்ற இடம். அது அரங்குப்போல இந்தக் குழந்தைக்குத் தோற்றியிருக்கவேண்டும். அங்கே கூத்தாடுகிறது.

3. அங்கிருந்தும் பெருமான் திருக்கரத்து உடுக்கையைப் பார்த்துவிட்டது. அதனைத் தனது சிறுபறையென்று எண்ணி அடித்தது.

4. பின்னர் இறைவனின் திருக்கரம் ஒன்றில் நெருப்பு விடாமல் எரிந்துகொண்டிருப்பதைப் பார்த்தது. உடனே இறைவன் திருச்சடையொன்றையெடுத்து அதிற் பிடித்தது. அதிலிருந்து கங்கை நீர் வழிய, தீயை அவித்துவிட்டது. இந்த அக்கினி ஆன்மாக்கள் யாவும் களைப்பாறச்செய்யும் சங்காரகிருத்தியம் செய்வது. அது இல்லையானால் சங்காரகிருத்தியம் நிறைவேறாது என்ற இன்றியமையாமை அந்தக் குழந்தைக்காதெரியும்.

5. பக்கத்தில் சடைக்காட்டில் வாயைப் பிளந்துகொண்டு காத்திருக்கிறது மூர்க்கப் பாம்பு. மதியை விழுங்கவேண்டும் என்ற ஆசைதான் அதற்கு. ஆனால் இடம் ஒத்ததாக இல்லை. பகை மூலமலத்தின் முனைப்பால் எழுவது. இருக்கும் இடமோ முனைப்படங்கிய இடமாகிய முடி. அங்குப் பகையில்லை. அதனால் ஒய்வு. ஆயினும் சாதிக்குணமாகிய ஆசைமட்டும் போகவில்லை; விழுங்கச் சமயம்பார்த்திருக்கிறது. அதனைக்கண்டதா இந்தக் குழந்தை. பக்கத்துள்ள மதியைக்கண்டது. மதியோ அழிவுக்கஞ்சி அடைக்கலம் புகுந்தது. அடைக்கலம் புகுந்த அந்நாள் முதல் அச்சம் ஒழிந்து இருந்தது. அச்சமகன்ற இடந்தான் உண்மையான உறுதியான இன்பநிலைக்களம். அதனை எய்தியிருந்தது இந்தப்பிறை. இந்நிலையைத் தான் இந்தக்குழந்தை கண்டதா? மதியைப் பிடித்தது; அரவின்வாயில் அடைத்துவிட்டது

அரவிற்கும் இப்போது ஒரு தர்மசங்கடமான நிலை; விழுங்குவதா? விடுவதா? இரண்டும் முடியவில்லை அப்படியே வைத்திருக்கிறது.

6. இறைவன் திருமுடியிலே அன்பர்கள் சாத்திய அறுகு தளிர்த்துப் பசுமையாக இருக்கின்றது. இறைவன் இடக்கரத்திலிருக்கும் மான் தாருகாவன மகரிஷிகள் காலத்தில் வந்துசேர்ந்தது. அதன் தாங்கமுடியாத ஒலியைத் தடுக்க இறைவன் கரத்தில் ஏந்தினார். ஏந்தின அவர் ஒரொருக்காலேனும் மேய்வதற்காக அதனைக் கீழே விட்டார் இல்லை. அதற்கோ முதுபசி. அதனாலே அறுகைப் பார்த்துத் தன்மெல்லிய நாக்கை நீட்டிநீட்டித் துழாவுகிறது. இந்தமானின் இரங்கத்தக்க நிலை இளங் குழந்தையின் மனத்தை இளக்கி விட்டது. உடனே அறுகையள்ளி அதற்குக் கொடுத்தது. மானும்மகிழ்ந்தது. குழந்தையும் சிரித்தது. மானுக்குப் பெற்ற மகிழ்ச்சி. குழந்தைக்குக் கொடுத்த மகிழ்ச்சி. "ஈத்துஉவக்குமின்பம் அறியார்கொல்" என்றல்லவா வள்ளுவர்கூட கொடுக்குமின்பத்தைக் காட்டுகின்றார்.

7. இக்குழந்தை இவ்வண்ணம் இறைவன் திருமேனிமேல் விளையாடுவதால் வெண்ணீறு பறக்க அதனால் மேனியெல்லாம் புழுதிபடிகிறது. அதனால் குழந்தையின் செம்மேனி ஒளி மறைகிறது. அதனால் அம்மை சிறுகோபஞ் செய்கிறாள். குழந்தையே இறைவன் சடைக் காட்டில் ஓடிக்கொண்டிருக்கின்ற சிவகங்கையில் போய் முழுகித் துளையம்போடுகிறது. குழந்தையின் கண்கள் கொவ்வைப்பழம்போல் ஆயின. அம்மைகண்டு 'அப்பா கண் சிவந்து விட்டது கறைபோறடா' என்கின்றாள். குழந்தை கண்டதா தாய்மையின் தவிப்பை. மேலும் துளையமாடுகின்றது.

இப்படி யெல்லாம் சொன்னபேச்சைக் கேட்காமல் தோள்மீதும், தாள்மீதும், தலைமீதும் ஏறிக்குதித்துக் கூத்தாடும் குறும்புகளைக்கண்டு அவர்கள் (அம்மையும் - அப்பரும்) சினந்திருப்பார்களா! கனிந்திருப்பார்களா! சொல்லுங்கள். ஆனால் குமரகுருபர சுவாமிகள் "பெருங்களிவரச் சிறுகுறும்பு செய்தவன்" என்று சொல்கிறார்கள். ஆனால் இதில்யாருக்கு என்று அவர்கள் வெளிப்படையாகச் சொல்லவில்லை. நாம்கொள்ளக்குறிப்பின் வைத்தார்கள். கண்ட தாய்க்கும் தந்தைக்கும் குறும்புசெய்கின்ற குழந்தைக்கும் பெரு மகிழ்ச்சி பிறந்திருக்கும்.

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகில் மடித்தல நனைப்பவம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான் மார்பினிற் குரவையாடி
முழுவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனல் மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின் முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு வெள்ளநீர்த் துளயமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான்

வித்துவான், தி. பட்டுச்சாமி ஓதுவார்.

'சோழவளநாடு சோறுடைத்து' என்று ஆன்றோரால் போற்றப்பெற்ற சோழவள நாட்டின்கண் பிறக்க முத்தியினையளிக்கும் திருவாரூரில் சுத்த சைவ மரபில் [1]**வெள்ளியம்பலவாணத்தம்பிரான்** தோன்றியவராவர். இவர் இளம் பருவத்திலேயே தம் தந்தையாரிடம் தமிழ் நெடுங்கணக்கைப் பயின்று நற்குணம், நற்செயல், நுண்ணறிவு, வாக்குவன்மை, கடவுள் பக்தி முதலியவைகளைப் பெற்றுத் திகழ்ந்தார். நல்வினைப்பேற்றால் பெற்றோர் அனுமதியின்படி உரியகாலத்தே திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்து நான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த [2]**ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணிதேசிக பரமாசாரிய சுவாமிகளை** அடைந்து [3]சமய விசேட தீட்சைகளையும் யாத்திரா காஷாயமும் பெற்றுச் சைவ சமயவொழுக்கத்தில் மிக ஈடுபட்டு விளங்கினர்.

பின்னர், சிறந்த கல்வியறிவு பெறும் பொருட்டுக் காசிக்குச்சென்று கேதார கட்டத்தின் அருகிலுள்ள குமாரசுவாமி மடத்தில் பல தருமங்களை நடாத்திக்கொண்டு சிவானுபூதிச் செல்வராக எழுந்தருளியிருந்த [4]ஸ்ரீ குமரகுருபர **சுவாமிகளிடம்** வடமொழி தென்மொழி

---

[1]இவர் திருவாரூரில் தோன்றியவர் என்பதை, "கமலை வெள்ளியம்பலவாண முனிவன்" எனவரும் மூதுமொழி மேல்வைப்பின் சிறப்புப்பாயிர அடியினாலும், "கமலை வெள்ளியம்பலவாண னடித்தாமரை சென்றடைமின்களே" எனவரும் ஞானாவரண விளக்கத்தின் அருப்பத விவேக உரையில் கண்ட இவர் தோத்திர அடியினாலும் அறியலாம். (கமலை - திருவாரூர்)

[2]இவர்கள், கி. பி. 17ம் நூற்றாண்டின் முற்பகுதியின் இடையில் விளங்கியவர்; ஞானச் செங்கோல் நடாத்தி வருங்கால் ஒருநாள் அடியவர்கள் தமக்குச் செய்த பாதபூசை மலர்கள் சைவத் திருமுறை யேடுகள்மீது இருக்கக்காட்டியவர்கள்; தம் தவவலிமையைக்கொண்டு தம் தாயாருக்கு அத்துவசோதனைபுரிந்து உடனே முத்தியினை அளித்தருளியவர்கள்; அரவம்தீண்டி இறந்த ஒருவனை எழுப்பியருளியவர்கள்; ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் முதலியோர்க்கு ஞானாசாரியராகத் திகழ்ந்தவர்கள்.

[3]சைவத் துறவு கொள்வோர் முன்பு யாத்திராகாஷாயம் பெற்றுப் பரதேசியாகி, யாத்திரை முடித்துவந்த பிறகு மந்திரகாஷாயம் செய்வது மரபு; அதன்பிறகே தம்பிரான் அல்லது முனிவர் என்று அழைக்கப்பெறுவர்.

[4]இவர்கள் பாண்டியநாட்டு ஸ்ரீ வைகுண்டம் என்னும் கைலாசபுரத்தில் சைவ வேளாளர் குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயரும் சிவகாமியம்மையாரும் செய்த தவப்பயனால் உதித்தவர்; முருகப்பெருமான் அருளும் கலைமகள் அருளும் பெற்று ஓதாதுணர்ந்து கவித்துவமும் தெய்வசக்தியும் வாய்ந்தவர்; மதுரையை (கி. பி. 1622–1659) ஆண்ட திருமலைநாயக்கரால் ஆதரிக்கப்பெற்றவர்; தருமையாதீனம் 4வது பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றவர்; ஞானாசிரியரின் கட்டளைப்படி காசிக்குச்சென்று சைவசமயத்தை வளர்க்க, டில்லி பாதுஷாவின் நவாபைஅங்கே (கி. பி. 1658க்குமேல்) கண்டு அவரது ஆதரவைக் கொண்டவர்; பல பிரபந்தங்கள் இயற்றிப் பெரும் புகழ் படைத்தவர்.

இரண்டையும் நன்கு பயின்று இலக்கணம் இலக்கியம் தருக்கம் முதலியவற்றில் மிகத் தேர்ச்சிபெறலானார். அதன்பின்னர் தருமபுரம் வந்து ஐந்தாவது குருமூர்த்திகளாகிய [1]ஸ்ரீ-ல-ஸ்ரீ **ஞானசம்பந்த தேசிக பரமாசாரியரிடம்** மந்திர காஷாயமும் (சைவ சந்நியாசமும்) ஞான தீட்சையும் ஞான பூசையும் '**வெள்ளியம்பல வாணத் தம்பிரான்**' என்னும் தீட்சாநாமமும் பெற்று, அவர்கள் திருமுன் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் பண்டார சாத்திரங்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்தார். இவர் தம் ஆசிரியர்களிடம் கற்ற அளவிலே அமையாது மீட்டும் மீட்டும் பல நூல்களையும் தேடி நுணுக்கம்பெற கற்றுக் கவிபாடும் திறமையும், கலைபயில்வோர் மனங்கொளக் கற்பிக்குஞ் செயலும், புராணப் பிரசங்கம் செய்யும் ஆற்றலும், சிவஞானத் தெளிவும் பெற்று அடியார் குழாத்துடன் தருமையம்பதியில் வசித்துவரலானார். அப்போது தம்மையடுத்த பல மாணவர்களுக்குக் கல்வி புகட்டிக்கொண்டுவந்தார். அதனால் இவரது புகழ் எங்கும் சிறந்து ஓங்கிப் பரவலாயிற்று.

பன்னாட்கள் சென்றபின், வெள்ளியம்பலவாணத் தம்பிரான் குருநாதர் அநுமதிப்படி சிவத்தல யாத்திரை செய்துகொண்டு வரும்போது புள்ளிருக்குவேளூர், திருமாணக்குடி முதலான தலங்களிலே சிற்சில திருப்பணிகள் புரிந்தார்; திருவெண்காட்டில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் திருச்சபை ஒன்றும் அமைத்தார். ஆங்காங்குள்ள அன்பர் வேண்டுகோட்கிணங்கிப் பல புராணப் பிரசங்கங்கள் செய்து சைவமும் தமிழும் தழைத்தோங்கச்செய்தார். பிறகு தென்தேச யாத்திரையாகச் சென்று மதுரை திருநெல்வேலி முதலிய தலங்களை வழிபட்டுத் திருச்செந்தூரை அடைந்து முருகக் கடவுளைத் தரிசித்து ஆங்குள்ள அடியவர்கள் விருப்பிற்கு இசைந்து சண்முகவிலாசத்தில் புராணப்பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தனர். அச்சமயம் கல்விச் செருக்குற்ற ஒரு புலவன் தம்பிரானின் கல்விப்பெருக்கைக் கண்டு, அழுக்காறுகொண்டு வீண் குதர்க்க வாதம் செய்து இகழ்ந்துபேசத் தொடங்கினான். அப்பொழுது தம்பிரான் அப்புலவனைநோக்கி, "யாம் உன்னிடத்தில் நேரில்நின்று வாதம் புரிவதற்கு நீ தக்கவன் அல்லை; ஆதலால் எம் மாணாக்கனைக்கொண்டே உன்னை வெற்றி கொள்வேம்" என்று கூறிச் சொற்பொழிவைச் சிறப்பாகச் செய்து முடித்துவிட்டுத் திருநெல்வேலி பொருநைநதிக் கரையிலுள்ள சிந்துபூந்துறையில் திகழும் தம் தருமையாதீன மடாலயத்தை அடைந்து, அங்கே தம்மையடுத்த பல மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்துக்கொண்டு சிறந்த போதகாசிரியராக வீற்றிருந்தார்.

அக்காலத்திலே, 'கற்பனைக் களஞ்சியம்,' 'புலவர்சிகாமணி' எனப் போற்றப்படும் துறைமங்கலம் [2]**சிவப்பிரகாச அடிகள்** தம் தந்தையாரிடம் கல்வி கற்றாரேனும் பேரிலக்கணங்களை மிகக் கற்க விரும்பித் தம் சகோதரர்களாகிய **வேலையர், கருணைப்பிரகாசர்** என்னும் இருவரோடும் கச்சிப்பதியினின்றும் தென்னாடு அடைந்து சிந்துபூந்துறையில் வசித்துவரும் வெள்ளியம்பலவாணத் தம்பிரானைக் கண்டு

---

[1]இவர்கள் கி. பி. 17ம் நூற்றாண்டின் இடைப்பகுதியின் இறுதியின் முதலில் விளங்கியவர்கள்; தென்தேச யாத்திரையாகத் திருக்குற்றால மலைக்கு எழுந்தருளியபோது, அங்கு மக்களுக்குத் துன்பமளித்த சித்திராநதியின் வெள்ளப் பெருக்கைத் தம் அருள்நோக்கால் குறைவுபடுத்தி மக்களை இன்புற்றுவாழச்செய்தவர்கள்.

[2]இவர்கள், உரியகாலத்தே சிவலிங்கதாரண தீட்சையைப் பெற்றுத் துறவுபூண்டு வீர சைவ மதத்தைக் கைக்கொண்டவர்; திரிசிரபுரத்தை அடுத்த பெரும்பலூருக்குக் கீழ்ப்பாகத்தில் சுமார் 7, 8 கட்டைத் தொலைவிலுள்ள துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியாரால் ஆதரிக்கப்பட்டவர்; பெரும்பாலும் துறைமங்கலத்தில் வசித்துவந்தமையால் **துறைமங்கலம் சிவப்பிரகாசர்** எனப் பெயர்பெற்றவர்; பல நூல்களை இயற்றிப் பெரும் புகழ்படைத்தவர்; பிரபுலிங்கலீலை என்னும் நூலை, கி. பி. 1652ம் ஆண்டு இயற்றியவர்; புதுவையை அடுத்த நல்லாற்றூரில் பரிபூரணமடைந்தவர்.

தரிசித்து வணங்கித் தம் கருத்தை விண்ணப்பித்துக்கொண்டனர். அப்போது, வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சிவப்பிரகாசருடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு, "கு என்பதை முதலிலும் கடையிலும், ஊருடையான் என்பதை இடையிலும் வரும்படி வெண்பா ஒன்று பாடுக" என்று கட்டளையிட்டார். உடனே சிவப்பிரகாசர்,

"குடக்கோடு வான்எயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வார்க்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைத்தோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு"

என்னும் வெண்பாவைப் பாடினர். இவ்வெண்பாவில் 'வடக்கோடு தேருடையான் என்னும் சொல்லாக்க நயத்தைக்கண்டு தம்பிரான் சுவாமிகள் மிக வியந்து பாராட்டித் தாம் அரிதினுணர்ந்த பஞ்ச இலட்சணங்களைச் சிவப்பிரகாசருக்கும் அவர் சகோதரர்களுக்கும் சின்னாட்களில் பாடஞ்சொல்லி முடித்தருளினர்கள். அவர்களும் அவைகளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பெரும் புலமை படைத்தனர்.

பிறகு, சிவப்பிரகாசர் தம் வழிச் செலவிற்காகத் துறைமங்கலம் [1]அண்ணாமலைரெட்டியார் அளித்த முன்னூறு பொன்னையும் குரு காணிக்கையாக வைத்து வணங்கியபோது, வித்தியா குருவான வெள்ளியம்பலவாணத் தம்பிரான், "இப்பொருள்மேல் நமக்கு விருப்பமில்லை; திருச்செந்தூரிலே நம்மிடம் வீண் குதர்க்க வாதம் செய்து நம்மை இகழ்ந்து பேசிய புலவனை அடக்கி அவன் வந்து நம்மை வணங்கும்படி செய்தலே குரு காணிக்கையாகும்" என்று மறுத்தருளினர். உடனே சிவப்பிரகாசர் தம் போதகாசிரியரை வணங்கி, அநுமதி பெற்றுக்கொண்டு, ஆங்குள்ள சில மாணவருடன் திருச்செந்தூரை அடைந்து முருகக் கடவுளை வழிபட்டு, வீதிவலம் வரும்போது, முன்பு தம்பிரானிடம் வாதிட்ட புலவர் எதிர்ப்பட்டார். புலவர் சிவப்பிரகாசரை இன்னார் என்று அறிந்தவுடனே அவரையும் எள்ளி நகையாடத் தொடங்கினர். அப்பொழுது சிவப்பிரகாசர் இப் புலவரிடம் விவாதம் செய்வதில் பயனில்லை என்று கருதி, புலவரை நோக்கி, "நாம் இருவரும் [2]நிரோட்டக யமகம் பாடுவோம்; முந்துறப் பாடி முடித்தவர்க்குப் பாடமாட்டாதவர் அடிமையாவர்" என்று வாக்குறுதி செய்துகொண்டனர்; அதற்குப் புலவரும் சம்மதித்துப் பாடமுயன்றனர். சிவப்பிரகாசரோ கடல் மடை திறந்ததுபோலத் திருச்செந்தில் முருகக்கடவுள்மீது நிரோட்டக யமக அந்தாதியாக முப்பது செய்யுள் பாடி முடித்தனர். புலவர், அதுகண்டு தாம் ஒரு செய்யுளேனும் பாடமுடியாமையை உணர்ந்து சிவப்பிரகாசரை வணங்கி, 'யான் தங்கட்கு அடிமையாயினேன்' என்று மிகப் பணிவுடன் மொழிந்தார். உடனே சிவப்பிரகாசர் தமக்கு அடிமையாகிய அப் புலவரைச் சிந்துபூந்துறைக்கு அழைத்துக்கொண்டுவந்து தம் போதகாசிரியருக்கு அடிமையாக்கி வணங்கி நின்றனர். அதுகண்ட வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தம் மாணவரது செயலுக்கு அக மிக மகிழ்ந்து பலவாறு வாழ்த்தினர். பின்னர் சிவப்பிரகாசர் விடைபெற்றுத் தம்மூர்க்குச் சென்றார்.

அதன்பிறகு வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சிந்துபூந்துறையில் பலகாலம் வசித்துவிட்டுச் சிவநேய முதிர்ச்சியால் மற்றைய

[1]இவர் துறைமங்கலத்திற்குச் சமீபித்த வெங்கனூரில் (வெங்கையில்) சகம் 1545 (கி. பி. 1623)ம் ஆண்டு சிவாலயத் திருப்பணிபுரிந்த லிங்கா ரெட்டியாரின் புதல்வர்; பெருஞ் செல்வம்படைத்த நிலக்கிழவர்; ஈகையும் அன்பும் உடையவர்; கற்றோரை ஆதரிக்கும் பெருங்குணம் படைத்தவர்.

[2]இஃது இதழ் முயற்சியாற் பிறப்பனவாகிய உ, ஊ, ஒ, ஓ, ஔ; ப, ம, வ என்னும் எழுத்துக்கள் வாரமல் பாடப்படுவது. நிரோட்யம் என்பது நிரோட்டம் என நின்றது; நிர் - இன்மை; ஒட்டியம் - ஒட்டசம்பந்த முடையது. ஓட்டம் - உதடு.

சிவத்தலங்களையும் தரிசித்து வழிபாடு புரிந்து, இறுதியாகச் சிதம்பரத்தை அடைந்து, அங்கு மிகப் [1]பற்றுடையவராய் இடைவிடாது பொன்னம்பலவன் பொற்கழலை வணங்கிக் கொண்டுவந்தார். அப்போது சபாநாயகர் ஆலயத்துள் பொதுச்சபை ஒன்றும் கட்டி முடித்தார்.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் [2]ஸ்ரீ குருஞானசம்பந்தர்மீது சமூகமாலை திருப்பள்ளி யெழுச்சி, தாலாட்டு ஆகிய நூல்களையும், மிருகேந்திர ஆகம மொழிபெயர்ப்பு, முதுமொழி மேல்வைப்பு முதலியவற்றையும் இயற்றியருளினார்கள். சிவஞானசித்தியாருக்கு ஞானாவரண விளக்கம் என்ற ஒரு பேருரையும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் இயற்றிய முத்திநிச்சயம் என்னும் பண்டார சாத்திரத்திற்குப் பேருரை ஒன்றும் வகுத்து அருளினார்.

இவற்றுள் சமூகமாலை, திருப்பள்ளியெழுச்சி, தாலாட்டு என்ற இம்மூன்றும் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகரின் பெருமை முதலியவற்றைக் கூறும் நூல்கள். மிருகேந்திர ஆகம மொழிபெயர்ப்பு: வடமொழி மிருகேந்திரம் என்னும் உபாகமத்தின் மொழி பெயர்ப்பு. முதுமொழிமேல்வைப்பு: முதுமொழியாகிய திருக்குறளின்மேல் உதாரணங்களையும் விளக்கங்களையும் அமைத்துக் கூறும் நீதிநூல்; இஃது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலுக்குத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளையும், வீட்டின்பாலுக்குக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிய திருவருட்பயனிலுள்ள குறள் வெண்பாக்களையும் மேற்கோளாகக் கொண்டது; சிவசம்பந்தமான செய்திகளையே உதாரண விளக்கங்களாக உடையது. ஞானாவரணவிளக்கம்: சிவஞானசித்தியார் என்னும் சைவ சித்தாந்த நூலுக்குச் செய்த ஒரு [3]பேருரை; இது விளக்க வுரைகளையும், சிவாகமக் கருத்துக்களையும், பல சிவாகமங்களின் மேற்கோள்களையும் மிகக் கொண்டது. முத்திநிச்சயம், சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்து இறண்டறக் கலந்து நிற்பதே முத்தியென்று கூறும் நூல்; இது சிதம்பரத்தில் [4]குகைமடம் என வழங்கும்

---

[1]இதனை "சிதம்பரஞ் சிந்தித்தார் சிவலோக மன்றி, விதந்தறியாரொன்றும்" என்று இவர் கூறும் முதுமொழி மேல் வைப்பு என்னும் நூலின் அடியினால் அறியலாம்.

[2]இவர்கள், பாண்டியநாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றிச் சொக்கலிங்கப்பெருமானை ஆன்மார்த்தமாகக் கொண்டு, கமலை ஞானப்பிரகாசரிடம் ஞானோபதேசம் பெற்று, அரிய தவமுடையவர்களாய்த் தருமபுரம் என்னும் ஊரிலே எழுந்தருளியிருந்து, பல அன்பர்களுக்கும் ஞானோபதேசம் செய்த தருமையாதீன முதற்குரவர்கள் ஆவார்கள்; இவர்களின் அருள்நோக்கால் புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் அருந்தி விளையாடின. ஒரு சமயம் சிதம்பரம் சென்று ஆயிரக்கால் மண்டபத்தில் ஞானநிட்டை கூடியிருக்கும்போது இவர்களுக்குச் சிவகாமியம்மையார் பள்ளியறையில் வைத்திருந்த பாயசம் திருவமுது இரண்டையும் கொண்டுவந்து உண்ணும்படி செய்தருளினர். குகை மறைஞானசம்பந்த தேசிகரை இவர்கள் நேரில் கண்டவர்கள்; பண்டாரக் கலித்துறை, சொக்கநாதக் கலித்துறை, சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முத்திநிச்சயம், நவரத்தினமாலை, சோடசகலாப்பிராசாத ஷட்கம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் முதலிய நூல்களை இயற்றியவர்கள்; வைகாசி கிருஷ்ணபக்ஷம் சப்தமி திதியன்று சிவசமாதி கூடியவர்கள்.

[3]இப்பேருரை பிற்காலத்து எழுந்த சைவ சித்தாந்த பாஷ்யங்கள் எல்லாவற்றிற்கும் பேருதவியாய் இருந்தது.

[4]இது சிதம்பரத்தில் கீழவீதியும் தெற்குவீதியும் கூடும் இடத்தில் இருந்தது என்றும், திருவண்ணாமலை ஐக்கிய வாத சைவராகிய குகைநமச்சிவாயமூர்த்தியின் சீடர் குருநமச்சிவாயர் தம் குருவின் கட்டளைப்படி நடராஜப்பெருமான் ஆலயத் திருப்பணி புரியும்நிமித்தம் இங்குவந்து தங்கிய இடம் ஆதலால் குகைமடம் எனப் பெயர்பெற்றது என்றும் கூறுவர். குருநமச்சிவாயரது மரபில் வந்த சீடர் பலரில் ஒருவர்க்குச் சாலிவாகன சகாப்தம் 1190க்குமேல் செல்லும் யுவஞு தைமீ 20உ சிதம்பரம் சபாநாயகர் சர்வகட்டளைக்கு உடையார்பாளையம் இளங்கம்பூர் கிராமம் சர்வமானியமாக அளிக்கப்பட்டது என்று ஒரு சாசனங் கூறுகிறது. ஆகவே, குகைமடம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது ஆகும். இம்மடம் பிற்காலத்தில் சுத்த சைவரான மறைஞானசம்பந்த தேசிகர் ஆட்சியில் இருந்துவந்தது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இவர் அருணகிரி புராணத்தை கி. பி. 1555ல் இயற்றினார். ஆதலால் இவரது காலம் கி. பி. 16ம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும்.

[1]கண்கட்டி மடத்தில் வீற்றிருந்த மறைஞான சம்பந்த தேசிகர் [2]ஆன்மானந்த வாதக் கொள்கையைப் புகுத்திக் கூறும் 'முத்திநிலை' என்னும் நூலை மறுத்தற்கு எழுந்தது; இருபத்திரண்டு வெண்பாக்களால் அமைந்தது. இதன் பேருரையும் சிற்றுரையும் மிகச் சிறப்பு வாய்ந்தவை. பேருரை '**வெள்ளியம்பலவாண மாபாடியம்**' எனவும் பெயர்பெறும். இது 17ம் நூற்றூண்டின் இடைப்பகுதியில் தருமையாதீனம் 6வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த [3]**ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரியர்** காலத்தில் எழுந்ததாகும். முத்திநிச்சயப் பேருரை சிற்றுரை இரண்டும் வெள்ளியம்பலவாணத் தம்பிரானின் கல்வித் திறம் சமயக்கொள்கை, உரைநடை எழுதும் ஆற்றல் முதலியவற்றை நன்கு புலப்படுத்தும்.

துறைமங்கலம் சிவப்பிரகாசர், வேலையர், கருணைப்பிரகாசர் இம் மூவர்களே அல்லாமல் கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்த சரணலய முனிவர், காவை அம்பலவாணத் தம்பிரான், புன்கூர் சிவப்பிரகாச முனிவர் ஆகிய [4]இம்மூவரும் வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடத்தே கல்வி பயின்றவர் ஆவர்.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சிதம்பரத்தில் பலகாலும் இருந்து, தம்மையடைந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்டிக்கொண்டு வரும் ஒரு நன்னளில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடி நீழலில் இறண்டறக் கலந்தருளினர்.

சிதம்பரம் ஞானப்பிரகாசர் [5]குளத்திற்குத் தென்மேற்கு மூலையில் இன்றும் இவர்கள் சமாதி சிறப்புற விளங்குகின்றது.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளிடம் இவர்களும், இவர்களிடம் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளும் கல்விபயின்றனர். ஆகவே, வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் காலம் கி. பி. 17ம் நூற்றூண்டின் இடைக்காலப் பகுதிகள் ஆகும்.

---

[1]இதில் இழி செயலைப் புரியும் உலகத்தவர்களைக் கண்கொண்டு பார்க்க மனமில்லாது தன் கண்களைத் துணியினுல் கட்டிக்கொண்டு மறைஞான தேசிகர் வாழ்ந்தார். ஆதலால், குகைமடம் **கண்கட்டிமடம்** எனப் பெயர் வழங்கலாயிற்று என்பர்.

[2]இஃது, "ஆன்மாவிற்கு இயற்கையாகவே ஆனந்தம் உண்டு; அஃது ஆணவ முதலியவற்ருல் தடைப்பட்டுள்ளது; அது நீங்குங்கால் ஆனந்தம் வெளிப்படும்; அதுபோழ்து ஆன்மா அவ்வானந்தத்தை அநுபவிக்கும்" என்பதாம்.

[3]இவர்கள் அருட்செங்கோல் செலுத்திவருங்காலத்தில், அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வ்யோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, ஸமனை, உன்மனை" என்னும் பதினறு கலைகளையும் அடக்கியிருந்து யோகம்செய்யும் இடமாகிய **பதினறெடுக்கம்** மிகச் சிறப்புற்று விளங்கியது. அதில் பல அடியார்களும் இரவுபகலின்றி நிஷ்டைகூடி இருந்தனர். (இப் பதினறெடுக்கம் இன்றும் மடாலயத்திலுள்ள ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருத்தளியின் சுவற்றில் அமைந்துள்ளது.) தென்தேச யாத்திரை செய்யும்போது இவர்கள் திருக்குற்ருலத்திற்கு அருகிலுள்ள வேள்விமலையினை அடைந்து முருகனை வழிபட்டார்கள்; அங்கு வள்ளியம்மையின் திருவுருவம் இலக்காகவில்லை; அதனுல், 'இங்கு வள்ளித்தாய் இல்லையோ' என்று வினவினர்கள். "தாய் இதோ இருக்கின்றேன்" என்று வள்ளியம்மையார் திருமேனி விளைந்து காட்சி வழங்கத் தரிசனம்செயதார்கள். இவர்கள் பரிபூரண ஸ்தலம் **திருக்குற்ருலம்** ஆகும்.

[4]**இவர்கள் பிற்காலத்தே தருமையாதீனக் குருமூர்த்திகளிடம் ஞானேபதேசம்பெற்று விளங்கியவர்கள்.**

[5]இக்குளம் ஞானப்பிரகாச முனிவரால் வெட்டப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்தின்கண் உள்ள திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர்; பறங்கியர் காலத்தில் (சுமார் கி. பி. 16ம் நூற்றூண்டின் இடைப்பகுதியில்) ஒரு அதிகாரிக்கு உணவின்நிமித்தம் பசு ஒன்றைக் கொடுக்க நேரும்போது, பயந்து யாழ்ப்பாணத்தைவிட்டுச் சிதம்பரம் வந்து வசித்தவர்; வடமொழி தென்மொழிகளை நன்கு கற்றவர்; திருவண்ணுமலை ஆதீனத்தில் சைவசந்நியாசம் பெற்றவர். வடமொழியில் பல நூல்கள் செய்தவர்; சிவஞானசித்தியாருக்கு ஒரு உரையும் வகுத்தவர்.

மயிலையிற் செய்த அற்புதம்.

குகப்பிரியை.

சைவ சித்தாந்தத்தின் சிறந்த கொள்கைகளையெல்லாம் தன் அகத்தே கொண்டது அப்பரது அருள்மொழிகளும், ஞானசம்பந்தப் பெருமானது தேவாரங்களும். சிவபெருமானது அருளின் ஆழத்தையும் பெருமையையும் குறிப்பதற்கு இராவணனுக்கு அனுக்கிரகம் செய்த அந்த அற்புதச் செயலை அடிக்கடிக் குறிக்கிறார் இவ்விருவரும். பக்தி இன்பமே இன்பத்துள் இன்பமென்றும், பக்தியின் பெருமையே பெருமை என்றும் கடவுள் வழிபாடு வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும் இவர்களது பாடல்கள் வற்புறுத்துகின்றன. மேலும்,

ஆதியும் அந்தமுமில்லா அந்த மாதேவன் கைலை வேந்தன் இனியராகவும், இனிமை தருபவராகவும் இருக்கிறார். இன்ப துன்பங்களைக் கடந்த அவரே எல்லா இன்பங்களையும் தருகிறார். ஸர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமென்று பெயர்பெற்ற அவர், உலகிற்கே ஒரு தலைவர் என்றும் போதிக்கின்றன இவர்களது கவிதைகள்.

'கற்றதனலாய பயனென்கொல்?' என்ற வள்ளுவர் வாக்கை நினைவூட்டுவதே போல், கடவுளை வணங்குவதே கல்வியினால் அடையும் பயன் என்பதே இவர்களுடைய சர்வசமய சமரசமான உபதேசங்கள்.

இவர்களுள் சம்பந்தப்பெருமானும் சரி அப்பர்பெருமானும் சரி பற்பல அற்புதங்களைச் செய்திருக்கிறார்களென்பதைப் பெரியபுராணம் தெரிவிக்கிறது. அவற்றுள் மிகவும் முக்கியமானவை, அப்பரைக் கற்றாணில் பிணித்தது, யானை இடறியது முதலியவைகள். ஆனால் சம்பந்தப் பெருமானது அற்புதங்களுள் அற்புதமாகத் திகழ்வது எலும்பு பெண்ணுருவான அற்புதம். இந்த அற்புதக் காட்சியை, இன்றும் மயிலையில் 'அறுபத்துமூவர்' என்னும் திருவிழா சித்திரிக்கும்.

* * *

இவள் என்ன பெண்ணு? பூங்கொடியா? என்று வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது அவள் திருவுருவம். திருமகளைப் போலிருந்த அவளது ரூப ஸௌந்தர்யத்தைக் கண்டுதான் பூம்பாவை என்று பெயரிட்டார்களோ என்று வியந்தனர் மயிலை வாசிகள். தந்தை சிவநேசச் செட்டியாரோ, பக்தியிலும் அறிவிலும் சிறந்த என் கண்மணியை, ஞானசம்பந்தப் பெருமானுக்கே மணம்செய்விப்பேன் என்று மனத்துள் எண்ணியிருந்தார்.

இந்த சமயத்திலேதான் நாள்தோறும் ஒரு புதிய செய்தி கொணர்வார் தூதர். சம்பந்தர், மதுரைநோக்கிச் செல்லுகின்றார்; மங்கையர்க்கரசியாரது வரவேற்பு; பாண்டியன் நோய் தீர்ந்தது; கனல் வாதம், புனல் வாதம், சமணரை வென்றார்; விஷந் தீண்டியவரை உயிர்ப்பித்தார் என்றெல்லாம் புத்தம் புதிய செய்திகளைச் சுமந்துவந்தன ஓலைகள்.

பக்தியினாலும், ஒழுக்கத்தினாலும், சிவநேயச் செல்வராகவே இருந்த அந்தச் சிவநேசச் செட்டியார் இச் செய்திகளைக் கேட்கக் கேட்க மனம் பூரித்து மெய்சிலிர்ப்பர். மயில் வடிவாகி எம்பெருமானைப் பூசிக்கும் கற்பகவல்லியின் அடியிணைகளிலே பணிந்து, தாயே! என் கண்மணி பூம்பாவைக்கு, நீ ஞானப்பால் கொடுத்த அந்த ஆளுடைய

பிள்ளையாரே உகந்தவர். அவரை அடைவிக்கும் பொறுப்பு, தாயாகிய உன்னையன்றி வேறு யாருக்கு உண்டு என்றெல்லாம் இறைஞ்சும் அவர் மனம்.

மார்கழிமாதம். விடியற்காலை. மிகவும் பயபக்தியுடன் பூசை புரிகின்றார் சிவநேசர். பூக்கொய்துவரப் புறப்பட்டாள் பூம்பாவை. பனியின் சிலிர்சிலிப்பு அவள் மேனியை வாட்டவில்லை. அவள் வாய் சிவநாமாவளிகளை இசைக்க, தோழியருடன், நந்தவனத்துட் புகுந்தாள். அழகிய மலர்களைக் கொய்து கொய்து குடலையில் இட்டவண்ணம், அந்த மெல்லிய வெளிச்சத்திலே, மந்தாரைச் செடியை அணுகினள் அவள்.

'ஐயோ' என்ற அலறல் வான வீதியிலே எதிரொலி செய்தது. தடாலென்று கீழே விழுந்தாள். தோழிகள் ஓடி எடுத்து வீட்டுக்குச் செய்தி தெரிவித்துவருமுன், உடல் நீலநிற மாயிற்று. அவ்வளவுதான்; கட்டழகியான அந்த பூங்கொடி துவண்டுவிட்டாள்.

ஓடோடிவந்தார் தந்தை. மந்திர தந்திரங்கள் ஒன்றும் பயனளிக்கவில்லை. சிவன் செயல் இப்படியோவென்று புலம்பினர். இந்தப் பெண்ணை ஞானசம்பந்தப் பெருமானுக்கென்றே வளர்த்தேன். இனியும் அவர் வரும்வரை, இந்தப் பெண்ணை, எப்படி வைத்திருப்பேன் என்று உருகினர் சிவநேசர்.

அவளது பூதவுடல் தழலுக்கிரையாயிற்று. ஆனாலும் சிவநேசரது மனம் மட்டும் ஞானசம்பந்தரது வருகைக்காக ஏங்கிநின்றது. ஒரு மண்குடத்தில் அப்பெண்ணின் எலும்புகளைப் பொருக்கியிட்டு, அதைக் கன்னிமாடத்தில் உள்ள அவள் பஞ்சணையின்மீது வைத்துப் பாதுகாத்துவரலானர்.

சம்பந்தர் திருவொற்றியூருக்கு வருகிறார் என்ற செய்தி செட்டியாரை ஆனந்தக் கடலுள் மூழ்கச்செய்தது. இந்தக் குடத்தை சம்பந்தர்முன் ஒப்புவித்துவிட்டால் என் கடமை முடிந்துவிடும் என்றெண்ணினர் அவர். ஒற்றியூரிலே மகிழடியிலே ஈசன் சுந்தரற்குக் காட்சியளித்த திருவிளையாடல். ஊரூராய் பதிகம்பாடி வழிபட்டுவந்த பிள்ளையார் ஒற்றியூரை விடுத்துப் பூசலாரது மனக்கோயிலேயே உறைவிடமாககொண்ட திருநின்ற ஊர் (தின்னனூர்)செல்லவேண்டுமென்று விரும்பிய தருணம், செட்டியார் கபாலீச்சரத்துக்கு வந்து அமரவாழ்வு எய்திய தன் மகளை ஏற்றுக் கொள்ளவேணுமென்று விரும்புவதும் ஒன்று சேர்ந்தது.

தமது பத்தர் குழாம் பின்தொடர, பொற்றாளதததைக் கையிலேந்தி முத்துச்சிவிகையில் ஏறி மயிலை அடைந்தார் பிள்ளையார். வரும் வழியிலே அவருக்கு விஷயம் தெரிந்தது. வந்தவர் நேரே சிவபெருமான் சந்நிதிக்குச் சென்று, வேயுறு தோளிபங்கனையும், கற்பகத் தருவாய் விளங்கும் தாயையும் தரிசித்துவெளி வந்து நின்றார். இன்னிசையால் தமிழ்பரப்பும் அவரது அருள்வாக்கின் அமுத மொழிகளைக் கேட்கக் கூடினர் நகரமாந்தர். கடலின் பேரொலியையும் மழுங்கச் செய்தது ஹரஹர மகாதேவ கோஷம். "சின்னஞ்சிறு பிள்ளை; இவர் முகத்திலேதான் என்ன ஒளி! இவர் வாக்கிலேதான் என்ன இனிமை; குமரவேளே இப்படி வந்திருக்கிறாரோ என்றெல்லாம் சிந்தித்தது பக்தர் குழாம். கோயிலை அடுத்து அழகிய திருக்குளம். அதன் கரையிலே வந்து நின்ற பிள்ளையார், சிவநேசரை அழைத்து, குடத்தை எடுத்துவரலாமென்பதைத் தெரிவித்தார். இன்பமோ துன்பமோ என்று நிர்ணயிக்க இயலாத ஒரு நிலையிலே ஆழ்ந்திருந்த செட்டியார் கண்கள் பனிசோர குடத்தை அலங்கரித்தபடியே கொணர்ந்து முன்னே வைத்தார்.

வைத்தகண் வாங்காமல் என்னசொல்லப் போகிறாரோ என்ற ஆவலுடன் சூழ்ந்து நின்றனர் பக்தர்கள். கபாலியின் அடியிணைகளை மனத்திலே கொண்ட சம்பந்தமூர்த்தி 'மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலை,' என்று பதிகம் பாடத் தொடங்கினர். அமுதகீத வலையிற் கட்டுண்டதுபோல் திகைத்தனர். முதல் பதிகம் பாடவும், குவிந்த கர கமலங்கள் வளையல்கள் ஒலிக்க வெளியே தெரிந்தது.

பாடல் ஒவ்வொன்ருய் வளர வளர, பிறகு தலையும் உடலும் ஒவ்வோர் அங்கமாய், குடம் உடைந்து அதிலிருந்து தோன்றினள் பூம்பாவை.

எந்த உடையோடும், எந்தவிதமான அணிகலன்களோடும், சூடிய மலர்களோடும் மறைந்தாளோ அதேதோற்றத்துடன் எழுந்து கரங்குவித்து வணங்கினள் அவள். இந்த அற்புதக் காட்சியைக் காண விண்ணவரும் வந்து குழுமினர் வானவீதியெங்கும். அற்புதம்! அற்புதம்!! அற்புதம்!!! என்று ஆரவாரித்தனர் பக்தர்கள். ஆனந்த மிகுதியினல் அகமும் முகமும் ஒருங்கே மலரச்செய்தது. இன்ன தென்றறியாமல் திகைத்தார் சிவநேசர்.

* * * *

"இவளை உமக்கே அர்ப்பணம் செய்து விட்டேன், நீர் ஏற்று மணந்துகொள்ள வேணும்" என்று வேண்டினர் செட்டியார். 'மாண்டபெண் சிவனருளால் மீண்டாள். நானும் உம்மைப்போலவே, இவளை உயிர்ப் பித்ததன் பயனகத் தந்தையாகிவிட்டேன்; ஆகவே இந்த வார்த்தை சொல்வது தகாது' என்று கூறினர்.

பிறகு ஆளுடையபிள்ளையாரின் அருள் வாக்கைப் பின்பற்றி, பொதுஜன சேவையிலும் பக்திப்பிரசாரத்திலும் தன் எஞ்சிய நாட்களைக் கழித்தாளென்று புகழுகிறது பெரியபுராணம். இன்றும் பங்குனி மாதத்தில் சென்னையில் பிரசித்திபெற்ற தலமாகிய திருமயிலாப்பூரிலே இந்த அங்கம் பூம்பாவையான வரலாறு மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அந்த விழாவைக் காணக் கண் கோடி வேண்டும். முப்பத்து முக்கோடி மனிதர்கள் என்று சொல்வதுபோல் தோற்ற மளிக்கும் கூட்டம். இவைமட்டுமேயன்றி, திருவள்ளுவநாயனரும், மற்றுமுள்ள சிவனடியார்களும் வந்து இந்த அற்புதத்தைச் சிறப்பித்துச்செல்வர். வீதிகள்தோறும், வீடுகள் தோறும் மலர்களின் சுகந்தமும், சாம்பிராணி இவைகளின் நறுமணமும் வீசும். இவைகளுடன் தமிழ்மணமும், சிவமணமும் கலந்து வீசுமென்று சொல்வது மிகையாகாது.



அப்பர் காலத்து அரசியல்.

வித்துவான் K. M. வெங்கட்டராமையா, M. A. B. O. L.

'தப்பி வானம் தரணி கம்பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்பமாம் சேறைச் செந்நெறி மேவிய
அப்பனுர் உளர் அஞ்சுவது என்னுக்கே.'

என்பது அப்பர் வாக்கு. இதன்கண் 'ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்' என்பதை நோக்கின் அக்காலத்து நாட்டில் அமைதியின்மை நன்கு பெறப்படும். அப்பர் பெருமான் நம் தவப்பயனுல் இந் நில உலகினில் நிலவிய காலே, சமண சமயச் சார்பினனுய், குணபரன் முதலிய பட்டப்பெயர்கள் தரித்தவனுய், மகேந்திரவர்மன் என்ற பல்லவ அரசன் காஞ்சிமாநகரின்கண் ஆட்சிபுரிந்துவந்தனன். அச்சமயத்து வடபுலத்து வாதாவித் தொன்னகரத்து ஆண்டுவந்த சளுக்க மன்னவன் இரண்டாம் புலிகேசன் எனப்படுவான். அவன் ஒருகால் காஞ்சிமாநகர் வரையிலும் வந்து, காஞ்சி மதிற்கதவுகள் அடைபட்டிருந்தமையின் அந்நகரை முற்றுகையிடாது, தெற்கே காவிரிக்கரைவரையிலும் சென்று, ஆங்கு வலியிழந்துகிடக்கும் சோழவரசனும், வலிபெற்றெழும்பும் பாண்டியமன்னனும் வரவேற்க, மகிழ்ந்து, வடபுலம் நோக்கித் திரும்பினன். திரும்பிச் செல்பவனேப் பல்லவன் பெரும் படையுடன் பின்னே தொடர்ந்துசென்று, புள்ளலூர் என்ற இடத்தில் பெரும் போர் நிகழ்த்தினன். சளுக்க மன்னன் தோற்ரேடினன். இப் போரினுள் போலும் நம் வாகீசப் பெருந்தகையாரது தமக்கையாராகிய, சைவங் காத்த மங்கையரெனத்தகும் எங்கள் திலகவதியாரை மணம்வேட்ட கலிப்பகையார் வேந்தர்க்குற்றுழிசென்று, தன்னுடைய கடன்கழித்து வீரசுவர்க்கம் புக்கனர். இதற்குப்பின் பல வருஷங்கள் வரை சளுக்கருக்கும் பல்லவ அரசர்களுக்கும் பல போர்கள் நிகழ்ந்து வந்தன. கி. பி. 640-க்குச் சமீபத்தில் இம் மகேந்திரவர்மனது மகன் நரசிம்மவர்மன் காலத்தில் பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) எனப் பெயரிய வீரர் வாதாவிப் பெரும்போரில் பங்கெடுத்துத் தன் வீரத்தை வெளியாக்கினர். இதனைப் பின்வரும் பெரியபுராணச் செய்யுளால் அறியலாம்:—

'மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்.'

இந்தக் காலத்தில் சோழநாடு பல்லவர் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. சீரழிந்துகிடந்த பாண்டியநாடு தலைகிளம்பத் தொடங்கியது. வாதாவி ஜீரணமாகும் காலத்துப் பாண்டிய வம்சத்தில் நெல்வேலியில் (வில்வேலியை) வென்ற நின்றசீர் நெடுமாற நாயனுர் ஆண்டுவந்தனர். இவர் ஒரு பெருவீரரும் ஆவர்.

இவ்வாறு தமிழ்நாட்டைப் பல அரசர்கள் ஒற்றுமையின்றி ஆண்டமையின் வேறுபுலத்தரசர் நறுந்தமிழ்ப் பூமியின் பெருவளம் கவர அவ்வப்பொழுது படையெடுத்து வந்தனர். இதனை அப்பர்பெருமான் மறந்தனர் அல்லர். தலயாத்திரை செய்து போந்த வாகீசர் மக்களுக்குத் தைரியம் ஊட்டவேண்டி 'அஞ்சுவதென்னுக்கே' என்றென்றே கூறிப் போந்தனர்.

தமிழ்நாட்டரசியல் இங்ஙனமிருக்கத் தமிழ் நாட்டின் சமயநிலை இன்னும் கொடிய நிலையில் இருந்தது. காஞ்சியில் மகேந்திரவர்மன் சமணப்பற்றுடையவனாகி யிருந்தனன். நாடு எல்லாம் சமணப் பள்ளிகள் பல இருந்தன. 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்பதற்கிணங்க நாட்டுப் பெரியோர்களில் பெரும்பாலோர் சமண சமயச் சார்பினராய் இருந்தனர். மருணீக்கியாரும், 'கொல்லாமை மறைந்து உறையும்' சமண் சமயம் குறுகியமை அவர் வாக்கினாலேயே அறிகின்றோம். திருவையாற்றில் பாடியருளிய திருநேரிசையில் (4-ம் திருமுறை, 39-ம் பதிகம்) முதல் எட்டுத் திருப்பாடல்களிலும் அமணரோடு தாம் இருந்ததைக் குறித்தருளியமை காண்க. பின்னர் பிறதுறையி னின்றேற அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த திருநாவுக்கரசர், 'நாணில் அமண்பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சித் திருத்தொண்டின் உறைப்பாலே' வென்றமை 'அங்கணர்தம் புவனத்தில் அறியாதர் யாருளரே'. சமணர் சூழ்ச்சிகளை அப்பர் வென்றமைக்கு அவர் வாக்குகளே உள்ளன.

வஞ்சப் பாற்சோற்றை உண்டு ஊறுபாடின்றி யிருந்ததனை—

'வஞ்சனைப் பாற் சோருக்கி வழக்கிலாஅமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே'

என்ற அடிகளிலும், கல்விற் பூட்டிக் கடலில் தள்ளிய ஞான்று கடலில் மிதந்து கரையேறியதை—

'கல்லி னேடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லைநீர் புகநூக்க என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே'

என்ற திருப்பாடலிலும் குறித்தமைகாண்க.

அரசன் நடுவுநிலைமை தவறினன் என்பதைக் 'கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது' என்று நமச்சிவாயத் திருப்பதிகத்துக் குறித்தருளினர்.

பொங்கு கடல் கன்மிதப்பில் போந்தேறிய வாகீசர் தாம் சைவத்திறத்தை அடைந்தமையைத் திருப்பாதிரிப்புலியூரில் பாடிய பதிகத்து ஈற்றுச் செய்யுளிலேயே தெளிவுறக் குறித்தார். அச்செய்யுள் பின் வருமாறு:—

'திருந்தா அமணர்தம் தீநெறிப்பட்டுத்
திகைத்து முத்தி
தரும் தாளிணைக்கே சரணம் புகுந்தேன்
வரை யெடுத்த
பொருந்தா அரக்கன் உடல் நெரித்தாய்
பாதிரிப் புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப் பிறவாமல்
வந்தேன்று கொள்ளே.'

சமணர் தம் நெறியினின்று மீண்டவரை ஒறுத்தல் ஒன்று தானே? எவ்வகை யானும் தம் மதத்தைக் காக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவர் ஆகலின் ஆளுடைய பிள்ளையார் மதுரையை அணைந்த பொழுது அவரையும் அவ்வமணர் துன்புறுத்தலாயினர். மங்கையர்க்குத் தனியரசியாம் எங்கள் தெய்வமும், குலச்சிறையாரும் என்னும் இருவர் பாங்கும் அன்றித் தமிழ்ப் பாண்டி நாட்டில் சைவம் இலதாயிற்று. அவர்களும் 'ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தில் நின்றதன்மை பூங்கழல் செழியன் முன்பு புலப்படாவகை கொண்டுய்த்தார்'; அன்றியும் அச்சமணர் சைவரைக் காணின் 'கண்டுமுட்டு' என்றும், அவரைப் பற்றிக்கேட்பின் 'கேட்டுமுட்டு' என்றும் கூறும் விரதத்தினர் ஆகியிருந்தனர். இதனானன்றோ எங்கள் ஆளுடைய அரசரும் ஆளுடைய பிள்ளையாரை நோக்கி 'அந்த அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லை' என்று கூறித் தடுப்பார் ஆயினர்.

இம்மட்டோ? சிவாலயங்களையும் மறைத்து வந்தமையும் யாம் அப்பர் அமுதவாக்கான் அறிதற்பாலம். திருப்பழையாறை வடதளி இவ்வாறு மறைக்கப்பட்டமையும், அப்பர் ஆங்கு 'உண்ணாவிரதம்' இருந்தமையும் பெரிய புராணத்துக் காணலாம். 'தலையெலாம் பறிக்கும் சமண்கையருள், நிலையினால் மறைத்தால் மறைக்கொண்ணுமே' (5:58:1) என்ற தேவாரமும் காண்க.

ஏழில்.

வித்துவான். முத்து சு. மாணிக்கவாசக முதலியார்.

தமிழ்ப் பெயர்களுட் பற்பல வழக்காறற்றன. அறவே அவற்றின் பொருள் புலப்படுதல் அரிதாயிற்று. ஆதலின், அப்பெயர்ச் சொற் பொருளைத் திரிபாயுணர்ந்தும் எழுதியும் வரலாயிற்று. அவ்வாறாய பெயர்களுள் "ஏழில்" என்பதும் ஒன்று.

"ஏழில்" என்பது தமிழ் நூல்களுட் பயின்றுவாராது அருகி வந்துள்ளது. மூத்து நரை மூதிர்ந்த மூதாளர் சிலரே "ஏழில்" என வழங்குகின்றனர். அவரும் ஏழிலைக் கையாளும் குடியிற் பிறந்தவராயுளர்.

ஆளுடைய அடிகளார் அருளிய திருவாசகத்துள் வரும் திருவெம்பாவையின் எட்டாவது திருப்பாட்டின் முதலீரடியும் ஈண்டு நோக்கத் தக்கன. "கோழி சிலம்பச சிலம்புங் குருகெங்கும் ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்" என்பவை அவை. அவற்றிற் குறித்த பொருள்:- கோழி சிலம்பும் குருகு சிலம்பும் ஏழில் இயம்பும் வெண்சங்கு இயம்புமென்பதே. சிலம்பச்சிலம்பும் இயம்ப இயம்பும் என்றுள்ள தொடரமைதியை நன்கு நோக்குதல்வேண்டும். 'சிலம்புதல்' இரண்டனுள் முதலதற்குக் கோழியும் இரண்டாவதற்குக் குருகும் வினைமுதலாம். 'இயம்புதல்' இரண்டனுள் முன்னதற்கு, ஏழிலும் பின்னதற்கு வெண்சங்கும் எழுவாயாம். ஆகவே கோழி குருகு சங்கு என்னும் மூன்றும் போல ஏழிலும் ஒருபெயராதல் தெற்றென விளங்கும். ஏழில் என்னும் பெயர்ச் சொல்லின் வழக்கு வீழ்ச்சியால், அச் செஞ் சொற்பொருளை யுணரவாய்த்திலது. வாய்க்காமையால் தமக்குத் தோன்றிய பொருளை அப்பெயர்ப் பொருளாக ஏற்றியுரைத்தனர் சிலர். திருவாசகவுரை வரைந்த சிலர் 'ஏழிசை போலச் சப்திக்க' என்று 'ஏழில் இயம்ப' என்பதற்குரைகொண்டனர். 'ஏழில்' என்பதில் இல் ஒப்புப் பொருட்டாகிய ஐந்தனுருபு என்று குறிப்பும் எழுதினார். பல பறவைகளும் கலந் தொலிக்கும்போது வெவ்வேறு ஒலியாய்க் கேட்பது ஏழிசையும் கலந்து ஒலிப்பதை நிகர்ப்பதனால், 'குருகு எங்கும் ஏழில் இயம்ப' என்றார் என விசேடவுரையும் காணப்படுகின்றது. ஒருவர் 'சிலம்புங் குருகு' என்றார். மற்றொருவர் 'சிலம்பும் ஏழில்' என்றார். இருவரும் 'சிலம்பும்' என்பதைப் பெயரெச்சமாகவே கொண்டனர் என்பது தெளிவாகும். ஆகவே அவ்விருவர்க்கும் அவ் வாக்கியத்தின் அமைதி புலப்பட்டிலது திண்ணம். பெயரெச்சமாகக் கொண்டமையால் ஒரு குற்றமுமில்லை. இன்றேனும் அவ்வடிகளின் சொல்லமைதியைப் புலங்கொண்டு உரை எழுதாமை இனிது விளங்கும்.

முதலடியில், "கோழி சிலம்பக் குருகு சிலம்பும்" என்றும் இரண்டாவதடியில், "ஏழில் இயம்ப வெண்சங்கு இயம்பும்" என்றும் பொருணோக்கம் அமையச் சொற்போக்கு நிற்பது யாவர்க்கும் எளிதின் விளங்கற்பாலதே. 'சிலம்ப' 'இயம்ப' என்னும் செயவெனெச்சம் முறையே 'சிலம்பும்' 'இயம்பும்' என்னும் பிற வினைமுதல் வினையைக்கொண்டு நிற்றலும் வெவ்வேறு முடிபுற் றிருத்தலும் அறியத் தக்கன.

திருவாசகவுரைப் பதிப்புக்களுள் ஒன்றனுள், 'சிலம்புங் குருகு இயம்பச் சங்கு இயம்பும்' என்றும், பிறிதொன்றனுள், 'சிலம்பும் ஏழில் குருகு இயம்பச் சங்கு இயம்பும்' என்றும் இயைத்திருத்தல் காணப்படுகின்றது. அவ்வியைபு எவ்வாற்றானும் பொருந்தாததே என்பது சொற்றொடரமைதி யுணர்ச்சி யுடையார்க்குத் தெற்றென விளங்கும். எங்கும் கோழி சிலம்பக் குருகு சிலம்பும்; எங்கும் ஏழில் இயம்ப வெண்சங்கு இயம்பும் எனக் கோடல் செவ்விதாகும். 'எங்கும்' என்பவற்றை ஈற்றில்

உள்ளவாறே கோடலும் ஏற்புடைத்தே. அப்பொழுது சிலம்புங் குருகு, இயம்புஞ் சங்கு எனப் பெயரெச்சமாகக்கொள்ளல் தக்கது. இருவேறு சொற்றொடராகக் கொள்வதே தக்கதும் உற்றதும் ஆகும். ஆதலுமன்றி சிலம்புவன கோழியும் குருகும். இயம்புவன ஏழிலும் வெண்சங்கும் என்று மாணிக்க வாசகப்பெருமான் அருளியிருத்தலின், அவர் 'ஏழில்' என்பதை 'இயம்ப' என்பதிலுள்ள இயம்புதலாகிய வினைக்கு எழுவாயாகக்கொண் டருளினர் என்பதுந் தெளிவுறும். அவ்வினை முதலாகிய 'ஏழில்' என்பதைக் குருகுகட்கு உவமம் ஆக்கியதும் பொருந்தாது. இவ்வாறு பொருந்தாப் பொருள் கோள் நேர்ந்ததற்குக் காரணம் என்னையோ? ஏதேனும் காரணம் இருத்தல்வேண்டும் அன்றோ? அதுதான் வழக்காறற்ற பழஞ்சொற் பொருளை அறிதல் அரிதாதல்.

'ஏழில் என்பதன் செம்பொருள் யாதோ எனின் ஆராய்வோம். சிலம்புவன கோழியும் குருகும் என்ற பெருமானர், இயம்புவன ஏழிலும் சங்கும் என்று குறித்தருள்வதில் ஒருண்மையுண்டு. அஃதாவது:- கோழியும் குருகும் தாமே சிலம்புவன. சிலம்புதற்குப் பிறிதொரு துணையை நாடுவனவல்ல. ஏழிலும் சங்கும் செவ்விதின் இயம்பப் பிறிதொரு துணையை நாடுவனவாகும். தாமே இயம்ப வல்லன அல்ல. தாமே சிலம்புவனவற்றை முன்னடியிற் குறித்தருளினர்: ஒருவர்க்குக் கருவியாய் நின்று இயம்புவனவற்றைப் பின்னடியிற் கூறியருளினர். இயம் எனப்படுவன வாச்சியங்கள். இயம்புதல் வாச்சியங்கட்கே உரித்தாகக் கோடல் யாண்டும் பொருந்துவ தின்று- "குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்" (குறுந்தொகை. உ௩ச) என்புழி கோழிக்கும் இயம்புதல் உரித்தாதல்காண்க. எப்படியாணும் இத் திருவாசகத்துள், சிலம்புவன இரண்டு இயம்புவன இரண்டு எனக் குறித்த நான்கனுள் ஏழிலும் ஒன்றாதல் வெளிப்படை. அதனை மற்றொன்றற்கு உவமமாக்கிப் பொருள் கோடல் எட்டுணையும் பொருந்தாது. இங்கு 'ஏழில்' என்பதை வாச்சிய வகையுள் ஒன்று என்று கொண்டு 'இயம்ப' என்றதற்கு வினைமுதலாக்கலே சாலப்பொருத்தமுடைத்து.

1 "காளியாட ஆடுங்கடவுள்"
2 "இந்திர தனுவும் வணங்க வணங்கும்
இணைப் புருவக்கொடி"
3 "கதிர்மதி யொளிர வொளிரும் ஒளியவன்",
4 "பொய்கை நிறைய நிறையும் வயலெங்கும்"

என்ற சொற்றொடர்களை ஈண்டு ஒத்திட்டு நோக்குவார்க்கு அப் பொருத்தம் நன்கு விளங்கும்.

வைகறைப் பொழுதில் கோழிகளும் குருகுகளும் பிறவும் சிலம்புதல் உலகில் நிகழும் உண்மையே. மார்கழியில் எங்கணும் விடியற் காலையில் ஏழிலும் சங்கும் பிறவும் இயம்புதல் இன்றும் நிகழும் உண்மையாகும். பண்டிருந்த அளவினுங் குறைவுற்றிருக்கலாமே யன்றி இன்று இல்லையெனல் சாலாது. கோயில் முதலிய இடங்களில் விடியற்பொழுதில் இயங்கள் இயம்புதல் இக்காலத்தும் நிகழ்வதே. அந்நிகழ்ச்சியை யுணர்த்தும் வாதவூரடிகள் 'ஏழில்' என்ற பெயரால் ஓரிசைக் கருவியைக் குறித்தார் என்பதற்கு யாதும் ஐயமின்று. 'ஏழில்' என்னும் ஓரிசைக் கருவி உண்டோ எனின், உண்டு. அப்பெயர்கொண்ட கருவி பண்டும் உண்டு, இன்றும் உண்டு. அப்பெயரால் அக் கருவியை வழங்கும் வழக்கந்தான் ஒழிந்தது. வடசொற்கள் வந்து வழங்கிய காரணத்தால்.(அச்சொற்களால் குறிக்கப்படும் பொருட்குரிய) தமிழ்ச் சொற்கள் மறைந்தன. அவற்றுள் ஏழிலும் ஒன்று. பழக்கத்திலிருக்கும் பொருட்குரிய பெயர் வழக்கத்தில் இல்லாதொழிந்தது வருந்தத்தக்கதே. இது பற்றியே தமிழ்ச்சான்றோர் பிறமொழிக் கலப்பில் விழிப்போடிருந்து, மொழியைக் காத்தல்வேண்டி, ஆரியத்தைத் தழுவிய 'கிரந்தம்' என்றதொரு பெயரால் எழுத்தைப் படைத்துக்கொண்டனர். பின்னர் புலமையின்றி வெறும் வைதிகம் மட்டும் மேற்கொண்டவர் பலர் இதுபோன்ற குறைபாட்டைத் தமிழ்க்குத் தம்மை யறியாமலே ஆக்கிவிட்டனர். நிற்க, ஏழில் என்பது ஏழ் + இல் என்னும் இருசொற் புணர்ந்து ஒருமொழித் தன்மை யெய்திய தொகைநிலைத் தொடர். அஃது 'ஏழ்' என்னும் அளவைப் பண்பும்

'இல்' என்னும் பெயரும் ஒட்டிய ஒட்டு. எழுமை என்னும் பண்புப்பெயரொடும் ஒட்டிய தெனலே தக்கது. எண்ணலளவைப் பண்புத் தொகையுள் ஒருமை இருமை மும்மை முத லானவற்றையே சிலமொழியாகக் கோடல் பண்டைய வழக்கு. ஒன்று இரண்டு மூன்று முதலியன பண்பியாதலன்றிப் பண்பாகா. எழுபிறப்பு என்பது எழுமை என்னும் பண்பும் பிறப்பு என்னும் பண்பியும் ஒட்டிய தொடர். ஏழு என்னும் பண்பியும் பிறப்பு என்னும் பண்பியும் ஒட்டிய ஒட்டன்று.

'ஏழில்' என்னும் பண்புத்தொகைப்பெயர் இசைக்கருவி வகையுள் எழுதுளையுடைய எல்லாவற்றிற்கும் பொதுவாமெனினும் ஒன்றற்கே வழங்கிவந்தது. அவ்வழக்கம் ஒழிந்தபின் அதற்கு வேறு பெயரும் தமிழில் இதுகாறும் ஏற்பட்டதாகத் தெரிந்திலது. எழுதுளை வங்கியமும், ஐந்துளை வங்கியமும் பண்டையோர்வழக்கிலிருந்தன. பரிபாடலுள் எட்டாவது செய்யுட்கண் இருபத்திரண்டாவது அடியில்வரும் "ஏழ்புழையைம்புழை யாழிசை" என்பதையும் அதன் உரையாகவுள்ள "எழுதுளையான வங்கியத்தும் ஐந்துளையான வங்கியத்தும் யாழினம் பிறந்த இசைச்சுருதி" என்பதையும் நோக்குவார் இவ்வுண்மையை யுணர்வர்.

'ஏழில்' என்னுந் தூய தமிழ்ச் சொற்றொடர்க்குரிய பொருள் தமிழர்க்கே தெரியாதொழியும் வண்ணம் இருத்தல் ஒன்றே தமிழரது மொழிப்பற்றையும் புலமையின்மையையும் பிறமொழியிற் கொண்ட பொருந்தா வேட்கையையும் தெளிவுறுத்தும். தமிழ் மொழியில் உண்மைப் பற்றுடையார் பலரும் இதுகுறித்து வருந்தாதிரார்.

'ஏழில்' என்பது இக்காலத்தில் 'நாகசுரம்' என வழங்கப்பெறும் இசைக் கருவிக்குப் பண்டு வழங்கியதொரு தமிழ்ப்பெயர். 'நாக தாளி' (நாகம் போன்ற தாளுடையது) போன்றதொரு தொடர் நாகசுரம் என்பது. நாதமும் சுரமும் ஒரு பொருளனவாதலின் நாதசுரமென்பது பொருந்தாதென்பது பலர் கருத்து. நாகசுரத்தில் துளைகள் பன்னிரண்டாகும். அவற்றுள் எழுதுளையே இயம்புதற்குரியன. பிற ஐந்தும் அவ்வெழுதுளையின் அடியிலொன்றும் பக்கங்களில் இவ்விரண்டுமாக இருக்கும். அவ்வைந்தும் இயம்புதற்குரியனவல்ல. பிரமசுரம் என்ற பெயராற் குறிக்கப்படுகின்றன. அவை அக்கருவியின் ஓசையின்பம் உண்டாதற்பொருட்டு அமைந்தவை என்பர். 'குழல்' என்னும் இசைக்கருவியினும் எழுதுளை ஐந்துளை எனப்படினும இசைக்குங்கால் தொடப்படாத துளைகளும் உள்ளன. இதனைச் சிலப்பதிகார உரையாலும் அறியலாம்.

புதுக்கோட்டைக் கல்வெட்டு ஒன்றன் முடிவில், தமிழில் 'எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய' என்றுளது, (See No. 28 of Epigraphia India Vol XII. 1913-14) அதனல், 'ஏழில்' என்பன இன்னவை எனப் புலப்படாவிடினும் இசை பற்றியவை என்று வெளிப்படுதலால் அறிஞர் ஆராய்தல் வேண்டும். பதினொன்றாந் திருமுறையில் "ஏழிலின்னரம்பு இசைத்தனை" என வரும் அடிதிருவெழுகூற்றிருக்கையிலெண்ணுப் பெயரமைப்பில் வந்துளது. அங்கு 'ஏழ்' என்னும் எண்வரவே இன்றியமையாதது. ஏழில் என்பது ஓரிசைக் கருவியின் பெயரே எனக்கூறல் இயலாது. திருவாசகத்துள் 'ஏழில் இயம்ப' என வந்திருத்தலால் ஆண்டு ஏழில் என்பது பெயரே எனல் ஒருதலை. இதை முன்னர் விளக்கியுள்ளேன். யாழ் முதலிய நரம்புடைய) இசைக் கருவிகளுக்கு எழுதுளை என்று பொருள்படும் 'ஏழில்' என்பது பெயராதல் பொருந்தாது. நரம்புக் கருவிக்குத் துளைக்கணக்கும் துளைக்கருவிக்கு நரம்புக் கணக்கும் வேண்டுவதில்லை. ஆயிர நரம்புடைய நாரதப் பேரியாழும், நூறு நரம்புடையகீசகப் பேரியாழும், ஒன்பது நரம்புடைய தும்புரு வீணையும் ஒற்றை நரம்புற்ற மருத்துவவீணையும் எழு நரம்பு என்னும் பெயராற் குறிக்கப் பொருந்தாவேனும் 'எழு நரம்பு' என்பது அவற்றைக் குறிக்கும் பொதுப்பெயராதலை ஆராய்ந்தால் குரல் முதலிய ஏழிசையை எழு நரம்பு என்று சுட்டி, அவ்வேழிசைக் கருவிகளாய யாழ் வீணை இரண்டனையும் உணர்த்துதல் முன்னோர்க்கு வழக்கமாயிருந்தமை புலனாகும். ஆகவே ஏழில் எனத் துளைபற்றி வந்ததாகக்

கருதப்படும் பெயர் எழுநரம்பு என நரம்புபற்றிவரும் பெயராற் குறிக்கப்படும் யாழ் முதலியவற்றை உணர்த்துதல் பொருந்தாது. எழில், அடிசில், பரிசில், குருசில் என்பவை போன்ற தொருசொல்லாக 'ஏழில்' என்பதையும் கருதினல், ஏழ்+இல்லெனப் பிரித்து எழுதுளை எனப் பொருள்கொண்டது பொருந்தாமற் போம். 'ஏழில்' என்பதன் பண்டைய உண்மைப் பொருள் விளங்கும்வரை 'நாகசுரம்' என வடசொல்லாற் கூறப்படும் கருவியைத் தமிழ்ச் சொல்லாற் கூறிவருதல் நன்ருகும். 'ஏழ்புழை' எனப் பரிபாடலில் வரும் தொடரும் 'ஏழில்' எனத் திருவாசகத்துள் வரும் தொடரும் துளைக்கருவிக்கே பெயராதலை நோக்கி, 'நாகசுரம்' எனப்படுந் துளைக் கருவியைக் குறித்ததாகக் கோடல் தவருகாது. பேரியாழ் நரம்பு 21. மகரயாழ் நரம்பு 19. சகோடயாழ் நரம்பு 14. செங்கோட்டியாழ் நரம்பு 7. இவையன்றிச் சிறுபான்மையவான பிறவும் உள. 'ஏழில்' என்பது யாழ்க்குப் பெயராயின், செங்கோட்டி யாழைத்தான் உணர்த்தல்வேண்டும். அதுவும் 'இல்' என்பது துளையெனப் பொருள் படாத வழியே. யாழ்ப் பொதுப் பெயராக 'எழு நரம்பு' என்றுண்டேயன்றி 'ஏழில்' என்றில்லை. திருவருள் 'ஏழில்' 'எட்டில்' என்பவற்றின் பொருளை உணர்த்துமென்று அதனை வழுத்துகின்றேன்.

இதுகாறுங் கூறியவற்ருல் 'ஏழில்' என்னுந் தமிழ்ப் பெயர் திருவாசகத்திற் காணப்படுதலும், அதன் பொருள் நாகசுரம் என்பதும், அப்பொருளைக் குறிக்கும் பெயராகவே அத் திருவாசகத்திற்குப் பொருள்கோடல் வேண்டும் என்பதும், எழுபுழை, ஐம்புழை என்னும் பெயர்கள் பண்டைய வழக்கிலிருந்தன என்பதும் பிறவும் ஒருவாறு குறிக்கப்பெற்றன.

திரிசூலம்

சிவபெருமானது திருக்கரத்திலுள்ள ஆயுதங்களுள் திரிசூலமுமொன்று. மற்றைய ஆயுதங்களெல்லாவற்றினும் இதுவே பிரதானமானது. சுவாமி திருவுருவைப் பார்க்கும்போது அது ஓர் ஆயுதம்போற் காணப்படினும் உண்மையில் அது ஆயுதமன்று; சிவபெருமானுடைய அங்கப் பிரத்தியங்க சாங்க உபாங்கங்கள் இவையிவையென்று கூறும் வாதுளாகமம் ஆயுதங்களைப்பற்றிச் சொல்லத் தொடங்கி " குணஞ்ச திரிசூலம் " என ஓதிற்று. அதாவது சிவபெருமானுடைய ஆதிசத்தியின் பேதமாகிய ஆரணி ஜெனனி ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளான குணங்களே திரிசூலமாம் என்பது அதன்பொருள். அவ்வாகமம் இப்படியே ஏனைய ஆயுதங்களுக்கும் பொருள் கூறுகின்றது.

பதிப்பொருளின் சத்தியாகிய ஆதிசத்தி திரோதானசத்தியென்றும் சொல்லப்படும். அச்சத்தி படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் செய்யும் நிமித்தமாக ஆரணி ஜெனனி ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளாகப் பிரிந்து நிற்கும். நின்று பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவரையும் அதிட்டித்து அவர்வாயிலாக அவ்வைந்தொழில் செய்யும். பிரமா முதலிய ஐவரும் ஐந்தொழில் செய்தல் அவரது சுதந்திரமன்று. இச்சத்திகளால் அதிட்டிக்கப்பட்டே செய்வர்.

உயிரவை நிலை.

கே. ஆறுமுக நாவலர்.

இவ்வுலகில் மானிடராய்ப் பிறந்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய முக்கியமான பொருள்கள் மூன்று. அவை இறை, உயிர், தளை என்பனவாம். இறைவனை உணர்ந்து உயிர்களாகிய நமது நிலைமையையும் நன்கறிந்து நாம் கடவுளை அடைவதற்கு ஏற்படும் தடைகளைக் களைந்து அவன் திருவடி அடைதற்குரிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதலே மனிதர்களின் தலைசிறந்த கடமையாகும். இதற்குரிய ஆற்றல் மானிடர்களிடம் இருப்பதினாலேயே மானிடப்பிறவி தலைசிறந்த பிறவியாயிற்று.

1. உயிர்கள் எண்ணிலாதன

உயிர்கள் உயிர்ப்பினை அல்லது மூச்சு விட்டு வாங்குதலினை உடையன. அவைகளை நால்வகைத் தோற்றம் எனவும், எழுவகைப் பிறப்பு எனவும், 84 இலட்சம் பேதமெனவும் பிறவும் பெரியோர் கூறுவர். எல்லா உயிர்களும் இவ்வுலகில் துய்ப்பன ஊண், உறக்கம், காதல் எனும் மூன்றினையுமே ஆகும். மனிதனும் இம் மூவகை இன்பங்களை அனுபவிப்பதிலேயே வாழ்நாளைக் கழித்தால் எல்லாப் பிறவிகளையும்விட மானிடப் பிறப்பு எவ்வாறு மாட்சியுடையதாகும்? இறைவன் திருவடியை அடைதற்கு ஆவன செய்யும் ஆற்றல் மக்களிடம் மறைந்துகிடக்கின்றது அதனைப் பயன்படுத்துதலினாலேயே மானிடப் பிறப்பு எடுத்ததன் பலனை மனிதன் அடைகின்றான்.

2. உயிர்கள் அழிவில்லாதன

உடம்பெடுத்த உயிர்கள் உடம்பிலிருந்து பிரிவதை மரணம் என்கிறோம். மரணத்தோடு உடம்பு அழிகிறதே தவிர உயிர் அழிவதில்லை. கடவுள் அழிவற்றவர். உயிர்களும் அவரைப் போல் அழிவற்றன. அவை ஒரு உடம்பை விட்டால் வேறொரு உடம்பை எடுக்கின்றன. முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்படுகின்றது. பாம்பு மேல்தோலாகிய சட்டையைக் கழற்றி விட்டுப் போய்விடுகின்றது. அதுபோலவே நாம் நமது உடம்பை விட்டுப் பிரிகிறோம். நமக்கு அழிவு என்பது இல்லை. நமது உடம்பு அழியும். உயிர் என்றும் அழியாது. உடம்பு அழிவோடு உயிரும் அழிந்துவிடுமென சிலர் கருதுகிறார்கள். அது தவறு. உயிர் எந்தக் காலத்திலும் மாறிமாறி உடம்பெடுத்து அழிவின்றி வாழ்கிறது.

3. உயிர்கள் இருள்மலத்தில் ஆழ்ந்துகிடக்கின்றன

இராக்காலத்தில் இருள் சூழ்கிறது. அவ்வேளையில் பகலில் கண்ட பொருள்களை நமது கண்ணால் பார்க்கமுடிவதில்லை. கண்ணிருந்தும் பொருள்களைக் காணமுடியாது தவிக்கிறோம்.

இந்த இருள்போல் **ஆணவம்** என்னும் ஓர் இருளும் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. இராக்காலத்து இருளோ தன்னைக் காட்டும்; ஆணவமாகிய இருளோ தன்னைக் காட்டாது. இவ்விருளின் வலிமையால் அருளை நுகர முடியாமல் உயிர் மயங்கிக்கிடக்கிறது.

4. உயிர்களுக்குப் புண்ணிய பாவங்களுக்குத் தக்கஉடலைக் கடவுள் கொடுக்கிறார்

உடம்பொடு வாழுகின்ற உயிர்கள் கொலை, களவு, கள், காமம், பொய், சூது, தெய்வ நிந்தனை முதலிய பாதகங்களைச் செய்து பாவத்தையும், நன்றியறிதல், பொறை யுடைமை, இன்சொல், இரக்கம், உண்மை, அன்பு, அருளுடைமை, கடவுள் வழிபாடு, தெய்வப்பணி முதலியன செய்து புண்ணி யத்தையும் ஈட்டுகின்றன. மரணத்தின்பின் அவை பாப மிகுதியால் பாப லோகங்களையும், புண்ணிய மிகுதியால் புண்ணிய லோகங் களையும் அடைந்து, செய்த பாப புண்ணியங் களுக்குத் தக்கவாறு இன்பத்தை அனுப வித்து, கடவுள் கட்டளைப்படி அவை திரும்பவும் பிறவிகளை எடுக்கின்றன. அவ்வாறு பிறப் பெடுத்த உயிர்கள் தான்வேறு உடம்புவேறு என நினையாமல், தானே உடம்பாய் உடம்பே தானய் நினைந்து அளவற்ற இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன. திரும்பவும் இறந்து திரும்பவும் பிறந்து பல்வேறு பிறப்புக்களை எடுக்கின்றன.

5. முத்திப்பேறு

இவ்வாறு இறந்து பிறந்து உழலும் உயிர் களிடத்து நிலைத்துநிற்கும் ஆணவ மலத்துக்குக் குறைவுவந்த வேளையில் கடவுள் திருவருளால் அதனிடத்து ஞானம் தோன்றும். சூரிய உத யத்தில் இருள் ஓடுவதுபோல ஞானம் தோன்ற மலங்கள் நீங்கும். மலம் நீங்க உயிர்கள் இறைவ னுடைய திருவடியை அடைகின்றன. இதுவே உயிர்களின் இயல்பான நிலைமை ஆகும்.



நாலாயிர திவ்யப் பிரபந்தம்

வித்துவான், பண்டித, ரா. புருஷோத்தம நாயடு.

நாலாயிர திவ்யப் பிரபந்தம். இது "எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து, இங்கு இல்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய என் சிங்கப்பிரான்" என்றபடியே பிரஹலாதனால் மெய்ப்பித்துக் காட்டலாம் வகை அங்கு இங்கு எனாதபடி எங்கும்பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிறைந்துள்ள இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பதின்மர் வாயிலாக வந்த தமிழ் மறையாகும். ஸ்ரீ ஆண்டாளையும் மதுரகவிகளையும் சேர்த்தால பன்னிருவர் ஆவர் ஆழ்வார்கள்.

பெயர்க்காரணம்.

'திவ்யம்' என்னும் சொல் தெய்வலோகத்திலிருப்பது என்ற பொருளும், பிரபந்தம் என்னும் சொல் நன்றாகக் கட்டப்பட்டது என்ற பொருளும் பயக்கும் வடசொற்கள். திவ் - தெய்வலோகம்; காவியம் என்பது காப்பியம் என மருவி வழங்குதல் போன்று, இச் சொல் 'திப்பியம்' எனத் தமிழில் மருவி வழங்கும். "திப்பியம்-தெய்வ லோகத்திலிருந்துண்டாயது; இச்சொல் 'திவ்யம்' என்னும் வடசொல்லின் சிதைவு; திவ் - தெய்வலோகம்" (மணிமே-7.37) என்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எழுதியிருத்தல் காண்க. பந்தம் - கட்டப்பட்டது. 'பிர' என்பது மேன்மை என்னும் பொருளைத் தருவதொரு உபசர்க்கம்; காசம், பிரகாசம் என்பதுபோல என்க.

'திவ்யம்' என்பது தெய்வலோகத்திலிருப்பது என்னும் பொருளைத் தருவதொரு சொல்லாதலின் இப் பிரபந்தம் ஆதியில் தெய்வலோகத்திலிருந்தது என்றும், ஆண்டு நித்தியர், முக்தர்கள் இறைவனை அநுபவிப்பதற்குக் கருவியாக இருந்த இதனை, இவ்வுலகத்து மக்களும் அறியக் கற்று வல்லவர்களாய், 'யான்' 'எனது' என்னும் செருக்கறுத்து அறவாழி யந்தணன்தாள் சேர்ந்து, பிறவிப் பெருங்கடல் நீந்தி, வானோர்க்குயர்ந்த வுலகமாகிய தன்னுடைச் சோதியை அடையும் பொருட்டு இறைவன் தனது நிர்ஹேதுக கடாக்ஷத்தினாலே ஆழ்வார்கள் மூலமாக இவ்வுலகிற்கு உய்த்தனன் என்றும நாம் ஆய்ந்து அறிதல் தகும். அற்றேல், ஆழ்வார்கள் அருளிச்செயலாமிதனை இறைவன் இவ்வுலகிற்கு உய்த்தனன் என்றல் எங்ஙனம் பொருந்துமெனின்? ஆழ்வார்கள் துணைக் காரணமேயாவர்; பாடியவன் இறைவனேயாவன்;

> "ஆம்முதல்வன் இவன் என்று தன்தேற்றி என்
> நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி
> தூமுதல் பக்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
> வாய் முதலப்பனை என்று மறப்பனோ"
>
> (திருவாய் 7. 9. 3)

என்று நம்மாழ்வார் தாமே யருளிச்செய்தல் காண்க.

ஆக, இது தெய்வலோகத் திருந்ததனால் 'திவ்யம்' என்றும் மக்கள் உயிர்கட்கு உறுதி என உயர்ந்தோரால் எடுக்கப்பட்டு ஒரு கோவைபடச் சேர்க்கப்பட்டதனால் பிரபந்தம் என்றும்,

நாலாயிரம் என்னும் தொகையைக் கொண்டுள்ளதால் 'நாலாயிரம்' என்றும் ஈண்டுக் கூறப்பட்ட காரணங்கள் மூன்றையுங்கொண்டு இதற்கு 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்னும் பெயரைச் சான்றோர் அமைத்தனர் என்க. இத்திவ்யப் பிரபந்தங்களை யருளிச்செய்ததனுல் ஆழ்வார்கள் திவ்ய சூரிகள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர் என்பதையும் இவற்ருல் பாராட்டப்பெற்ற தலங்கள் திவ்ய தேசங்கள் என்ற பெயரால் வழங்கப்படுகின்றன என்பதையும், (திவ்ய தேசங்கள் 108) இவற்ருல் பாராட்டப்பெருத மற்றைய தலங்கள் அப்பெயரால் வழங்கப் பெருமையும் ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

அற்றேல், தென்மொழியிலமைந்த இப் பிரபந்தம், தெய்வலோகத்தில் இருந்ததென்றும், ஆண்டு நின்றும் இவ்வுலகிற்கு வந்ததென்றுங் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? தமிழ் மொழி வழக்கு தெய்வலோகத்தும் உண்டோ? எனின், கூறுவன்.

பெரியாழ்வார் திருப்பல்லாண்டு என்னும் பிரபந்தத்தில் பலத்தைக் கூறும் ஈற்றுப் பாசுரத்தில், தாம் பாடிய திருப் பல்லாண்டினை இடைவிடாது ஓதுபவர்கள் பரமபதத்தே சென்று அங்குப் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து இப் பல்லாண்டினைப் பாடித் துதிப்பார்கள் என்பதாக,

"விட்டு சித்தன் விரும்பியசொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்
நமோ நாராயணுயவென்று
பல்லாண்டும் பரமாதமனைச்
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே"

என்று அருளிச்செய்வதாலும்,

"காட்டித்தன் கழலிணைகள் கடுநரகம் புகலொழித்த
வாட்டாற்றெம் பெருமானை வளங்குருகூர்ச்
சடகோபன்
பாட்டாய தமிழ்மாலை ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டு ஆரார் வானவர்கள் செவிக்கினிய
செஞ்சொல்லே"

'திருவாட்டாறு' என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கிற இறைவன்மேல், குருகூர்ச்சடகோபன் ஆய்ந்துரைத்த செவிக்கினிய செஞ்சொல்லாகிய இப்பத்துப் பாசுரங்களையும், பரமபதத்திலுள்ள நித்தியர் முத்தர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லக்கேட்டு ஒருமுறை கேட்டதோடு அமையாது, மேன்மேலும் கேட்க விரும்புகின்ருர்கள் என்று நம்மாழ்வார் அருளிச்செய்வதாலும்,

"பூவளரும் திருமாது புணர்ந்தநம் புண்ணியனுர்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெருநான் மறையோதி கீதமெல்லாம்
பாவளரும் திருப்பல்லாண் டிசையுடன் பாடுவமே"

திருமால் எழுந்தருளி யிருக்கின்ற பரமபதத்தைச் சேர்ந்து, அங்குள்ள அடியார்களுடன் கூடி, நான்கு வேதங்களையும், தமிழ்ப் பாவாலமைந்த திருப்பல்லாண்டையும் பாடுவோம் என்றும்,

"மண்ணுலகில் மயல்தீர்ந்து மனம்ததும்பி
மன்னுத பயனிகந்து மாலேயன்றிக்
கண்ணிலதென் றஞ்சியவன் கழலேபூண்டு
கடுஞ்சிறைபோய்க் கரையேறும் கதியேசென்று
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக்கண்டு
விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம்பாடிப்
பண்ணுலகில் படியாத இசையாற்பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே"

இவ்வுலகில் உண்டாகும் அறிவின்மை நீங்கி வறிதே கழிந்த வாணுளை நினைந்து மனம் தத்தளித்து, நிலையில்லாத சிற்றின்பங்களில் ஆசை யொழிந்து, நரகத்தை ஒழிப்பதற்கு இறைவனைத் தவிர வேறு கதியில்லை என்று அஞ்சி, பக்தி அல்லது பிரபத்தியால் இறைவனுடைய திருவடிகளைப்பற்றி, சரீரம் என்னும் கொடிய சிறையிலிருந்து புறப்பட்டு, பிறவிப் பெருங்கடலின் அக்கரையான பரமபதத்தை அர்ச்சராதி மார்க்கத்தால் சென்றடைந்து, அப் பரமபதத்திலுள்ள ஆச்சர்யங்களையெல்லாம் தெளிவாகக்கண்டு, அடியார்களுடன் கூடி வேதத்தைப் பாடி, சங்கீத உலகத்தில் அமையாத தேவகானத்தில் பாடப்படுகின்ற பல்லாண்டு' என்று தொடங்கும் திவ்யப்ரபந்தத்தை எக்காலமும் பாடுவோம்", என்று

வேதாந்த தேசிகர் 'பரமபத சோபானம்' என்னும் நூலில் அருளிச்செய்வதாலும்,

"சித்தர்க்கும் வேதச்சிரந்
தெரிந்தோர்கட்கும் செய்தவர்க்கும்
சுத்தர்க்கும் மற்றைத்துறை
துறந்தோர்கட்கும் தொண்டுசெய்யும்
பத்தர்க்கும் ஞானபகவர்க்கு
மேயன்றி பண்டுசென்ற
முத்தர்க்கு மின்னமுதம்
சடகோபன் சொன்னமொழித்தொகையே"

என்று கம்பநாடர் தாம் கூறிய சடகோபரந்தாதியிற் கூறுவதாலும் அந்தமில்லின்பத்தழிவில் வீட்டிலுள்ள அடியார்களிறைவனைத் துதிக்குங்கால், வடமொழி மறையைப்போலவே தென்மொழி மறையையும் தேவகானத்தால் பாடித் துதிக்கின்றூர்கள் என்னும் உண்மை அறியக்கிடக்கின்றது; இதனல் வைகுண்டத்திலும் தமிழ்மொழி வழக்குண்டு என அறிக. அந்தமில்லின்பத்தழிவில் வீட்டிலேயே வழங்கப்படும்போது, அதற்குக் கீழ்ப்பட்ட மற்றைத் தேவருலகனைத்தினும் இத்தமிழ் வழங்கப்படும் வழக்கு உண்டு என்பது கூறுமலேயமையும்.

அவ்வாறாயின் வடமொழி சேவபாடையென்று பெயர் கூறப்படுகின்றதே? எனின், ஆண்டு அம்மொழியின் பயிற்சி மிகுதி நோக்கியென்க.

இனி நாலாயிரம் என்னும் தொகையைப் பார்ப்போம்.

பாடினேர் பெயர்.		நூலின்பெயரும் செய்யுள் எண்ணும்.		மொத்த எண்.
1.	நம்மாழ்வார்	திருவிருத்தம் செய்யுள்	100	
		திருவாசிரியம் ,,	7	
		பெரிய திருவந்தாதி	87	
		திருவாய்மொழி	1102	1296
2.	பொய்கை ஆழ்வார்	முதல் திருவந்தாதி	100	100
3.	பூதத்தாழ்வார்	இரண்டாந் திருவந்தாதி	100	100
4.	பேயாழ்வார்	மூன்றாந் திருவந்தாதி	100	100
5.	திருமழிசையாழ்வார்	நான்முகன் திருவந்தாதி	96	
		திருச்சந்தவிருத்தம்	120	216
6.	குலசேகராழ்வார்	பெருமாள் திருமொழி	105	105
7.	பெரியாழ்வார்	திருப்பல்லாண்டு	12	
		பெரியாழ்வார் திருமொழி	461	473
8.	தொண்டரடிப்பொடிகள்	திருப்பள்ளியெழுச்சி	10	
		திருமாலை	45	55
9.	திருப்பாணழ்வார்	அமலனதிபிரான்	10	10
		பெரிய திருமொழி	1084	
		திருக்குறுந்தாண்டகம்	20	
		திருநெடுந்தாண்டகம்	30	
10.	திருமங்கைமன்னன்	சிறிய திருமடல்	1	
		பெரிய திருமடல்	1	
		திருவெழுகூற்றிருக்கை	1	1137
11.	மதுரகவிகள்	கண்ணிநுண்சிறுத்தாம்பு	11	11
12.	ஸ்ரீ ஆண்டாள்	திருப்பாவை	30	
		நாய்ச்சியார் திருமொழி	143	173
		பிரபந்தங்கள் 24.	செய்யுள்	3776

ஆக, திவ்யப்பிரபந்தத்தின் செய்யுள் தொகை 3776 ஆகின்றன; நாலாயிரத்திற்கு 224 பாசுரங்கள் குறையவும், அதனை நீக்காது நாலாயிரம் என்றே தொகையைக் கூறினர்; ஒரு சில எண்கள் குறையினும் குறைந்த அவ் வெண்களை நீக்காது, முழுத்தொகையாற் கூறி வருகின்ற வழக்குநோக்கி எனக்கொள்க.

நெடிற்றொடர்க் குற்றியலுகரம் 6. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் 6. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் 6. வன்றொடர்க் குற்றியலுகரம் 6. மென்றொடர்க் குற்றியலுகரம் 6. இடை யெழுத்தாறனுள் எவ்வெழுத்தோடும் 'டு'கர, 'று'கரங்கள் தொடராமையின் இடைத் தொடர்க் குற்றியலுகரம் 4 ஆகக் குற்றிய லுகரம் முப்பத்துநான்கேயாம்; இஃதிவ்வா றிருக்க, இவ்வெழுத்துக்கள் இரண்டையும் நீக் காது குற்றியலுகரம் முப்பத்தாறு என்றே கொண்டனர் நன்னூலார்.

"மயக்கவிதி யின்மையின் இடையினந் தொடராத 'ட'கர 'ற'கரங்களை ஊர்ந்த உகரம் இரண்டினையும் விலக்காது யானைமுகக்கடவுளை மும்மதத்தன் என்றாற்போல இலக்கணையென் னும் விதியால் குற்றியலுகரம் முப்பத்தாறு என்று மேற்கூறியவாறே வன்மையூருகரம் ஆறோடு நெடில் முதலிய ஆறையும் உறழ முப் பத்தாறாய் வருமாறுகாண்க" என்று சங்கர நமச்சிவாயப்புலவர் எழுதியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. (நன். சூ-94. உரை)

இனி, கலிவெண்பாவென்னும் யாப்பினால் யாக்கப்பட்ட தனிநிலைச் செய்யுளாகிய 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்' என்ற நூலிரண் டினையும் தனித்தனி ஒவ்வொரு செய்யுளாகக் கோடல்செய்யாது, அவற்றிலுள்ள கண்ணிகள் இருநூற்றிருபத்தாறையும் இருநூற்றிருபத் தாறு செய்யுளாகவே கொண்டு, திருமங்கை மன்னன் அருளிச்செய்த செய்யுட்கள் 1361 ஆகக் கணக்கிட்டு நாலாயிரம் என்னும் தொகையைக் குறைவின்றி முடித்துக்காட்டு வாரும், (இங்ஙனம் முடித்துக் காட்டுபவர்; ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவடிகளை யடைந்துய்ந்த அப்பிள்ளை என்னும் பெரியார்) நான்கு அடிகள் கொண்டது ஒரு செய்யுள் ஆதலின், மடல்களில் உள்ள இருநூற்று றிருபத்தாறு கண்ணிகளையும் 113 செய்யுட் களாகக்கொண்டு மடல்களில் முன்பின் உள்ள வெண்பாக்கள் ஐந்தையும் திருவரங்கத்தமுத னார் என்னும் பெரியார், தமது பரமாசாரிய ராகிய எம்பெருமானாரைப்பற்றி யருளிச்செய்த "இராமாநுஜநூற்றந்தாதி" என்னும் நூலி லுள்ள செய்யுட்கள் நூற்றெட்டையும், மடல் களின் செய்யுட்கள் நூற்றுப்பதின்மூன்றுடன் கூட்டி நாலாயிரம் என்னும் தொகையை முடிப் பாரும் (வேதாந்த தேசிகர்) உளர். அவை யிற்றையும் கொள்க.

பிரபந்தத்திலுள்ள நூல்களின் பெயர்க்காரணம்.

1. தன்மையாற் பெயர்பெற்றவை: பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி, திருமாலை என்பன; சிந்தாமணி, சூளாமணி என்பன போலும்.

2. பாட்டாற் பெயர் பெற்றவை: திரு விருத்தம், திருவாசிரியம், திருச்சந்தவிருத்தம், திருவெழுகூற்றிருக்கைஎன்பன; கலித்தொகை என்பதுபோலும்.

3. காலத்தாற் பெயர்பெற்றவை: முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன் றாந் திருவந்தாதி என்பன; கார் நாற்பது என் பது போலும்.

4. முதற் குறிப்பால் பெயர்பெற்றவை: திருப்பல்லாண்டு, நான்முகன் திருவந்தாதி, அமலனாதிபிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு, என்பன; ஆத்திச்சூடி என்பதுபோலும்.

5. கருத்தனாற் பெயர்பெற்றவை: பெரி யாழ்வார் திருமொழி, நாய்ச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி என்பன; திருவள்ளுவர் என்றாற்போலும்.

6. தொழிலாற் பெயர்பெற்றவை: திருப் பள்ளியெழுச்சி, திருப்பாவை என்பன; யானைத் தொழில் என்பதுபோலும்.

7. மிகுதியாற் பெயர்பெற்றது: பெரிய திருமொழி; இறையனர் களவியல் என்பது போலும்.

8. அளவாற் பெயர்பெற்றவை: திருக் குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன; குறுந் தொகை, நெடுந்தொகை என்பனபோலும் கொள்க.

இவற்றுள் 'திருவிருத்தம்' என்பதில் 'திரு' என்பது பெருமைப் பொருளைக்காட்டி வரு கின்றதொரு அடைமொழி; 'விருத்தம்' என் பது கட்டளைக் கலித்துறைக்கு வழங்கிவரும் வேறு ஒருபெயர். இதனை, திருநாவுக்கரசு நாயனர் தேவாரத்துள் ஐந்தாம் திருமுறையுள் எண்பதாம் பதிகம் முதற்கொண்டு வருகின்ற கட்டளைக் கலித்துறையாலாகிய பதிகங்கட்குத் தலைப்பு 'திருவிருத்தம்' என அமைந்திருத்த லாலும் அறியலாம். இனி, திருவிருத்தம் என் பதனைத் தொழிலால் பெயர்பெற்றதாகவும் கோடல் தகும். அப்பொழுது 'விருத்தம்' என்பதற்குச் செய்தி என்று பொருள்; இந் நூலில் ஆழ்வார் தமது அன்பு மிகுதி முதலிய செய்திகளை இறைவன் முன்னிலையில் விண் ணப்பம் செய்கையால் இதற்கு 'விருத்தம்' என்பது பெயராயிற்று என்பது பூர்வாசாரியர் கள் கொள்கை.

திருவெழுகூற்றிருக்கையாவது, தேரைப் போல ஒரு சித்திரத்தை அமைத்து அதில் அமைக்கப்படுவதொரு செய்யுள்; ஆதலின் இது 'சித்திரக்கவி' எனப்படும்.

திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்ட கம் என்பனவற்றுள் 'திரு' என்பது மேற் கூறியவாறே வந்த அடைமொழி; 'குறுமை', 'நெடுமை' என்பவை இனம் விலக்கவந்த இனச் சுட்டுள்ள அடைமொழிகள்; 'தாண்டகம்' என் பது ஒரு நூலுக்குப் பெயர்; "மூவிரண்டேனும் இருநான்கேனும், சீர்வகை நாட்டிச் செய்யு ளின் ஆடவர், கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள், அறுசீர் குறியது நெடியது எண் சீர்" என்பது பன்னிரு பாட்டியல் (சூ-305). இவ்விலக்கணத்தின்படி அறுசீர் விருத்தத் தால் ஆயது 'திருக்குறுந்தாண்டகம்' என்றும், எண்சீர் விருத்தத்தால் ஆயது 'திருநெடுந் தாண்டகம்' என்றும் பெயர்பெற்றன என்று நாம் அறிதல் தக்கது.

'தமிழ்மறை' என்பதற்குரிய காரணங்கள்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனர்; "பொய் மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன்" (பெரிய திரு. மொ. 6. 6. 10) என்பதனல் ஆழ் வார் பொய்யற்ற மெய்யர் என்பதும், "மருளில் வண்குருகூர் வண்சடகோபன்" (திருவாய் 2-1-11) என்பதனல் முக்குற்றமும் அற்றவர் என்பதும் தேற்றம்; இவற்றால் ஆழ்வார் நிறை மொழிமாந்தர் என்பது பெறுதும்; "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆணை ஆயிரம் (6.3.11) என்பதனல் ஆணையாற் கிளத்தல் பெறுதும்; 'கொந்தலர் பொழில் குருகூர்ச்சடகோபன்; சந்தங்கள் ஆயிரத்து இவை' என்பதனல்மறை என்பது பெறுதும்; சந்தங்கள் என்பது வேதம்; இக் கூறிய காரணங்களால் திவ்யப் பிரபந்தம் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறையென்பது தெளிவு; இனி மறை யின் தன்மைகளையும் நோக்குதும்; "குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த, அழிவில்லா ஆயிரத்திப்பத்து" (9.7.11) "கெடலில் ஆயிரத் துள் இவைபத்தும்" என்பனவற்றால் அழி வின்மை பெறுதும்; "முந்தை ஆயிரத்துள் இவை, தொலைவில்லி மங்கலத்தைச் சொன்ன செந்தமிழ் பத்தும்" (6.5.11) என்பதனல் நித்தியமாயிருப்பதென்பது பெறுதும்; "பொய் யில் பாடல் ஆயிரத்துள் இவையும் பத்து" (4. 3. 11) என்பதனல் பொய்யாமை பெறுதும்; "தீதிலாத வொண்தமிழ்கள் இவை ஆயிரம்" (9.1.11), "மாதவன்பால் சடகோபன், தீதவ மின்றியுரைத்த, ஏதமில் ஆயிரம்" (1. 6. 11) என்பனவற்றால் எவ்வகைக் குற்றமுமின்மை கூறப்படுவதால் நிர்தோஷமானது என்பது பெறுதும்; "தென்குருகூர்ச் சடகோபன் சொல், தெளிவுற்ற ஆயிரத்துள்" (7. 5. 11) என்பதனல் பொருட்டெளிவு பெறுதும்; ஆக இவற்றால் மறையின் தன்மைகள் பெற்றாம்.

"மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கங்கூற அவதரித்த"

என்கிறபடியே நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு பிரபந்தங்களையும் நான்கு மறைகளாகவும், திருமங்கைமன்னன் அருளிச்செய்த ஆறு பிரபந்தங்களை ஆறு அங்கங்களாகவும், மற்றை ஆழ்வார்கள் எண்மர் அருளிச்செய்த பிரபந்தங்களை உபாங்கங்களாகவும் அவற்றின் பொருட்சிறப்பின் பெற்றியால் கூறப்படும்.

இதனை, 'மறை' என்ற சொல்லால் சொல்ல அமைந்திருக்க அவ்வாறு கூறாது 'தமிழ்' என்ற அடையைச் சேர்த்து 'தமிழ்மறை' என்று சொன்னதனல் 'வடமொழிமறை' ஒன்று உண்டு என்பது போதரும்; இவ்வடை செஞ்ஞாயிறு என்றாற் போலும் இனச்சுட்டில்லா அடை யன்று; செந்தாமரை என்றாற் போலும் இனச்சுட்டுள்ள அடை. 'வடமொழி மறை' யென்றது 'தென்மொழிமறை' யை நினைத்திறே' என்பது ஆசார்ய ஹ்ருதயம் 42 சூ. செந்தாமரைக்கும் வெண்டாமரைக்கும் வேறுபாடு நிறம் ஒன்றே; ஏனைய தம்முள் ஒக்கும்; அங்ஙனமே, தென்மொழி மறைக்கும், வடமொழி மறைக்கும் வேறுபாடு தமிழ், சமஸ்கிருதம் என்பதொன்றே. இரண்டிலும் கூறப்படும் பொருள் தம்முள் ஒக்கும்; இது தொல்லையோர் துணிவு. ஒப்புமை வருமாறு:-

தென்மொழி.

1. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி நான்கும் நான்கு மறைகள்.

2. திருமங்கை மன்னன் அருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை இந்த ஆறும் ஆறங்கங்கள்.

3. மற்றை ஆழ்வார்கள் எண்மரும் அருளிச்செய்த பிரபந்தங்கள் உபாங்கங்கள்.

வடமொழி.

1. ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் நான்கும் நான்கு வேதங்கள்.

2. சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், கல்பம், ஜோதிஷம் இந்த ஆறும் ஆறங்கங்கள்.

3 மீமாம்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வம், அர்த்தசாஸ்திரம் இந்த எட்டும் உபாங்கங்கள்.

"வேத சதுஷ்டயங் கோபாங்கள் பதினாலும்போல, இந்நாலுக்கும் இருந்தமிழ்நூற் புலவர் பனுவலாறும், மற்றை எண்மர் நன்மாலைகளும்" என்பது ஆசார்ய ஹ்ருதயம் 43சூ. ஈண்டு இந்நாலுக்கும் என்பது நம்மாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்கள் நான்கிற்கும் என்று பொருள்.

இதுகாறும் கூறியவற்றால் திவ்யப்ரபந்தம் 'தமிழ்மறை' யென்பது மலைமேலிட்ட விளக்காக விளங்குதல் காண்க.

இவ்விரு மொழிகளும் உயர்வற உயர் நலமுடைய அயர்வறும் அமரர்கள் அதிபதியாம் இறைவனுடைய துயரறு சுடரடியைத் தொழுதெழுவதற்கு இரு கண்களாக நின்று நிலவுதலின், இறைவனை வணங்கும் அடியார்களை "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்" (7. 8. 9) என்றும், வணங்கி அடையும் பயன் இறைவனுதலின், அவ்விறைவனை "அந்தமிழின்பப்பாவினை அவ்வடமொழியை" (பெருமாள் திருமொழி) என்றும், 'புல்லாணித் தென்னன் தமிழை வடமொழியை' (பெரிய திருமடல்) என்றும், 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித் திசைநான்குமாய் திங்கள் ஞாயிருகி, அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா வந்தணனை' (திருநெடுந்தாண்டகம்) என்றும் அவ்வம் மொழிகளாகவே அபேதப் படுத்திப் பாடுவார் ஆயினர்.

இவ்விரு மறைகளும் தம்மில் ஒத்த கருத்துடையவாய் இருத்தலின் ஒக்கு மேனும், சிற்சில வகையில் தமிழ் மறைக்கு ஏற்றமும் கூறுவர் சான்றோர். அவை வருமாறு:—

1. பொருள் உணரும் வகையில், வடமொழி மறை நாளிகேர பாகமாக அரியதாயிருத்தல்; தமிழ்மறை திராக்ஷா பாகமாக எளியதாயிருத்தல். இதனை,

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்தண்
பொருநல்வரு குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம்பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்தசோதி
வையமெலா மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்ய தமிழ்மாலைகள் நாமதெளியவோதி
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே"

என்று வேதாந்த தேசிகரும்,

"உயிர்த்தாரையிற் புக்குறு
குறும்பாமொரு மூன்றினையும்
செயிர்த்தார் குருகைவந்தார்
திருவாய்மொழி செப்பலுற்றால்
மயிர்த்தாரைகள் பொடிக்கும
கண்ணீர்மல்கு மாமறையுள்
அயிர்த்தார் அயிர்த்தபொருள்
வெளியாம் எங்களந்தணர்க்கே.
(33. சடகோ. அந்)

"உயிர் செல்கின்ற வழியே உடன்சென்று கூடுகின்ற முக்குறும்புகளையும் வெறுத்தவராகிய நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஓதியுணரத் தொடங்கினால், எங்களுடைய ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு உடல் மயிர்கள் சிலிர்ப்புக்கொள்ளும்; பொருளுணர்தற்கரிய பெருமை பொருந்திய வேதங்களின் கருத்துக்களில் சந்தேகித்த அர்த்தங்களெல்லாம் நன்கு விளங்கும்," எனக் கம்பநாடாரும் கூறியவற்றால் உணரலாம்.

2. இறைவனுடைய கல்யாண குணங்களைக் கூறத்தொடங்கிய வடமொழி வேதம் முற்றுங் கூறமுடியாமல் மீளலும், தமிழ்மறை "உயர்வற உயர்நலமுடையவன் யவன் யவன்" என முதலடியிலேயே தெளிவாகக் கூறலும். இதனை,

"வேதத்தின் முன்செல்க
மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன்முதலோர்
கோதற்றஞானக் கொழுந்தின்முன்
செல்க குணங்கடந்த
போதக்கடலெங்கள் தென்குருகூர்ப்
புனிதன் கவியோர்
பாதத்தின் முன்செல்லுமே
தொல்லைமூலப் பரஞ்சுடரே"
(சடகோ. அந் 1)

"பழமையானதாயும், எல்லாவற்றிற்கும் மூல காரணமாயும், எல்லாவற்றிற்கு மேலானதாயும் உள்ள சோதிஸ்வரூபமாய் விளங்குகின்ற ஸ்ரீமந் நாராயணன், வேதங்களைக் கடந்துசெல்லட்டும்; தத்துவங்களை ஆராய்ந்து அறிந்த முனிவர்களும். பிரமன் முதலான தேவர்களும் ஆகிய இவர்களுடைய குற்றமற்ற ஞானத்தின் முடிவைக் கடந்து சென்றாலும் செல்லட்டும்; எண்ணளவு கடந்த ஞானக் கடலாகிய பரிசுத்தமூர்த்தியான நம்மாழ்வார் அருளிச்செய்த பாசுரத்தினது ஒரு அடியைக் கடந்துசெல்ல மாட்டுவானோ? மாட்டான் என்றவாறு," எனக் கம்பநாடர் கூறியவற்றால் உணரலாம். மேலும் திருவிழாக்காலங்களில் இறைவன் திருவீதிகளில் திருவுலாப் போதருங்கால் வட.மொழி மறை பின்னும், தமிழ்மறை முன்னுமாக ஓதப்படுதல் இதற்கொரு சான்று. இதனைத் திருவரங்கம் முதலிய திவ்ய தேசங்களில் காண்க.

3. வடமொழி மறை ஒருசிலர்க்கே பயன்படுதலும், தமிழ் மறை மக்களாகப் பிறந்தாரனைவர்க்கும் பயன்படுதலும். இதனை, ஆசார்ய ஹ்ருதயம் என்னும் அரும்பெரும் நூலை அருளிச்செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் என்னும் பெரியார், "ம்ருத் கடம் போலன்றே பொற்குடம்" (சூத். 73) என்பர்; அதாவது மட்குடம் தொடுமவர்களே தொடுமித்தனை போக்கி எல்லார்க்கும் தொடவொண்ணுதா யிருக்குமாபோலே, வடமொழி மறை ஒரு சாரார் கற்றால் கற்கலாமத்தனை போக்கி எல்லாரும் கற்க உரியதன்றாயிருத்தல்; பொற்குடம் எல்லார்க்கும் தீண்டலாம்படி யிருத்தல்போலத் தமிழ்மறையும் எல்லாரும் கற்க உரியதாயிருத்தல்; என்றவாறு.

"செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயின் ஏனை
இதற்குரிய ரல்லாதார் இல்"

என்ற திருவள்ளுமாலைச் செய்யுளும் இக் கருத்தே பற்றி வந்தது.

ஆக, இதுகாறும் 'திவ்யப்பிரபந்தம்' எனப் பெயரமைந்ததற்குக் கூறிய காரணம், அது 'தமிழ்மறை'யாகும் என்பதற்குரிய காரணங்கள் ஆகிய இவற்றால் நாம் அறியவேண்டுவதொன்றுண்டு; அஃதென்னையெனின், தமிழ்மொழி இடையில் தோன்றியதன்று, அநாதியாகவுள்ளது; அழிவற்றது, நித்தியமாகவுள்ளது; என்பதேயாம். இவ்வுண்மையை உணர்ந்த கம்பநாடர் "என்றுமுளதென் தமிழ் இயம்பி யிசைகொண்டான்" (கம்பராமா- அகத்-47) என்றனர். "செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்தியமும் அநாதி" என்பது ஆசார்ய ஹ்ருதயம். ஆகஸ்தியம்-தமிழ்.

தமிழ்மொழி அநாதியாகவுள்ளது, நித்யமானது, அளவற்ற பெருமையை யுடையது என்னும் இவ் வியற்கையை உலகமக்கள் உணர்ந்துகோடற்கு ஒப்புயர்வற்ற காரணமாக இருக்கின்றது—இருப்பது தமிழ்மறையாகிய நாலாயிர திவ்யப் பிரபந்தமேயாம். ஆதலாலன்றே, "இது தோன்றுவதற்குத் தவம் செய்தனள் தமிழணங்கு" என்று கூறுவர் கல்வியிற் பெரியார். இதனை,

"பண்ணும் தமிழும் தவம் செய்தன;
பழ நான் மறையும்
மண்ணும் விசும்பும் தவம் செய்தன;
மகிழ் மாறன் செய்யுள்
எண்ணும் தகைமைக் குரிய மெய்
யோகியர் ஞான மென்னும்
கண்ணும் மனமும் செவியும்
தவம் செய்த காலத்திலே"

என்னும் அருமைச் செய்யுளால் அறிக.

அந்தமில்லின்பத் தழிவில் வீட்டில் எழுந்தருளியிருக்கின்ற ஆதிபகவனாகிய இறைவனும், அவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்று, உண்மைப்பொருளை உள்ளவாறு உணர்ந்து தாம் உணர்ந்தவாறே, உணர்ந்த அவ்வுறுதிப்பொருளை உலகினர்க்குபதேசித்த நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களும், அவர்கள் காட்டக்கண்டு, கண்டபொருளைக் கண்டவாறே காசினியோர்தாம் வாழ, "அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்கிற படியே தமது கரைபுரண்ட பேரருளால் எங்கும் பரப்பிய ஸ்ரீமந்நாதமுனிகள்தொடக்கமான ஆசார்யர்களும் செய்து போந்த காரியங்களால், தமிழ்மொழியின் இயற்கையும் அதன் பெருமையும் அழிவுறாதவாறு ஒருவராலும் துளக்கமுடியாத அரணை நம் தமிழ்மொழி யடைந்தது; தமிழ்மக்களாகிய நாமனைவரும் உண்மையுணரவும் தலைப்பட்டோம்; ஆதலின், தண்டமிழ் மூவர்காத்த வண்பொழில் வரைப்பகம், என்றென்றும் அவர்கட்குக் கடமைப் பட்டுள்ளது. இதுநிற்க.

தண் தமிழ்நாட்டின் தவப்பயனைத் தோன்றிய தமிழ்மறையாகிய இத் திவ்யப்பிரபந்தமானது, "நாரணற்கு ஞானத்தமிழ் புரிந்த நான்" என்கிறபடியே ஞானத்தமிழ் ஆதலானும், இவ்வுலகமானது உண்டியே உடையே என்றுகந்தோடும் மண்டலமாதலானும், ஞானதேசிகராம் நம் ஆழ்வார்கள் காலத்துக்குப் பின், இதனை விரும்பிக்கற்பார் மிகச்சிலரேயாயினர்; நாளடைவில் கற்கும் இச்சிலருங்கூட இலராயினரோ என்று ஐயுறுமாறு மிகமிக அருகி வரலாயினர்; இக்காலத்தும் பாரதம், இராமாயணம், பாகவதம் முதலிய நற்பேறளிக்கத்தக்க நூல்களை வாசிக்கும் இடங்களைச் சார்ந்து, அவற்றைக் கேட்பார் மிகச்சிலரே யாதலும், கூத்தாட்டு முதலியன நடக்கும் இடங்களைச் சார்ந்து அவற்றைக் காணும் மக்கள் பலராதலும் நாம் கண்கூடாகக் காண்கின்றோமன்றே? இக்காலத்தே இவ்வாறிருக்குமாயின், இடைக்காலத்தைப்பற்றிப் பேசுவதென்? கற்பார் இன்னர் ஆகவே, கற்கப்படும் பிரபந்தத்தின் வழக்கும் நாளடைவில் அருகி வந்து, இறுதியில் உளதோ இலதோ என்று ஐயுறும் நிலையில் இருந்தது; இதன்நிலை இன்னணமாக,

சிதம்பரத்திற்குத் தென்மேற்கிலுள்ள காட்டுமன்னார்கோயில் என்னும் தலத்தில் அவதரித்த பெரியார் ஒருவர்; அந்தணர் குலத்தினர்; நாதமுனிகள் என்னும் பெயரினர். இப்பெரியார் அத்தலத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் இறைவன்மேல் பேரன்பு பூண்டவர்; பூண்ட அன்பு காரணமாக அத்தலத்திலேயே ஒருதிருநந்தனவனம் அமைத்து, இறைவனுக்குத் திருமாலைகட்டிச் சாத்தித் திருவிளக்கு முதலானவைகளும் குறைவற நடத்தி, வித்வத் கோஷ்டிகளுடன் சாஸ்திரப் பிரவர்த்தனங்கள் செய்துகொண்டிருந்தனர்; அப்பொழுது, திவ்ய தேசயாத்திரை செய்வதற்குப் புறப்பட்ட மேல்நாட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர், காட்டுமன்னார்கோயிலுக்கு வந்து, அத் தலத்தில் எழுந்தருளியிராநின்ற இறைவனாகிய மன்னனாரைச் சேவித்து அவ்விறைவன் முன் னிலையில்,

"ஆராவமுதே அடியேன் உடலம்
அன்பால் நின்பாயே
நீராயலைந்து கரைய உருக்கு
கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய்
கண்டே னெம்மானே"

என்று தொடங்குகின்ற, கும்பகோணம் என வழங்கும் திருக்குடந்தை ஆராவமுதன் விஷயமான திருப்பாசுரங்கள் பத்தையும் பாடித் துதித்து, ஈற்றில் பயனைக் கூறுகின்ற பதினோராம் திருப்பாசுரத்தை,

"உழலை யென்பின் பேய்ச்சி முலையூடு
அவளை உயிருண்டான்
கழல்கள் அவையே சரணாகக்
கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலின் மலியச் சொன்ன
ஓராயிரத்துள் இப்பத்தும்
மழலைதீர வல்லார் காமர்
மானேய் நோக்கியர்க்கே"

என்று விண்ணப்பம் செய்து நின்றார்கள். அப்பொழுது அங்கு அருகர் இருந்துகேட்ட ஸ்ரீமந் நாதமுனிகள், அப்பாசுரங்கள் செவிக்கினிய செஞ்சொல்லாய் ஆராவமுதமாய் இருந்ததனால், செவிகளாற் பருகிப் பரமானந்தம் மேலிட்டு அவ்வடியார்களைப் பார்த்து "அடிகாள்! 'குழலின் மலியச் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் என்றிருக்கின்றது; தேவரீர்கட்கு இப்பிரபந்தம் முற்றப்போமோ?" என்றனர்; அவர்கள் ஸ்ரீமந் நாதமுனிகளைப் பார்த்து "அடிகேள்! அடியோங்கள் அறிவது இத்துணையே; ஏனைய வாரா; இதற்குமேல் தெரிந்தவர்களும் வேறு எவருமிலர்" என்று சொன்னார்கள்.

அப்பிரபந்தத்தை முற்றும் பெற்றல்லது தரியாத நிலையையடைந்த ஸ்ரீமந் நாதமுனிகள் நம்மாழ்வார் திருவவதாரம் செய்த திருக்குருகூரைச் சென்றடைந்தனர்; அத்தலத்து இறைவனாகிய பொலிந்துநின்ற பிரானையும், நம்மாழ்வாரையும் வாழ்த்தி வணங்கினர்; பின்னர் அங்குள்ள பெரியார்களைக் கண்டு விசாரித்து, ஸ்ரீ மதுரகவிகளின் மாணாக்கரின் மாணாக்கரான ஸ்ரீ பராங்குச தாசரைக் கண்டனர்; கண்டு, "இவ்விடத்தில் திருவாய்மொழி ஓதினவர்கள் உளரோ? திருவாய்மொழி யுண்டோ?" என்று கேட்டனர். அதற்கு அவர் திருவாய்மொழியும் மற்றைய திவ்யப் பிரபந்தங்களும் இப்பொழுது கிடைத்தலரிது; கற்பாரிலராயினமையின் மறைந்துபோயின; ஆனால், ஆழ்வாரை நேரிற் காணுதற்கு ஒருபாயமுண்டு; அதனைச் செய்யின் ஆழ்வார் கண்வெளியில் காட்சியளிப்பர்; அவ்வுபாயமாவது:- ஆழ்வார் திருமுன்னர் இருந்து, வேறொன்றும் சிந்தியாது, ஒருக்கிய மனத்துடன், ஆழ்வார் திருவடிகளை உன்னுதல் செய்து நியமத்துடன் "கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தைப் பன்னீராயிரம் உரு ஓதுவது; இது அடியேன் கூறும் கூற்றன்று; அடியேனது ஆசிரியர் கூறிய கூற்றாகும்" என்றனர்.

அதனைக் கேட்ட ஸ்ரீமந் நாதமுனிகள் உள்ளம் மிகவும் உவந்தனராய், அப்பிரபந்தத்தை அவரிடமிருந்து பெறும் முறையிற் பெற்று, ஆதிசேஷன் அவதாரமான புளிய மரத்தடியில் எழுந்தருளியிருக்கின்ற ஆழ்வார்

திருமுன்னர் இருந்து நியமத்துடன் கண்ணி நுண் சிறுத்தாம்பிலுள்ள பாசுரங்கள் பதினொன்றையும் பன்னீராயிரம் உரு ஓதலாயினர்; ஆழ்வார், ஸ்ரீமக் நாதமுனிகளுடைய கண்முகப்பே தோன்றி, "வேண்டியது யாது?" என்று வினவியருளினர். இவர் வேரற்ற மரம் போல் கீழ் விழுந்து வணங்கி எழுந்துநின்று புணர்த்த கையினராய், "அடியேனுக்குத் திருவாய்மொழி முற்றும் கொடுத்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டனர். ஆழ்வாரும் பேரருள்புரிந்து ஸ்ரீமந் நாதமுனிகளுக்குத் திவ்ய ஞானக்கண்ணை அளித்து, ரகஸ்யத்ர யார்த்தத்தையும் (திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் இவற்றின் பொருள்), திருவாய்மொழி முதலான நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தையும், அகில தர்சன தாத்பர்யங்களையும், அஷ்டாங்க யோக ரகஸ்யத்தையும் உபதேசித்தருளினர். பெற்ற நாதமுனிகள் உவந்த உள்ளத்தராய் ஆழ்வாரிடம் விடைபெற்றுக்கொண்டு, தாம் அவதரித்த இடமான காட்டுமன்னர்கோயிலுக்குச் சென்று, திவ்யப்பிரபந்தத்தை அநுசந்தித்துக் கொண்டும், சமம், தமம் முதலிய ஆத்ம குணங்களையுடைய பெரியார்கட்கு ஓதுவித்துக் கொண்டும், போருகிற நாளில், இவற்றை இறைவன் நியமனப்படி இயலும் இசையுமாக்கித் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வாரையும், மேலையகத்தாழ்வாரையும் கொண்டு பாடுவித்தருள, இப் பிரபந்தம் உலகத்தில் மீண்டும் பரவலாயிற்று.

மாறன் மலரடி வாழ்க.

"என் உள்ளே சிரித்திட்டேனே"

உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவான் உணர்வொன்றில்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம்பூண்டு
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம்
உடனிருந்து அறிதிஎன்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான்
வில(வு)அறச் சிரித்திட்டேனே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்(று) எல்லாம்
உடனிருந்து அறிதிஎன்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட்டேனே.

—திருநாவுக்கரசுநாயனார்.

தருமத்தை விரிக்கிறோம்.

வேதோபநிஷத ஆசிரியர்,
எம். ஆர். ஜம்புநாதன்.

தருமம் அனைத்திலும் தலைசிறந்தது. அதனால் எதையும் பெறலாம். இக வாழ்க்கையில் செல்வம் முதலியவற்றை அடைந்து தருமத்தால் தரணியைக் கைப்பற்றி மக்களை எல்லாம் அரசுபுரியலாம். சாஸ்திரங்களின் உண்மைகளை அறியலாம். பொருள்களின் நுட்பங்களைக் காணலாம். பிரபஞ்சத்திலே மறைந்துள்ள பல அற்புத மருமங்களை உணரலாம். அணுவினுள் பதிந்துள்ள அகண்ட சக்தியை வாங்கிப் பூமண்டலத்தைப் பதறச் செய்யலாம்.

இவ்வுண்மையை அறிந்து தருமத்திலே தோய்ந்து பூர்வ பரதமக்கள், 'அசுவமேத யாகம்' என்னும் நாமத்தால் உலகத்தைப் பற்றினார்கள். பௌத்த தருமத்தால் இந்தியாவின் நாகரீகம் தரணியெங்கும் பரவிற்று கிறிஸ்துவ தருமம் 'போப்பாண்டவனை' வெகு காலம் அரசுபுரியச்செய்தது. வெள்ளையர்கள் நம்மைத் தருமத்தால் பரவசஞ்செய்து நம்முடைய மனத்தைப் பல வருடங்கள் கொள்ளை கொண்டார்கள். அராபியர்களுக்கு ஸாம்ராஜ்யத்தை யளித்தது மகம்மதிய மதம்.

தருமம் தேய்ந்து நாம் பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டோம். சிறுவாழ்க்கை யென்னும் மோகத்தால் கட்டுப்பட்டோம். அச்சமென்னும் பேயால் மறைந்து பயந்திருந்தோம் தன்னயத்தைக் கருதி, சுயமரியாதையை யிழந்தோம். நம்முடைய தேசத்தைப் பறிகொடுத்தோம். ஆனால் மீண்டும் தருமம் தோன்றி நம்மைக்காத்துச் சுதந்திரத்தை அளித்தது. தருமநெறியைத் துலக்கி, தேச முக்தியைத் தந்த அத் தருமபுருடர்களை நினைத்து நாம் தியானிக்கிறோம். ஹிந்து தருமத்தை வெள்ளைப் பாதிரிகளின் கிரகணத்திலிருந்து விலக்கி, பழைய தருமத்தில் புதிய உண்மைகளைப் புலப்படுத்தியவர் இராம்மோகன ராயர் அவர்கள். அவரைப் பின்தொடர்ந்து ஸீதாநாத் தத்வ பூஷணரும், கேசவச்சந்திரசென் அவர்களும், தேவாந்திரநாத் டாக்குர் அவர்களும், கவிச்சக்கரவர்த்தி ரவீந்திரர் அவர்களும் 'பிரம்ம பொக்கிஷத்தைப்' பாமரர்களுக்கு வெளிப்படுத்தினார்கள். பிறகு ஸ்ரீ தயானந்தர் வேதத்தைப் பூமண்டலத்திலுள்ளவர்கள் எல்லாம் படிக்கலாம் எனக்கூறி, இந்தியாவிலே புதிய யுகத்தை ஸ்தாபித்தார். அவரைப் பின் தொடர்ந்து இலஜபதிராயரும், மகாத்மா ஹன்ஸராஜரும், சுவாமி சிரத்தானந்தரும், தாழ்ந்தோரை உயர்த்தி, கல்வியைப் பரப்பி, ஸமூகசேவையைச் செய்து, இந்து தருமத்தின் முதலங்கத்தை உயிர்ப்பித்தார்கள். அப்பால் ஸ்வாமி விவேகானந்தர் நவீன மொழியிலே பழைய ரத்தினங்களைப் பதித்து நம்முடைய யுவகர்களைப் பிரமிக்கச்செய்தார். இவர்களுடைய தருமங்களையெல்லாம் ஒருமிக்கச் சேர்த்து மொழிச்சேவை, ஹரிஜனசேவை, சமூகசேவை, தேசச்சேவையை வற்புறுத்தி 'சைதானோடு'' போர் புரிவதற்குரிய அஹிம்சை என்னும் தருமச் சக்கரத்தைத் தோற்றுவித்தார் ஸ்ரீ காந்தி மகான். தென்னாட்டில் சர்க்கார் தேவாலயங்களைத் திறக்க மனத்தினுள் யோசனை செய்யுங்கால், தருமநூல்களின் மூலமான வேதங்களை எல்லாத் தமிழர்களும் அறியவேண்டுமென ஸ்ரீ தருமபுரம் ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகளவர்கள் யஜுர் வேதத்தையும், ஸ்ரீ திருப்பனந்தாள் தலைவரான ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதசுவாமிகள் ஸாம வேதத்தையும் அதர்வ வேதத்தையும் வடமொழிக் கோட்டையிலிருந்து வெளிப்படுத்த உதவிபுரிந்து தமிழ் மக்களுக்கு உயிரை அளித்தார்கள். தருமப் பிரசாரத்தில் தென்னாட்டில் தனித் தலைவராய் விளங்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின்** ஊக்கத்தால் தண்மையுள்ள தமிழர்கள் எரிபந்தங்களாகி அதருமங்களைச் சரிப்படுத்தி, நாடெங்கும் சுதந்திரத்தைத் திரப்படுத்தி, நிலமாம் அதிதியை வேதமொழியால் புகழ்ப்படுத்தி **अदितिं नाम वचसा** மேதினியிலே அறத்தைச் சரிப்படுத்துவார் என நாமனைவரும் விரிக்கிறோம்.

காந்தி பஞ்சகம்

அந்தோ ஜனவரி ஆறைந்து வெள்ளிஅந்தி
நொந்தே மநுதருமம் நோவெய்தச்—சிந்தைவெறி
கொள்காது ராம்கோட்சே கொன்றான் அறக்காந்தி
எள்ளினரோ காக்கவென்றார் ஈண்டு.

என்பும் பிறர்க்குரியர் என்றதிரு வள்ளுவர்சொல்
அன்பின் நமக்களித்த அண்ணலார்—முன்புமறை
போற்றும்இறை அன்பு பொறுமைநிறை நூற்றலுங்கை
ஏற்றுயர்ந் தார்புகழ்இன்(பு) எய்ந்து.

ஏற்றுக் கொடியர் இணைத்தாள் அடைஅப்பர்
சாற்றும் மணிமொழியர் தண்கலையர்—நீற்றருமை
போற்றடியர் மெய்ப்பொருளார் போதிகுரு நானக்சே(சு)
ஏற்றசரத் துங்காந்தி யே.

காந்திமகான் கட்டுரைஎக் காவலரும் போற்றிமகிழ்ந்(து)
ஆந்துணையும் காக்க அமைந்திட்டார்—பாந்தமுயர்
நேருவும் பட்டேலும் நேராரை வேரறுத்(து)இப்
பாருலவும் ஆட்சிபுரி வார்.

வார்கடலும் மங்கலமாம் வைகைமுத லாநதியும்
பேர்பெறுநங் காந்திஅத்தி பெற்றஉளம்—சீர்பெறநாம்
அன்பும் அறனும் அமைந்(து)இந் தியர்உயர
இன்ப இறை தாள்பணிவோம் இன்று.

ஆக்கியோர், தருமபுர ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரித் துறைத் தலைவர்;-
வித்துவான், திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்.

மக்களுட் சிறந்த மகாத்மா காந்தி அடிகள்



மலரும் மணமும்

என்று ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானும் பத்தியாகிய மலரைக்கொண்டு நமது அப்பனை அருச்சிக்க விளித்த வாறுங் காண்க. அஃதல்லாமலும் பூவின் முக்கூறாகிய பூ, பூவின் நிறம், பூவின் மணம், சத்துச் சித்து ஆனந்தமாகிய பரம்பொருளினது அருள்வெளிநிலைக்கு உவமிக்கப்பட்டிருக்கிறது.

பூவண்ணம் பூவின் மணம்போல
மெய்ப்போத இன்ப
மாவண்ண மெய்கொண்டவன்.

இவ்வுலக மாதினிடத்து மிகுதியாகச் சிறந்து விளங்கும் பொருள்களுள் பூவினைப்போலப் பொலிவுடையதும், நம்முள்ளத்தின் (இருதயகமலத்தின்) தூய்மை, அன்பு, இன்பமாதியவற்றை இனிது விளக்குவதும் எது வுண்டு? இதைப்போல நமது தனிப்பெருங் கடவுளுடைய அளப்பரிய சிறப்பையும் பொருளையும் செம்மையையும் விளக்கிக் காட்டுவது எது? அப்பூவின் புதுமையும், இயைபும், அழகிய அரிபரந்த இதழின் மென்மையும் எவ்வளவோ நம் மனத்தைக் கவர்ந்து உள்ளக் கிளர்ச்சியை யெழுப்புகின்றது. ஆதலின், நம்மவர்களும் அதன்மேல் மிகவும் விருப்புடையவர்களாய் அதனைத் தாங்கள் அணிந்தும் கடவுட்குச் சாத்தியும் தத்துவ உண்மைகளில் காட்டாக எடுத்து வழங்கியும் வருகின்றார்கள். அன்றியும் நம்மவர்கட்குத் திருவிழாக்களிலும் நித்திய நைமித்தியாதிகளிலும் இன்றியமையாதனவாயுள்ளன பூக்களேயாம். அவர்கள் இறைவனுக்கு இவற்றை மிக உவப்போடும் அணிகிறார்கள்.

சித்தந் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே.

என்றார், பேரணியும் இனிய நடையும் அமைந்துள்ள திருவிளையாடற் புராணம் செய்த பரஞ்சோதி மாமுனிவர். இத் திருவுருவை நமது அப்பரும்,

ஆவாகி ஆவினில் ஐந்துமாகி
அறிவாகி அழலாகி அவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையுமாகி
நாதனாய் நால்வேதத் துள்ளோனாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்றமாகிப்
புக்குளால் வாசமாய் நின்றானாகித்
தேவாகித் தேவர் முதலுமாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே.

என்று சிறப்பித்து அதன் கலப்பு நிலைமை கூறியவாறுங் காண்க. தத்துவவுண்மை தெளிந்து நமதிறைவன்பால் பேரன்பு தழைத்துருகிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானுக்கு, பூவுக்கும் அதன் மணத்திற்குமுள்ள மிக நுண்ணிய இயைபு வேறோர் விதமாக விளங்கி,

பூவில்நாற்றம் போன்றுயர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை

என்றெடுத்துப் பாடியருளினார்கள். மற்றோரிடத்தும் இவ்வொற்றுமை நயத்தையே உடலுயிர்க்கு ஒப்பிட்டு, அவ்வாறு ஒப்பிட்ட

உவமான உவமேயங்களாகிய இரண்டையுமே பரம்பொருளினது இயைபிற்கொப்பிட்டு அவற்றின் வேற்றுமையை (பூ மணம் உடலுயிரின் பேதத்தை) விளக்கியருளினர்கள். அது,

உற்றஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன்ஆண்டு தன் அடியரிற்கூட்டிய
அதிசயங் கண்டாமே.

என்பதாம். உலகுயிரோடிறைவன் பெற்றிருக்கும் அத்துவித சம்பந்தம் உடலும் உயிரும் ஒற்றுமையுற இயைந்திருக்கும் சம்பந்தத்திற்கு உவமிக்கப்படினும், உடலெங்கணும் நிறைவுற்றிருக்கும் உயிர் உடல் வரம்புக்கு உட்படுதலானும், அவ்வொற்றுமையால் உயிர்பெறுவது நிலையா இன்பமேயாதலானும், தன்னியல்பறிய வல்ல அன்பர்கட்குத் தனது பேரருளையும் நிலையுள்ள பேரின்பத்தையும் விரைந்தளிக்க மூந்தும் பரம்பொருள் எவற்றினும் நிறைந்து அவற்றையுங்கடந்து, கருணையும்பேரின்பமுமே யுருவாய் நிற்கும் தனது பெருந்தன்மையை உண்மையாகவும் நிலையாகவும் அவற்றினின்றும் பிரித்துப் பொருள் விளக்காமையானும் அதினின்றும் வேறு படுத்திக் கூறுவர்; ஆக இறைவன்பால் அயரா அன்பு இன்றுண்டேல் அன்றே,

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது

என்று திருமூலரும் கூறுவாராயினர். மேலும், மகாயோகிகளாகிய திருமூலதேவர் அனேக விடங்களில் இப்பூமண உவமானங்களைத் தெளிந்துரைத்திருப்பதில், இறைவனது பரிபூரணத் தன்மையை விளக்கி இப்பூக்களை ஒன்றின்மேலொன்ருக அடுக்கித் தொடுத்துக் காட்டியிருக்கும் ஒன்றை வரைவாம்.

காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போன்றுளன் எம்இறை
காவலன் எங்குங் கலந்து நின்ருனே.

தாயுமானசுவாமிகள் அன்பு நிலையாயுள்ள அசலப்பொருளை விளித்துக் கூறுமிடத்து இவ்வுவமானத்தை மிகவும் அழகாக உரைக்கின்ருர்.

ஆகார புவனம்இன் பாகாரமாக
அங்ஙனே யொரு மொழியா லகண்டாகார
யோகானு பூதிபெற்ற அன்பராவிக்
குறுதுணையே! என்னளவும் உகந்த நட்பே!
வாகாரும் படிக்கிசை கிண்கிணிவாயென்ன
மலர்ந்த மலரிடைவாச மருவு மாபோல்
தேகாதி உலகமெங்குங் கலந்துதானே
திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே!

தேறுந்தொறும் இனிமைதரும் அருந்தமிழ்மொழியாகிய செல்வக்குழவியைச் சங்கப் பலகையாம் தொட்டிலிற் கிடத்தி வளர்த்த தாயாராகிய சங்கப் புலவருள் திலகம் போன்றவரும், சேக்கிழார் பெருந்தகையாராலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் புகழ்ந்து துதிக்கப்பட்ட பொய்யடிமையில்லாப் புலவர்களுள் தலைமையுடையவரும், மாதேவனருளிய பொருட்கு உரைகண்டவருமாகிய நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதியந்தாதியில்,

உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும் போல் விம்மிப்—புரையின்றிச்
சென்றவா றெங்குந் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து.

என்று ஏனைய உவமானங்களோடு பூமண உவமானத்தையும் தந்தருளினர்கள்.

தருமபுர ஆதீன ஆதி குருமூர்த்தியின் "சிவபோகசாரப்" பூங்காவினின்றும், அத்துவித இலக்கணத்தை அருமையாக விளக்கும் ஓர்பூவை யெடுத்து நம்மாலையில் தொடுப்பாம்.

இந்தனத்தில்அங்கி எரியுறுநீர் தேன்இரதங்
கந்தமலர்ப் போதுவான் காலொளி கண்-சந்ததமும்
அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கு முறை.

1897 ஜூன் தமிழ் சித்தாந்த தீபிகையில் உள்ளது.

அட்டைப்பட விளக்கம்

உரைசேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம் யோனி பேதங்கள் உள்ளன இந்த உலகத்தில். அவைகள் யாவும் உய்ந்து இன்புற்று வாழவேண்டுமென்று விரும்புபவள் உலகமாதா – பராசக்தி. விருப்பத்தைப்பூர்த்தி செய்வது சிவபூஜை ஒன்றுதான் என்பதையும், இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது அதுவே என்பதையும் உபதேச வாயிலாக, சிவ பரம்பொருள் சொல்லக் கேட்டறிந்து கொண்டாள். மற்றும் நாயகன் விரும்புவதையே தானும் விரும்புவது நாயகியின் நல்லிலக்கணமன்றோ? ஆகவே சிவபூஜை செய்யும் விருப்பத்தினை இறைவனிடம் அறிவித்தாள். மாதவஞ்செய்த தென்திசையிலுள்ள காஞ்சிபுரத்திலே சென்று பூசனை புரிக என்று ஆணை பிறந்தது. காஞ்சியை யடைந்தாள். உடன்வந்த சேடியர்கள் பூசனைக்கு வேண்டிய சாதனங்களையெல்லாம் சேகரித்துத்தந்தார்கள். கரந்தரும் பயன் இது என உணர்ந்த உலகுடை நாயகி கம்பை நதிக்கரையில் மணலால் இலிங்கம் அமைத்துப் பூசிக்கின்றாள். முன்னவன் முன்னின்று அருள் சுரக்கும் முறையை அறிவார் யார்? பூசிக்கும் வேளையில் அம்மைக்கு அருள்பாலிக்கத் திருவுள்ளம்பற்றினர் அண்ணல். அவ்வண்ணம் ஆற்றில் நீர் பெருகி வருகிறது. அதுபோலவே அம்மையாருக்கு அன்பும் பெருகுகிறது.

பெருமான்மீது வெள்ளம்வரின் என்செய்வது என வெருண்டாள் பிராட்டி. கையால் தடுத்தனள். தடைசெயின் அது நிற்குமோ? அருகில் ஓடி வருகிறது. இறைவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள். ஆற்றுப்பெருக்கை அன்புப்பெருக்கு அளந்து விட்டது. தழுவுதலினால் மேனி குழைந்துகாட்டினர் அண்ணல். வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பட்டது. இக்காட்சியைத்தான் அட்டைப்படம் காட்டி நிற்கிறது.

அட்டைப்படம் (பின்புறம்)

தருமபுர ஆதீனத்தில்

குருமூர்த்த ஆலயங்கள்



தருமபுர ஆதீனம் இரண்டாவது மகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்த பரவசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

பதினெட்டாவது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஒன்றுமாம் யாவுமாம்.

ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.,

பாரதியார் ஓர் கனவு கண்டார். அக் கனவில் பராசக்தி அழகே உருவெடுத்து வந்தாற்போல வந்து இவரை எழுப்பி, 'தூங்காதே என்னைப்பார்' என்று சொன்னாளாம். இவருக்கு நெடுநாளிருந்துவந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள இதுதான் சமயம் என்று நினைத்து 'ஏகமோ பொருள்; அன்றி இரண்டாமோ' என்று கேட்டாராம். அதற்கு அவள் "ஒன்றுமாம் யாவுமாம்" என்று கூறி மறைந்துவிட்டாளாம். இது பாரதியார் மட்டும் கண்ட முடிவு என்று நினைக்கவேண்டாம். சிவசக்தியை வணங்கிவந்த தமிழ் முனிவர்கள் கண்ட முடிவும் இதுவே. "ஊனாகி, உயிராகி, அதன் உள்நின்ற உணர்வாகி, பிறவனைத்தும் நீயாய் நின்றாய்" என்று ஒருசிவபக்தர் பாடவில்லையா? உலகைப்பற்றி இவர்கள் இவ்வளவு எளிதாகக் கூறும் முடிவை நாமுமுணர்வதற்கு ஆசையிருக்கிறது; என்னமோவாஸ்தவந்தான். பக்குவம்தான் இல்லை. இவர்கள் காட்டும் வழியைப் பின்பற்றுவதற்கும், அவர்கள் கூறுவதை நம்புவதற்கும் நமக்கு மனஉறுதி வருகிறதில்லை. ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி விஞ்ஞானிகள் முடிவு கூறிவிட்டார்கள் என்றால் அதிலுண்மைதானிருக்கவேண்டும் என்று சிறிதும் தயங்காமல் நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம். இதன் மர்மம் விளங்கவில்லை. நிற்க உலகைப்பற்றி விஞ்ஞானிகளும் ஞானிகள் கண்ட முடிவுக்கு எவ்வாறு வந்தார்கள் என்பதை இக் கட்டுரையில் விவரிப்போம்.

விஞ்ஞானிகள் உலகில் பூமிதான் மிகப் பெரிய பொருள் என்று நினைத்து வந்த காலம் உண்டு; பூமியைச் சுற்றி சூரியன் ஓடிவருவதாகவும் நினைத்தார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் கோபர்நிகஸ் (Copernicus) என்ற விஞ்ஞானி இக்கருத்து தவறு என்று அவர்களுக்குச் சொன்னார். அதுமுதற்கொண்டு சூரியனே மிகப் பெரியது என்றும் அதைச் சுற்றியே பூமி ஓடிவருகிறது என்றும் நினைக்கலானார்கள். அக்காலத்தில் சூரியனையும் மற்ற கிரகங்களையும் கண்ணால் பார்த்து அறியவேண்டியதைத் தவிர வேறு வழி இல்லாமல் இருந்தது. கலிலியோ (Galileo) என்ற விஞ்ஞானி தொலை நோக்கியைக் (Telescope) கண்டுபிடித்தவுடனே சூரியனைப்பற்றியும் மற்ற கிரகங்களைப் பற்றியும் பல விஷயங்கள் திட்டமாக அறியப்பட்டன. பூமியிலிருந்து சூரியனும் மற்ற கிரகங்களும் இருக்கும் தூரத்தை அளந்துவிட்டார்கள். அவை ஒவ்வொன்றின் நிறையையும் அளந்துவிட்டார்கள். பூமியைக் காட்டிலும் மூன்றுலக்ஷம் மடங்கு நிறை கொண்டிருக்கிறது சூரியன். இத்தகைய பிரம்மாண்டமான பொருளைச் சுற்றி ஓடி வருகிறது நாம் வசிக்கும் பூமியும் மற்ற கிரகங்களும். ஒருகாலத்தில் சூரியனின்று தெறித்து வெளிப்பட்டவைகளே பூமியும் மற்ற கிரகங்களும். அப்படியானால் சூரியனும் பூமியும் பொருள் அமைப்பில் ஒரேமாதிரியாகத்தான் இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? இதுவும் சோதனையினால் நிரூபிக்கப்பட்டது.

பூமியில் நாம் காணும் கோடிக்கணக்கான வகை பொருள்களை எல்லாம் தொண்ணூற்றிரண்டு தனிப்பொருள்களி (Elements) லிருந்து பெற்றுவிடலாம். அ, ஆ, எழுத்துக்களை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான வகைகளில் வாக்கியங்களை நாம் எழுதுகிறது

போலவே இத்தனிப்பொருள்களைப் பலவாறாகச் சேர்த்து எல்லா வகை பொருள்களையும் பெற்று விடலாம். இத் தனிப் பொருள்களுக்கு உதாரணங்களாக இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம், பாதரசம், பிராணவாயு, நீரகம்முதலியவற்றைக் கூறலாம். நிறமாலை மானி (Spectrometer) என்ற கருவியை வைத்துக்கொண்டு இத்தனிப் பொருள்களெல்லாம் சூரியனிலும் இருப்பதைக் கண்டார்கள். ஆனால் சூரியன் அளவுகடந்து கொதித்து ஜ்வலித்துக்கொண்டிருப்பதினால் இத் தனிப்பொருள்கள் எல்லாம் ஆவிநிலையில் இருக்கின்றன. இதுபோலவே மற்ற நக்ஷத்திரங்களிலும், கிரகங்களிலும் இத்தனிப் பொருள்கள் இருப்பது தெரியவந்தது. எனவே உலகில் பலவகைப் பொருள்கள் இருக்கின்றன என்று கூறுவதை நிறுத்திக்கொண்டு தொண்ணுற்றிரண்டு வகை தனிப் பொருள்கள்தான் இருக்கின்றன என்ற முதல் முடிவுக்கு நாம் வருவோம்.

தனிப்பொருள் ஒவ்வொன்றையும் துண்டம்செய்து பிரித்துகொண்டேபோனால் பிரிக்க முடியாத நிலையில் ஒருதுகள் கிடைக்குமென்று டெமாகிரிடீஸ் (Democretis) என்ற யவன அறிஞர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டுச் சென்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இக் கருத்தை டால்டன் (Delton) என்ற விஞ்ஞானி, விரிவுபடுத்தி பொருள்களின் இரசாயன சேர்க்கைக்குக் காரணம் காட்டினார். இத்துகளுக்கு அணு என்று பெயரிட்டார். எல்லாக் கலப்புப்பொருள்களின் அணுக்களிலும் சேர்க்கைக்குக்காரணமாயுள்ள தனிப்பொருள்களின் அணுக்கள் அடங்கியிருப்பதை உணர்ந்தார். உதாரணமாக தண்ணீரை எடுத்துக்கொள்ளுவோம். தண்ணீரின் அணுவில் பிராணவாயு அணுவும், நீரகவாயு அணுவும் இருக்கின்றன. நாம் ஆகாரத்துடன் உபயோகிக்கும் உப்பின் அணுவில் சோடியம் (Sodium) என்ற தனிப் பொருளின் அணுவும், குளோரின் (Chlurine) என்ற மற்றொரு தனிப் பொருளின் அணுவும் இருக்கின்றன. டால்டன் கண்ட முடிவுகளை அனைவரும் ஒப்புக்கொண்டு சமீபகாலம் வரை அணுக்களைவிடச் சிறிய துகள்கள் இல்லை என்றே நினைத்துவந்தார்கள்.

தாம்ஸன் (Thomson) என்ற விஞ்ஞானி சென்ற நூற்றாண்டின் இறுதியில் மின்சாரத்தைக் காற்றின்மூலம் செலுத்திச் சோதனைகள் நடத்திவரும்போது ஒரு விநோத சம்பவத்தைக் கண்டார். உலோக கம்பிகளில் மின்சாரம் சுலபமாகச் செல்லுவதுபோலக் காற்றில் சுலபமாக மின்சாரம் செல்லாது. காற்றில் மின்சாரம் பாய்வதற்கு அதன் இறுக்கம் (Pressure) மிகக் குறைவாக இருக்கவேண்டும். இவர் ஒரு குழாயிலுள்ள காற்றின் இறுக்கத்தைக் குறைத்துக்கொண்டே சென்று அதனுள் மின்சாரத்தைச் செலுத்திவந்தார். மின்சாரம் புகுந்து வெளிவரும் இடத்திலிருந்து ரயில்வண்டியில் உள்ள 'ஸர்ச்லைட்'டிலிருந்து வெளிப்படும் கிரணக் கற்றையைப்போல ஒரு கிரணக்கற்றை வெளிப்படுவதைப் பார்த்துத் திகைத்துப்போனார். இக் கிரணக் கற்றையைச் சோதித்துப் பார்த்ததில் அதில் மிகச் சிறிய துகள்கள் இருப்பது தெரியவந்தது. இவை எல்லாம் அணுக்களைக் காட்டிலும் பன்மடங்கு சிறியதாகயிருப்பதை உணர்ந்தார். அணுமீது ஒருவித மின்சாரமும் இல்லாமலிருக்க இப் புதியதுகள் மின்சாரம் ஏற்றிருப்பதை உணர்ந்தார். ஆண் பெண் இவற்றைப் போல மின்சாரத்தில் குறை மின்சாரம் என்றும், மிகை மின்சாரம் என்றும் இரண்டு வகை உண்டு. இத்துகளின்மீது குறை மின்சாரம் (Negative Electricty) இருப்பதைப் பார்த்தார். அத்துகள்களுக்கு மின்னுருக்கள் (Electrons) என்று பெயரிட்டார். இம் மின்னுருக்கள் எல்லாத் தனிப் பொருள்களின் அணுக்களிலும் இருப்பது தெரியவந்தது.

எல்லாத் தனிப் பொருள்களின் அணுக்களின் மின்னுருக்கள் இருக்குமானல் தொண்ணுற்றிரண்டு வகை எவ்வாறு உண்டாயிற்று என்று ஆராயத் தொடங்கினர்கள். மின்னுருக்கள் எல்லாம் குறை மின்சாரம் ஏற்றவை என்று முன்பு பார்த்தோம். ஆனல் அணுவுக்கு ஒருவித மின்சாரமில்லை எனவே அணுக்களின் உள் இம் மின்னுருக்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் குறை மின்சாரத்தை எதிர்த்து நிற்க மிகை மின்சாரம் (Positive Electricity) இருக்கவேண்டுமென்று ஆகிறது. அணுவைப் பிளந்து சோதித்துப் பார்த்ததில் அதனுள்

இத்தகைய மிகைமின்சாரப்பகுதி இருப்பதைக் கண்டார்கள். இம் மிகை மின்சாரப் பகுதி அணுக்கரு என்று சொல்லக்கூடிய அளவில் மிகச் சுருங்கி இருப்பது தெரியவந்தது. தொண்ணூற்றிரண்டு தனிப் பொருள்களின் அணுக்களிலும் மின்னுருக்களுடன் மிகை மின்சாரப் பகுதியும் காணப்பட்டது. ஆனல் ஒவ்வொன்றிலும் உள்ள மின்னுருக்களின் எண்ணிக்கைதான் வேறுபடுகிறது. தனிப் பொருள்களில் மிகவும் லேசானது நீரகம் (Hydrogen) என்னும் வாயு. இதன் அணுவில் ஒரேஒரு மின்னுருதான் இருக்கிறது. தனிப் பொருள்களில் மிகவும் கனமானது யுரோனியம் (Uraniam) என்னும் பொருள். அணுகுண்டு செல்வதற்கு வேண்டப்படுவது இப் பொருள்தான். இதன் அணுவில் தொண்ணூற்றிரண்டு மின்னுருக்கள் இருப்பது தெரிய வந்தது. எனவே எல்லாவித தனிப் பொருள்களின் அணுக்களிலும் மின்னுருக்கள் இருப்பதினல் உலகில் தொண்ணூற்றிரண்டு வகை பொருள்கள்தான் உண்டு என்பதைத் திருத்தி மின்னுரு என்ற ஒரே வகைப் பொருள்தான் உண்டு என்று கூறலாம் அல்லவா? இன்னும் ஒரு விசேஷம். ஒவ்வொரு அணுவிலும் அணுக்கருவைச் சுற்றி மின்னுருக்களெல்லாம், சூரியனைச்சுற்றி கிரகங்கள் ஓடிவருவதுபோல ஓடிவருகின்றன. என்னவிசித்திரம் பாருங்கள்.

மின்னுரு மின்சார சக்தியில் மிகமிகச் சிறியதொரு பகுதி. உலகில் சக்தி பல அம்சங்களில் பரிணமித்தபோதிலும் எல்லாம் ஒரே வகையைச் சேர்ந்தவையே என்றும் விஞ்ஞானிகள் கண்டிருக்கிறார்கள். வெப்பம், ஒளி, காந்தம், மின்சாரம் முதலிய சத்திகள் எல்லாம் ஒரே தன்மையுடையவைதான். ஒன்றை மற்றொன்ருக மாற்றலாம். வெப்பத்தை ஒளியாக மாற்றலாம்; காந்தத்தை மின்சாரமாக மாற்றலாம்; வெப்பத்தை மின்சாரமாக மாற்றலாம்; ஒளியையும் மின்சாரமாக மாற்றலாம். முடிவில் எல்லா சக்திகளும் மின்சாரசக்தியில் அடங்கியவையே.

> "உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி
> யொளிர்ந்திடும் ஆன்மாவே—இங்கு
> கொள்ளற் கரிய பிரமமென்றே மறை
> கூவுதல் கேளீரோ?"

என்று பாரதியார் பாடிய அடிகளைத் திருத்தி,

> "உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி
> யொளிர்ந்திடும் மின்சாரமே—இங்கு
> கொள்ளற்கரிய பிரமமென்றே விஞ்ஞானம்
> கூவுதல் கேளீரோ?"

என்று ஏன் பாடக்கூடாது.

ஆன்மா.

நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ப், பாசத்தடையுடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்போராய்ச், சிற்றறிவுஞ் சிறுதொழிலுஞ் உடையோராய்த் தமக்கு ஒரு தலைவனை உடையராய் இருப்பவரே ஆன்மாக்களாவார்கள்.

அவ்வான்மாக்கள் தூலசரீரம், சூக்கும சரீரம் என இரண்டுவகைச் சரீரம் எடுப்பார்கள்.

நல்வினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப் பயனுகிய இன்பத்தை அநுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே சூக்குமசரீரத்தோடு பூத சரீரமாகிய யாதன சரீரத்தை எடுத்துக் கொண்டு நரகத்திலேபோய் அத் தீவினைப்பயனுகிய துன்பத்தை அநுபவிக்கும். இப்படியன்றி ஒரு தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலே தானே ஒருயோனிவாய்ப்பட்டு மற்றொரு தூலசரீரத்தை எடுப்பதும் உண்டு.

சங்கச் செய்யுளின் பெருமை.

மாணவி சு. கரும்படு சொல்லி அம்மையார்.

எந்நாட்டு மக்களும் தம் முன்னோரின் பெருமையை உணர்ந்துகொள்வதில் ஆர்வம் உடையராய் இருத்தல் இயல்பே. தமிழராகிய நாம் நம் மூதாதையரின் சிறப்பை உணர்வதற்குச் சங்க நூல்கள் சிறந்த கவியாக அமைந்துள்ளன. சங்க நூல்களாவன:- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பன. இவை சங்ககாலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டினும், அதற்கு முன்பும் வாழ்ந்திருந்த நல்லிசைப் புலவர்கள் பாடிய செய்யுட்களின் தொகையாகும்.

சங்கச் செய்யுள், ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனர் அருளிச்செய்த **தொல்காப்பியம்** என்னும் தெள்ளறிவுக் கருவூலத்தை- அரும்பெறல் இலக்கண நூலைத் தமக்கு இலக்கணமாகக் கொண்டவை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பேசப்படும் பொருள் அகம், புறம், என்னும் இரு பகுதி உடையது. மக்கள் எய்துதற்குரிய உறுதிப் பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும், அகம் புறம் என்னும் இருபொருட் பகுதியில் அடங்கும். அகம் என்பது இன்பம். புறம் என்பது அறம், பொருள், வீடு என்னும் முப்பகுதியை உடையது. எனவே, இவ்விருவகைப் பொருள்களையும் பற்றி எழுந்த செய்யுட்கள் உறுதிப் பயன் நான்கையும் கூறுவனவாம்.

சங்கச் செய்யுட்களைப் பயில்வோர் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைப் பற்றி நம் முன்னோர் கொண்டிருந்த கருத்துக்களைச் செவ்விதின் உணரலாம்; அவர்கள் எவ்வாறு தம் வாழ்க்கையை நடத்தினரென்று உணரலாம்; பலதிறப்பட்ட மக்கள் வாழ்க்கையை அறியலாம். இன்றைய நம் வாழ்க்கையினும், நம் முன்னோரின் வாழ்க்கை சிறந்திருந்ததாகத் தோன்றுமேல், அவ்வுயர்நிலையை மீண்டும் அடைதற்குரிய முயற்சிசெய்வோம். தாழ்ந்திருந்ததாகத் தோன்றுமேல் அத்தாழ்வு மீண்டும் அணுகாமல் தடுப்போம்.

நாட்டுப்பற்று

சில நூற்றாண்டுகளாக அடிமைத் தளைப் பட்டுக்கிடந்து அண்மையில் உரிமைபெற்ற நமக்கு நாட்டுப்பற்றே முதற் கடமையாகத் தோன்றுதல் இயல்பு. சங்ககாலத்துத்தமிழரின் நாட்டுப்பற்றினை நோக்குவோம். பூதப்பாண்டியன் என்னும் வேந்தன் கூறிய வஞ்சினத்தில் "என்னுடன் பொருவேம் என்னும் வேந்தர்களை நான் வென்று காணேன் ஆகில், இன்னின்ன தீமைகளைச் செய்தேன் ஆகுக,' என்று கூறியதன்றி, இறுதியில், "மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த தென்புலங்காவலின் ஒரீஇப் பிறர், வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே" (புறம். 71) அதாவது, "பல்லுயிரையுங் காக்கும் அரசர் குலத்தில் பிறந்து, சிறந்த **பாண்டிநாடு** காக்கும் காவலின் நீங்கி, பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவற்கண்ணே இக் குடிப்பிறப்பின் நீங்கி, யான் பிறப்பேனாகுக" என்றது காண்க.

இவ் வேந்தன் கூற்றால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உளதேல், பாண்டிநாட்டிலே

பாண்டியர் குடியிலே பிறக்க அவன் விரும்புவதை அறிகின்றோம். என்னே! அவனது நாட்டின் பற்று.

ஒருவனது நாட்டை இழித்துக்கூறின் அது அவனையே இழித்துக் கூறியதாகும் எனப் பண்டையோர் கருதினர் என்பது "நகுதக்கனரே, நாடுமீக்கூறுநர்" என்ற பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடலால் அறியலாம்.

அரசன்பால் அன்பு

பண்டைத் தமிழரசர் தம் குடிகளைக் கண்ணும் கருத்துமாய்க் காத்துவந்தனர். குறை வேண்டுவோர்க்கும், முறை வேண்டுவோர்க்கும் செவ்வி எளியராய் இருந்தனர். கோல்கோடாது இறை முறை புரிந்தனர் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் சங்க நூல்களில் உள்ளன. இறைமாட்சி, செங்கோன்மை முதலிய திருக்குறள் அதிகாரங்களே சான்று. அதுவன்றி,

"அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைசெய்து
மெலிகோல் செய்தேன் ஆகுக.'

எனப் பூதப்பாண்டியனும்,

"என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன் எம்இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக."

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் கூறினமை காண்க.

"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி" (குழந்தையைப்போற்றும் தாய்போல், நாடு காவலைப்பேணுக) என்று அரசர்க்கு அவ்வப்போது சான்றோரும் அறிவுறுத்தினர்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் எவ்வாறு தன் நாட்டினைக் காவல்செய்தான் என்பதை இடைக் காடனர் கூறுவது காண்க.

தண்புனற் பூசலல்லது நொந்து
களைக வாழி வளவ என்றுநின்
முனைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி" (புறம். 42)

(குளிர்ந்த நீர், கரையை மோதும் புனலது ஆரவார மன்றிப், போர் என்ற பூசலை உன் நாட்டில் வாழ்வோர் கனவிலும் அறியார். குருளைகளைக் காக்கும் புலிபோல நீ காக்கின்றனை என்று புகழ்கின்றார்) அதனால், குடிகளுக்கு,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்றனர் சான்றோர். செங்கோல் கோடிய போதும் குடிகளைக் காக்கத் தவறியபோதும் அரசர் தம் உயிரையும் நீத்தனர் என்பதற்கு ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனே தக்க சான்றாவான். பொற்கைப்பாண்டியன் வரலாறும் செங்கோன்மைக்குத் தக்க சான்றாகும்.

அரசரும் கல்வியும்

தமிழரசர் தாமே சிறந்த கல்வியாளராய் இருந்தனர். அதனாலன்றோ திருக்குறளில் கல்வியைப்பற்றிய அதிகாரங்கள் அரசியலில் அமைந்துள்ளன. பாண்டியரிற் சங்கம் ஏறினர் பலர் என இறையனர் களவியலில் காண்கின்றோம். மூவேந்தர் குடிப்பிறந்தோர் பலர் பாடிய பாட்டுக்கள் தொகைநூல்களிற் காணப்படுகின்றன. பாண்டியரில் பூதப்பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும், சோழரில் கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நல்லுருத்திரன் முதலியோரும், சேரரில் சேரமான் கணைக்காலிரும்பொறை, மாக்கோதை, பாலைபாடிய கடுங்கோ முதலிய நல்லிசைப் புலவராய மன்னருமாக எத்தனைபேர்! "உற்றுழி உதவியும்" என்ற

நெடுஞ்செழியன் பாட்டினால் கல்வியின்மேல் அவன் வைத்திருந்த பெரும் பற்றும், கற்றாரைக் குலம் வயது முதலியவற்றின் குறைவு கருதாது பெருமைப்படுத்தல் அரசர் கடமை என்ற அவன் கருத்தும் உணரலாமன்றோ?

கற்றோர்க்கு அரசர் வழங்கிய வரிசைகள் எத்தனை? சிறப்பாகப் பதிற்றுப் பத்தில், சேரர்களைப் பாடிய புலவர்கள் பெற்ற பரிசுகள் எத்தகையன! நாடு கொடுத்தனர்; பொன் கொடுத்தனர்; தம் புதல்வரையும் புலவர்களுக்குக் குற்றேவல்செய்ய விடுத்தனர். முரசு கட்டில் ஏறிப் படுத்துறங்கிய புலவனைக் கொல்லாமல் தன் கையாற் கவரி வீசிய மன்னனும் உளனன்றோ? பாலைபாடிய உருத்திரங் கண்ணனருக்குக் கரிகால் வளவன் பதினாறாயிரம் பொன் பரிசில் கொடுத்தான் என்று கலிங்கத்துப் பரணியில்,

"தத்து நீர்வரால் குருமி வென்றதும்
தமுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்று சயங்கொண்டார் கூறுதல் காண்க.

கோவூர் கிழார், நரிவெரூஉத்தலையார், கபிலர், பரணர், அரசில் கிழார் முதலிய புலவர்கள் அவ்வப்போது அரசர்களை இடித்துரைத்த நல்லறிவுரைகளை, அரசர்கள் நன்கு மதித்து ஏற்றுத் திருந்தி வாழ்ந்தமை பலரும் அறிந்ததே. அவற்றிற்கு எடுத்துக் காட்டுகள் கூறப்புகின் கட்டுரை மிக விரியும். இக்காலத்து அரசியலாரும் தமிழறிஞரைப் புறக்கணித்தலினின்று நீங்கித் தமிழ்ப் புலவரை மதித்து, அவர் தம் அறிவுரையை ஏற்று ஒழுகின் நாடு பல வகையிலும் நலமுறும்.

குடி இயல்பு

அரசர்கள் அறநெறி ஒழுகும் குடிகளையே தம் செல்வமாகக் கருதினர். குடிகள் ஒழுக்கந் தவறாமல் வாழ்வதற்குப் பசிப்பிணியின்றி இன்புற வாழ்தலே இன்றியமையாதது என அரசர் உணர்ந்திருந்தனர். அதனால் நாட்டின் நீர் நிலைகளை ஒழுங்குபடுத்தி, விளைவை மிகச் செய்து, பசிப்பிணியை அறவே போக்கினர். புலவர்களும், அவ்வப்போது அக்கடமையை மன்னருக்கு நினைவூட்டி வந்தனர்.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய பாட்டில் (புறம். 18) அரசே! மறுமையுலகத்துச் செல்வத்தை நீ விரும்பினும், பகைவரை வென்று மேம்பட விரும்பினும், புகழை நிறுத்த விரும்பினும், நான் சொல்வதை விரும்பிக்கேள். உடம்பிற்கெல்லாம் உணவுகொடுத்தவர்கள் உயிர்கொடுத்தவராவர். உணவை முதலாக உடைத்து அவ்வுணவினாலாகிய உடம்பு என்பனபோன்ற கருத்துக்களைக் கூறி நீர்நிலைகளை அமைக்கும்படி கூறுவது காண்க.

அரசர்கள் நீர்நிலைகளை அமைப்பதில் கருத்துச் செலுத்தி வந்தமைக்குக் கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டியதே தக்க சான்றாகும். அவர்களது நாடும், "களிறு மாய்க்கும் கதிர்க் கழனி" யனவாயின. வேலி ஆயிரம் விளையுட்டாக நிலம் விளைந்தது. குடிமக்கள் மன மகிழ்ச்சியோடு தம் அரசருக்கு இறைப் பொருள் கொடுத்துவந்தனர். விளைவு முதலிய குன்றிய காலையில் அரசர் குடிகளை வருத்தி வரி வாங்குதல் இலர். "காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே" என்ற பிசிராந்தையார் பாடலில் அரசன், அன்புகெட வரி வாங்கினால் நாடு கெடும் என்றும், நெறி அறிந்து இறை கொள்ளின் நாடு கோடிபல நந்தும்" என்றும் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவு உறுத்தல் காணலாம்.

வணிகரும் கொள்ளைலாபம் அடிக்கும் கொடுமதி இல்லாமலும், நிறைய வாங்கிக் குறையக் கொடுக்கும் குற்றமில்லாமலும், "கொள்வதூஉம் மிகைபடா, கொடுப்பதூஉங் குறைபடாது" வாணிபம் செய்தனர். நெடுநுகத்துப் பகல்போல வாழ்ந்தனர்.

தெய்வக் கொள்கை

குடிகளும் அரசரும் இவ்வாறு முறை தவறாமல் வாழ்தற்குச் சிறந்த காரணம் கல்வி அறிவுடைமை முதலியனவாம். இவ்வேதுக்களால் மக்கள் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உண்டு என உணர்ந்தனர். இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்ற உணர்ச்சி இருந்தது. வினைப்பயனில் நம்பிக்கையிருந்தது. வினைப்பயனை ஊட்டும் தெய்வத்தினிடத்தும் நம்பிக்கைகொண்டிருந்தனர்.

சங்க நூல்களில் ஆலமர் செல்வன், நெடுவேள், மாயோன், பலராமன், இந்திரன், சாத்தன் முதலிய கடவுளின் செய்திகள் பல காணப்படுகின்றன. சிவபெருமானையே பிறப்பு இறப்பு இல்லா முழுமுதற் கடவுள் எனப் பேணினர் என்பது தெரிகின்றது. "**பிறவா யாக்கைப் பெரியோன்,**" "**இறைவன்**" என்பனபோன்ற சொற்றொடர்கள் பல காணலாம், "நல்லவும் தீயவுமல்ல" என்ற கபிலர் பாடலினால் புல்லிய இலையை உடைய எருக்கம் பூவாயினும், கடவுள் வேண்டாம் என்னாது என்று உணர்கிறோம், இதனாற்போலும், "நாறும் பூவும் தேவர்க்காம், நாறாப் பூவும் தேவர்க்காம்" என்ற பழமொழியும் எழுந்தது. எருக்கும், பூவும் பேணி அணிபவன் சிவபெருமானே. சிவ வழிபாடே சங்க காலத்தில் சிறந்து இருந்தது.

கடவுளர்க்கும், அவரது படைகளுக்கும் ஊர்திகளுக்கும், கோயில்கள் அமைந்திருந்தன. வைதிகத் தெய்வக் கோயில்களேயன்றிப் புத்த விகாரங்கள், சமணப்பள்ளிகள் பல இருந்தன. நகரங்களில் முருகனுக்குத் திருவிழா எடுத்தலும், அவன் திருவுலா வருதலும், அப்போது ஆடவர், மகளிர் எல்லாம் கண்டு தொழுதலும் உண்டு எனப் பட்டினப் பாலையால் அறிகின்றோம். குன்றவர் முருகனுக்கு வெறியாட்டு எடுப்பதும், பொதுவர் திருமாலுக்குக் குரவையாடுவதும் முதலியனவாகத் திணைநிலை மக்கள் தெய்வத்தை வழிபடும் முறையும் படித்து இன்புறத்தக்கன.

தெய்வங்கள் காப்பாக, மக்களுக்குத் திருமாலின் ஐம்படைத்தாலிகோத்து அணிந்து வந்தனர். சிவபெருமானின் ஊர்தியும், கொடியுமாகிய ஆன்ஏற்றின் வடிவமும், சூலப்படையின் வடிவமும் செய்து குழந்தைகளுக்கு அணிவித்தல் உண்டு என, மருதக் கலியால் அறியலாம்.

இம்மை மறுமைகளின் நிலையாமை உணர்ந்து இறைவன் திருவடிக்கண் வைக்கும் அன்பே அழியாத இன்பமாம் என உணர்ந்து பாடிய பாட்டும் உண்டு என்பதைப் பரிபாடற் செய்யுளால் அறியலாம்.

புலமை, தறுகண்மை முதலியன

சங்க காலத்தில் ஆடவர்களே அன்றிப் பெண்டிரும் நிறைந்த புலமையும், சிறந்த வீரமும் உடையவராய் இருந்தனர். பெண்டிர் புலமைக்கு அவ்வையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, ஆதிமந்தியார், வெள்ளி வீதியார் முதலியோரின் பாடல்களே சான்றாம். மகளிர் வீரத்துக்கு மூதின்முல்லை முதலிய துறைகளில் அமைந்த பாடல்கள் சான்றாகும்.

சுருங்கக் கூறின் அரசியல், உளப் பண்பு, கல்வியறிவு, சமய உணர்ச்சி, தறுகண்மை முதலிய சிறந்த நாகரீக வகைகளில் பண்டைத் தமிழர், இந்நாளினுஞ் சிறந்து வாழ்ந்தனர் என்றே தெரியவருகின்றது. இவ்வறிவை நமக்கு உதவும் சங்க நூல்களை நாம் போற்றிப் பயின்று பயன்பெறுவோமாக.

தமிழ் நூல்களும் கல்வெட்டுக்களும்.

வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார்.

முன்னுரை

கல்வெட்டுக்களின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, பயன், பாதுகாப்பு, நூல்வெளியீடு.

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்."

என்ற தமிழ் முதுமகளின், அமிழ்துறழ் மொழியை உன்னி நோக்குங்கால், மனிதருக்குத் தாம் பிறர்க்குச் செய்த உதவியும், அதனல் தோன்றிய புகழும், உலகில் பன்னெடுங்காலம் நின்று நிலவவேண்டுமென்ற அவா இருத்தல் இயல்பே என்பது புலனுகும். அதனல் தாம் வருந்தித் தேடிய அரும்பெரும் பொருளை ஊருணி நீர்போல் உலகத்தார்க்கு உதவுமாறு அறஞ்செய்யப் புகுந்தோர் பலர் தம் காலத்துக்குப் பின்னர், அவ்வறச்செயல் மறைந்து போகாமைப்பொருட்டும், பிறரும் தம்மைப்போல் அறஞ்செய்து புகழும் புண்ணியமும் ஈட்டற்பொருட்டும், தம் காலத்து அரசரும் பெருமக்களும் அறியப் பொது இடங்களில் பலருங் காணத் தக்கவாறு அவ்வறச் செயல்களைக் கல்லில் பொறித்துவைப்பது வழக்கமாயிருந்தது. அத்தகைய கல்வெட்டுக்கள் பல ஆயிரக்கணக்காக நம் தமிழ்நாட்டிற் காணக்கிடக்கின்றன. அவை பெரும்பாலும் பல்லவர் ஆட்சி தொடங்கியதன் பின்னரேயாம்.

இதனல் பல்லவராட்சிக்குமுன் கல்லில் எழுதும் வழக்கம் இல்லையெனக் கருதல் கூடாது. செந்தமிழ் நூல்களில் மிகப் பழையதாகிய ஒல்காப்பெருமைத் தொல்காப்பியத்துக்காணும்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்
(தொல்-புறத்-60)

என்னும் அடிகளால் புறங்காட்டாது போர் செய்து பட்ட வீரர்க்குக் கல்நடுதலுண்டென்பது பெறப்படும். அந்நூற்பா விதிகொண்டு கல்நடுதலைப்பற்றிப் பாடிய பாட்டுக்கள் பல புறநானூறு, அகநானூறு, திருக்குறள், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய பல நூல்களிலும் காணப்படுகின்றன. அந்நடுகல்லில் வீரனது பெயரும் பெருமையும் எழுதுதலும் உண்டென்பது,

"அணிமயிற் பீலிசூட்டிப் பெயர்பொறித்து
இனி நட்டனரே கல்லும்"

என்ற புறநானூற்றுச்செய்யுள் வரிகளாலும்,

"ஆடவர் பீடும்பெயரும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்"

என்ற அகநானூற்றுச் செய்யுள் வரிகளாலும்,

அவன்பெயர் கல்மிசைப் பொறித்துக்
கவின் பெறக் கல்நாட்டின்று"

என்ற புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவினுலும் பெறப்படும். ஆனல் அறங்களைப் பற்றிக் கல்லில் எழுதிவைக்கும் வழக்கம் அப்பழங்காலத்தில் இல்லை.

இவ்வாறு அறச் செயல்களைக் குறித்துப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் தொடக்கத்தே, அக்காலத்து மன்னனது மெய்க்கீர்த்தியும்,* பின்னர் இன்னார் இன்ன அறத்தின்பொருட்டு இத்தனை பொருள் வைத்தார் என்பன முதலிய செய்திகளும் குறிக்கப்பெறும். இம் மெய்க்கீர்த்திகள் சோழ மன்னர்களில் முதலாம் இராசராசன் காலம்முதல்தான் விரிவாகக் கூறப்பட்டன என்று தோன்றுகிறது.

இக் கல்வெட்டுக்கள் இன்றேல் தமிழ்நாட்டு வென்றி வேந்தர்களுடைய பெருமைகளும், அக்காலத்து நாகரீகமேம்பாடுகளும், புரவலர் புலவர் அரசியல்தலைவர் முதலியோர் வரலாறுகளும், பல தூய தமிழ்ச் சொற்களும், எத்துணையோ அரிய செய்திகளும், வெளியாகாமல் மறைந்தேபோயிருக்கும். தம்காலத்துச் செய்திகளைப் பிற்காலத்தார்க்கு விளக்கும் பேரொளி விளக்கங்களாக இவை இருக்க வேண்டுமென்று கருதியேபோலும், அக்காலத்தார் கல்வெட்டுக்கள் பழுதுறாமல் எண்ணெய் பூசிப் பாதுகாத்துவந்தனர். கல்வெட்டுக்களுக்குச் செப்புத் தகடுகளில் படி எழுதியும் வைத்திருந்தனர். கல்வெட்டுக்களுக்கு எண்ணெய்பூசியுள்ளனரா என்பதைக் கவனிப்பது பண்டுகோயில் மேற்பார்வையாளர்களின் கடமையாயிருந்தது. இக்காலத்தில் இவ் வழக்கம் இல்லாதுபோனதால் எத்தனையோ கல்வெட்டுக்கள் பொறிந்துபோய்ப் பழுதுற்றன. அந்தோ! அவற்றுள் எத்தனை அரிய செய்திகள் மறைபட்டனவோ?

தமிழ் வேந்தர்களது ஆட்சிக் கதிர் மறைந்து தமிழர்கள் உறங்கிக்கிடந்தகாலையில் இக் கல்வெட்டுக்களின் அருமை பெருமைகளை மாந்தர் அறியாதிருந்தனர். அங்கிலையில் தமிழ்நாட்டின் நற்காலமாக டாக்டர் உல்ஷ் (Dr. Hultzch) என்ற துரைமகனர் இந்தியாவுக்கு வந்து ஈண்டுள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டு அவற்றின் அருமையை உணர்ந்து அரசப் பிரதிநிதியிடம் கூறி அக் கல்வெட்டுக்களைப் படியெடுத்து ஆராய்ச்சி செய்வதற்கென ஒரு துறை (A department) ஏற்படுத்தியதோடு தாமும் உடனிருந்து ஆராய்ந்துள்ளார். திருவாளர்களான து. அ. கோபிநாத ராயர், V. வெங்கையா என்பவர்களையும் இத்துறையில் பழக்கி வைத்துச் சென்றார். இப் பெரியோர்களாலும் பின் வந்தோர்களாலும் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுப் புத்தக வடிவமாய் வெளிவந்துள்ளன. இதுகாறும் ஒன்பது தொகுதிகள் (Volumes)வெளிவந்துள்ளன. பத்தாம்தொகுதியும் விரைவில் வெளிவரும். இவற்றுள்ளும் முதல் மூன்று தொகுதிகளே ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. பெரும் பொருட்செலவை முன்னிட்டு ஏனையவைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை அரசாங்கத்தார் நிறுத்திவிட்டனர். இவற்றுடன் ஆண்டுதோறும் அறிக்கை ஒன்றையும், திங்கள் தோறும் Epigraphica Indica என்னும் அரசாங்கப் பத்திரிகை ஒன்றையும், வெளியிட்டுவருகின்றனர். எடுத்த கல்வெட்டுக்களிலும் சற்றேறக்குறைய மூப்பதினாயிரம் கல்வெட்டுக்கள் இன்னும் வெளியிடப்பெறவில்லை. இவையனைத்தும் வெளிவருமாயின் பல அரிய செய்திகள் வெளியாகும் என்பது திண்ணம்.

நிற்க, இக் கல்வெட்டுக்கள் தமிழ்நூற் பயிற்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்வோம்.

இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஒரு தலைவனுடைய மெய்ப்புகழை அளவடிமுதலிய உற்றால் கூறுதல் முதலியவை அமைந்திருப்பது. சீர் நான்காகி யிரண்டடித்தொடையாய், வேந்தன் மெய்ப்புகழெல்லாஞ் சொல்லியும், அந்தத்தவன் வரலாறு சொல்லியும், அவளுடன் வாழ்கெனச் சொல்லியுமற்றவ, னியற்பெயர்ப்பின்னர்ச் சிறக்கயாண்டெனத், திறப்படவுரைப்பது சீர்மெய்க்கீர்த்தி (பன்னிருபடலம் 311); தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீரடியால் எழிலரசர் செய்தியிசைப்பர் (வச்சணந்தி மாலை. செய்யுளியல் 34)இதனைச் சிலாசாசனங்களில் பார்க்கக் காணலாம் என்று டாக்டர் ஐயர் அவர்கள், நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரைக் குறிப்பில் குறித்துள்ளனர்.

இரும்புதல் என்னும் வைப்புத்தலம்.

சைவ சமய குரவராகிய நால்வராலும் அல்லது அவர்தனில் ஒவ்வொருவராலும் தனிப் பதிகம் (பத்துப் பாடல்களையுடையது) பெற்றுள்ள சிவதலங்கள் பாடல்பெற்ற தலங்கள் என்றும், அவ்வாறு தனிப் பதிகமின்றிப் பொதுப் பதிகங்களிலேனும் வேறொரு தலப் பதிகங்களினிடையிலேனும் வைத்துக் கூறியிருப்பவை வைப்புத் தலங்கள் என்றும் கூறப்படும்.

இத்தகைய வைப்புத் தலங்களிற் பல இக்காலத்தில் பண்டைப் பெயர் சிதைந்தும் அவை யாண்டுள என அறிதற்கும் இயலாதிருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுக்கள் உதவிசெய்கின்றன.

திருநாவுக்கரசரது திருவீழிமிழலைக் குரிய திருத்தாண்டகத்தால் இரும்புதல் என்னும் ஒரு வைப்புத்தலம் உளது என்று பெறப்படுகின்றது. அது யாண்டையதென ஆராய்வுழி தஞ்சாவூர்ச் சில்லா பாபநாசம் தாலூகாவில், பாபநாசத்திலிருந்து சாலியமங்கலத்திற்குப் போகும் பெருவழியில் (Road) உள்ள இரும்புதலை என்ற ஊரே அத்தலம் என்பதை ஒரு கல்வெட்டுப் புலப்படுத்துகின்றது. இரும்புதல் என்ற ஊரே இக்காலம் ஐகாரச் சாரியை பெற்று இரும்புதலை என்று மக்களால் வழங்கப்படுகிறது. இவ்வூரில் இன்றும் ஒரு பழைய சிவன்கோயில் நிலைபெறுடையதாய் இருக்கின்றது. அக் கல்வெட்டைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி* வளர இருநி[லமடந்]தையும், பொற் சயப்பா[வை]யுஞ், சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவியராகி யின்பு[றநெ]டுதியலூழியுள் இடைதுறைநாடுந் தொடர்வன வேலிப் படர்வன வாசியுஞ் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத் தரைசர்தமுடியும் ஆங்கவர் தேவிய ரோங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமுந் தெண்டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கேரளர் மு[றைமையி]ற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ்முடியுஞ் செங்கதிர் மாலை[யு]ஞ் சங்கதிர் வேலைத் தொல் பெருங் காவல் பல் பழந்தீவும் செருவிற்[சி]னவியிருப்பத் தொருகாலரைசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திம[த்தீவர]ண் கருதியிருத்திய செம்பொன் திருத்தகு[முடி]யும் பயங்கொடு பழி[மிக]முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்[க]ன் அறப்பெரும் புகழொடு பீடியல் இரட்டப்பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெரு மலைகளும் மாப்பெருந்தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கு யாண்டு பத்தாவது அதிகாரிகள் காஞ்சிவாயில் உடையார் உதைய திவாகரன் தில்லை யாளியாரான ராஜராஜ மூவேந்த வேளார் எழுந்தருளுவித்த கிரதார்ஜு—ன தேவர்[க்]குத் திருவமுது உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்குஞ் சிறுதனத்துப் பணிமக்கள் உடையார் ஸ்ரீ இராஜராஜதேவர் எழுந்தருளுவித்த மஹாமேரு விடங்கர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருவமுது உள்ளிட்டு வேண்டும் நி[வ]ந்தங்களுக்கும் உடையார் ராஜேந்திரதேவர்க்கு யாண்டு பத்தாவதுவரை இவர்கள் வைத்தகாசில் ஸ்ரீ ராஜராஜீஸ்வரத்தினிதெழுந்தருளி இருந்த பரமசுவாமிககு மூலப்பிரத்தியனுகிய சண்டேஸ்வர தேவர் பக்கல் பொலிவூட்டுக்குக்கொண்டஊருங்கல்லில் வெட்டின நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து பிர்மதேயம் இரும்புதலாகிய மனுகுலச் சூளாமணி சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார், அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையார் உதையதிவாகரன் தில்லையாளியாரா[ன]ராஜராஜமூவேந்த வேளார் எழுந்தருளுவித்த கிரதார்ஜு—ன தேவர்க்குத் திருவமுது உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு வைத்தக[ாசில்கொ]ண்டகாசு தொண்ணூற்று நாலும், உடையா[ர்]ஸ்ரீ ர[ாஜராஜ] தேவர் எழு]ந்தருளுவித்த மஹாமேருவிடங்கர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருவது உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்குச் சிறுதனத்துப் பணிமக்கள் வைத்த காசில் கொண்டகாசு ஐஞ்ஞூற்றுறும், ஆக யாண்டு பத்தாவது பசானமுதல் கொண்டகாசு அறுநூறினல் காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டன் பலிசைநெல்லு முக்குறுணி

யாக சந்திராதித்தவல் ஆட்டாண்டு தோறும் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் தஞ்சாவூர் உடையார் பெரும் பண்டாரத்தே அளக்கக்கடவ நெல்லு நூற்றைம்பதின் கலம்.

சில குறிப்புகள்

இக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள கோப்பரகேசரி வன்மரான இராசேந்திர சோழ தேவன், தஞ்சைப் பெரியகோயிலை எடுப்பித்த முதலாம் இராசராச சோழனது மகன் ஆவன். கி. பி. 1014—1042 வரையில் சோழ மண்டலத்தைச் சிறப்புடன் ஆண்ட பெருந்தகையாளன். இவனைக் கங்கைகொண்ட சோழனென்றும் வழங்குவர். இவ் வேந்தன் அரியணையேறிய பத்தாம் ஆண்டில் இக் கல்வெட்டுப் பொறிக்கப்பெற்றதாகும். இக் கல்வெட்டினால் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து இரும்புதலாகிய மனுகுலச் சூளாமணி சதுர்ப்பேதிமங்கலத்துச் சபையார், இராசராசேச்சரத்து இனிது எழுந்தளியிருந்த பரமசுவாமிக்கு மூலப்பிரத்யனாகிய (பழைய அடியாராகிய) சண்டேசுவரர் பக்கல் அறுநூறு காசை வட்டிக்குக் கொண்டுள்ள செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

நித்தவிநோதவளநாடு

நித்தவிநோதவளநாடு என்பது தஞ்சாவூர் சில்லாவில் அரிசிலாற்றின் தெற்குப் பகுதியும், மன்னார்குடி தாலூகாவின் வடக்குப்பகுதியும், கும்பகோணத்தினின்று நீடாமங்கலத்திற்குப் போகும் பெருவழியின் மேற்குப் பகுதியும், தஞ்சாவூர்த் தாலூகாவின் கிழ்ப் பகுதியும் அடங்கிய நிலப்பரப்பாகும். ஆவூர்க் கூற்றம், கிழார்க் கூற்றம், பாம்புணிக் கூற்றம் முதலியன இவ்வளநாட்டின் உட்பகுதியாகவுள்ள சில பகுதிகளாம்.

ஆவூர்க்கூற்றம்

தஞ்சாவூர்ச் சில்லாவில் பாபநாசம் தாலூகாவில் தேவாரம் பெற்ற ஆவூரைத் தலைநகராகக் கொண்டுள்ள ஒருசிறு நாடாகும். அமுத்ரவல்லி, முன்னியூர், விளத்தூர், செம்பங்குடி, பட்டம் என்னும் ஊர்கள் இக் கூற்றத்தில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

*திருவிசயமங்கை

சோழநாட்டு, தேவாரம்பெற்ற தலங்களுள் திருவிசயமங்கையும் ஒன்றாகும். இத்தலம் திருப்புறம்பயத்திற்கு மேற்கிலும், திருவைகாவூருக்குக் கிழக்கிலும், மண்ணியாற்றின் வடகரையிலுமுள்ள விசயமங்கை என்னும் ஊரிலுள்ள சிவாலயமா? அல்லது திருவைகாவூருக்கு எதிரே கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள கோவந்தபுத்தூரிலுள்ள சிவாலயமா? என்பது பலரின் ஐயப்பாடாக உள்ளது. இதனை நன்கு தெளிவுபெற விளக்குவேன். கோவந்தபுத்தூர் என்பது, புத்தூர் என்னும் ஒரு பெயர், காரணம்பற்றிய திருவரிசிற்கரைப்புத்தூர். 'கடுவாய்க்கரை' திருப்புத்தூர், என்பனபோன்று காரணப்பெயராக வழங்குவதாயிற்று. சிவபெருமானை இலிங்கவடிவத்தில் அன்புபூண்டு, ஒரு பசு நாள்தோறும், தனது மடியிலுள்ள பாலைச் சொரிந்து, பேறெய்தியதால் அச் சிறப்புத்தோன்ற, இத்திருப்பதிக்குக் கோவந்தபுத்தூர் என்னும் பெயர் வந்தது. இஃது இன்றும் அவ்வாலயத்தில் உருவக் காட்சியில் வைத்துப் போற்றப்படுகின்றது. இதனை,

* இற்றைக்குப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர், ஆராய்ச்சித்துறையில் முதன்முதல் யான் எழுதிய கட்டுரை இதுவேயாகும்.

"நீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புடை புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே"

என்னும் திருஞானசம்பந்த அடிகள் திருப் பாடலால் அறியத்தக்கது. மற்றும் விசய மங்கை என்பது மேலேகூறியவாறு மண்ணி யாற்றின் கரையிலுள்ள விசயமங்கை என்னும் ஊரில் உள்ளதா அல்லது கோவந்தபுத்தூரில் உள்ளதா? என்னும் ஐப்பாட்டினை,

"கொள்ளி டக்கரை கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
யுள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளி டத்தலை யற்ற(து) அயனுக்கே."

என்னும் திருநாவுக்கரசரது திருப்பாடலால் கொள்ளிடக்கரையிலுள்ள கோவந்தபுத்தூரில் திருவிசயமங்கை உள்ளது என்பதும், அங்கே சிவபெருமான் கோவினுக்கு அருள் சுரந்ததும் தெற்றென விளக்கி ஐப்பாட்டினை நீக்கு கின்றது.

சைவசமய குரவர்கள் ஓதிய திருமுறை களில் சிற்சில பதிகங்களில் திருப்பதியின் பெயர் ஒன்றாகவும், திருக்கோயிலின் பெயர் மற்றொன்றாகவும் உள்ளன. இஃது திருக் கடந்தையுள் தூங்கானைமாடக் கோயிலும் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரமும், கருவூரில் திரு ஆனிலையும் உள்ளன என்பன வற்றால் அறியக்கிடக்கின்றது. இம்முறையின் படியே கோவந்தபுத்தூரில் திருவிசயமங்கை உள்ளது என்பதையும் உய்த்துணர்க.

சேக்கிழார் அருளிச்செய்த திருஞானசம் பந்த அடிகள் புராணத்தில், அடிகள் யாத் திரையாகவந்த வரலாறு கூறுமிடத்துக் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருப் பழுவூரிலிருந்து திருவிசையமங்கைவந்து கோத னம் வழிப்பட்ட குறிப்புள்ள திருப்பதிகம் ஓதி, பின்னர்த் திருவைகாவையும் திருப்புறம்பயத் தையும் அடைந்ததாக 238 முதல் 240 வரை உள்ள பாட்டுக்களால் விளங்குகிறது. இதுதான் நேரான வழியாக உள்ளது. மண்ணியாற்றங் கரைக் கோயிலாயின் மேற்கில் உள்ள திருவைகாவூருக்கு முதலில் வந்துதான், விசய மங்கைக்கு வர நேரும். இதனல் கொள்ளிடத் தின் வடகரையில் உள்ளதே விசயமங்கை என்பது விளங்குகிறது.

முற்காலத்து, நம்பிரானுக்கு இஞ்ஞான்று ஊர்தோறும் வடமொழிப் பெயர்களைப் புனைந்து வழங்குவதுபோலன்றி, நம் சமய குரவர்கள் எந்தஊரில் வழிபாடு ஆற்றுகிரூர் களோ அவ்வூரைச்சுட்டி நம்பிரானது திருப் பெயரைக் குறித்துள்ளார்கள். மழபாடியுள் அண்ணலே! புறம்பயம் அமர்ந்தோய்! ஒற்றியூர் உடைய கோவே! என்பனவாக வழங்கின ரன்றி, ஓரிடத்தும் அச்சிட்ட தேவாரப் பதிகங் களின் ஈற்றில் வரையப்பட்டுள்ள பெயர்கள் அப்பதிகங்களில் காணப்படவே இல்லை என்பது திருமுறை பயிலுவார்க்கு நன்கு விளங்குவதாகும்.

இந்த முறையைப் பின்பற்றியே நம் சமய குரவர்கள் காலத்திற்குப் பிற்பட்டு, அர சர்களால் ஒவ்வோர் கோயில்களிலும் செதுக் கப்பட்ட கல்வெட்டுக்களில் நம்பிரானது பெயரைக் குறிக்குமிடத்துத் திருவலஞ்சுழி யுடைய மகாதேவர்க்கு, திருவையாறுடைய மகாதேவர்க்கு என்று அவ்வூரினைக் குறித்து நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள் ளார்கள்.

இம்முறையே திருவிசயமங்கை என்னும் கோயிற் பெயரால் நம்பிரானது திருப்பெயர் குறிக்கப்பட்டிருத்தலைக் கோவந்தபுத்தூர் கல் வெட்டுக்களில் இன்றும் யாவரும் காணலாம். கோவந்தபுத்தூர் ஆலயக் கல்வெட்டுக்களில் விசயமங்கையுடைய மகாதேவரென்றே குறிக் கப்பட்டிருக்கின்றது. இதனை யாரும் மறுப் பதற்கில்லை.

மேற்காட்டிப் போந்தவாறு, திருத் தொண்டர் புராணத்தாலும், கல்வெட்டுக் களாலும் ஆராயுமிடத்துத் திருவிசயமங்கை என்னும் பதிகம் பெற்றது கோவந்தபுத்தூரில் உள்ள சிவாலயமே என்பது வெள்ளிடை மலை போல் விளங்குவதாகும். மண்ணியாற்றங் கரையிலுள்ள சிவாலயத்தில் யாதொரு கல் வெட்டுக்களுமில்லை.

இவ்வாராய்ச்சிக்குப் பயன்படும் கோவந்தபுத்தூர் சிவாலயக் கல்வெட்டுக்கள்

I

இடம்:—கருப்ப இல்லின் மேல்புறச்சுவர்.

வரி:—1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபந்மற்கு யாண்டு ൫ഉ-வது வடகரை பிர்ம தேயம் பெ

2. ரிய ஸ்ரீவானவன் மாதேவிச் சதுர் வேதிமங்கலத்து ஸ்ரீவிஜய மங்கலதே

3. வற்குஇ ஸ்ரீவிமானம் கல்லால் எழுந் தருளுவிச்சேன். ஸ்ரீ உத்தம சோழ மாதேவர் பெரு

4. ந்திறத்து குவளாலம் உடையான் அம்பலவன் பழுவூர் நக்கனை விக் கிரமசோழ

5. ஸ்ரீ மாராயனேன். இ ஸ்ரீ விஜய மங்கலத்து மஹாதேவர்க்கு.

II

இடம்:—விமானத்தின் தென்புறம்.

வரி:—1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவன சக்ரவர்த்தி கள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு ൰ம்ഉ ஆவது

2. கன்னி ஞாயிற்று பூர்வபட்சத்து சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள்

3. வடகரை விக்கிரம சோழவளநாட்டு இன்னம்பர் நாட்டு உடையார் திரு விசயமங்கையுடைய நாய

4. னர் திருமடை வளாகத்து திருத் தொண்டத் தொகையன் திருமடத்து ஸ்தானபதி சுப்பிரமணிய சிவ னேன் இக்

5. நாயனர்க்கு திருப்பள்ளித் தாமம் ஆக்குவார்க்கு ஜீவனத்துக்கு உட லாக திருநந்தவனபுறமாகக்கொண்டு விட்ட நிலமாவது.

[விசயமங்கலம் எனினும், விசயமங்கை எனினும் ஒக்கும். ஈண்டுக் காட்டப்பெற்ற கல்வெட்டுக்களே இதனை வலியுறுத்தும்.]

செருத்துணைநாயனர் திருப்பதி

சைவமும் தமிழும் தழைக்கத் தோன்றிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் செருத் துணை நாயனர் ஒருவர். இவர் சோழநாட்டில் தஞ்சாவூரில் வேளாளர் குலத்துத் தோன்றித் திருவாரூர் எய்திப் பல திருத்தொண்டுகள் செய்துவரு நாட்களில் ஒருநாள் பல்லவ வேந்த ராகிய கழற்சிங்க நாயனர் தம் அரச மாதேவி யோடு திருவாரூருக்குச் சிவதரிசனத்திற்கு வந்திருந்தபோது திருப்பூமண்டபத்துக் கிடந்த தொரு பூவை எடுத்து மோந்த குற்றத்திற்காக அவ் அரசியாரது மூக்கை அஞ்சாது அரிந்த வீரத் தொண்டராவர். அத்தகைய பெரியார் பிறக்கத் தவஞ்செய்த திருப்பதி யாதென ஆராய்வோம்.

இவரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி அடிகள் '**தஞ்சை மன்னவனும் செருத்துணை**' என்று அருளிச்செய்துள்ளார். இவரது திருப்பதியை நம்பியாண்டார் நம்பிகள் "**செழுநீர் மருகல் நன்னாட்டமர் தஞ்சை**" எனவும், சேக்கிழாரடிகள் "**பொன்னி நீர்நாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர்**" என் றும் கூறியருளினர். எனவே மருகல் நாட்டுத் தஞ்சாவூரே இவர் பிறந்த தலமாகும். அத் தஞ்சாவூர் யாது? தஞ்சாவூர்ச் சில்லாவில் நன்னிலம் தாலுகாவில் திருமருகல் என்னும் தேவாரம் பெற்ற தலம் ஒன்றுள்ளது. அதனைத் தலைமையாகக்கொண்ட நாடே நம்பிகள் காலத்தும் சேக்கிழார் காலத்தும் மருகல்நாடென வழங்கிவந்தது. இத் திருமருக லுக்கு இரண்டு கல் தூரத்தில் புத்தாற்றின் தென்கரையில் தஞ்சாவூர் என்று ஒரு ஊர் இருக்கின்றது. அதுவே மருகல் நாட்டுத்

தஞ்சாவூர் ஆகும். எனவே அதுவே செருத்துணைநாயனர் பிறந்த பதியுமாகும். ஈண்டு ஓர் பெரிய பழைய சிவன்கோயில் உண்டு. செருத்துணையாரின் தனிப் படிவமும் ஆங்கு இருக்கின்றது. இம்மருகல் நாட்டுத் தஞ்சாவூர் தென்னிந்திய கல்வெட்டுக்களின் இரண்டாம் தொகுதி எழுபதாம் எண்ணுள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டில் "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. இம் மருகல் நாட்டில் அடங்கியனவாகக் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறும் பூதனூர், வைப்பூர் என்ற ஊர்கள் இத்தஞ்சைக்கு அண்மையில் இன்றும் நிலை பெற்றுவருகின்றன.

இஃது இங்ஙனமாக, சென்னைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரப் பேராசிரியர் உயர்திரு K. A. நீலகண்ட சாஸ்திரியாரவர்கள் தாம் அருமையாக எழுதிய The History of the Pandayan Kingdoms என்ற நூலில் தஞ்சாவூர் சில்லா தஞ்சாவூர்த் தாலூகாவின் தலைநகரும், இராசராசேச்சரத்தைத் தன்னகத்தே கொண்டதுமாகிய தஞ்சாவூரே செருத்துணைநாயனர் பதியென்று குறிப்பிட்டுள்ளார்கள். அது பொருந்துவது அன்று. அவர் கூறிய தஞ்சாவூர் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூரேயாகும். இச்செய்தியைத் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி இரண்டு, எண் ஒன்றுள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டு அறிவிக்கின்றது. எனவே மேற் கூறிய மருகல்நாட்டுத் தஞ்சாவூரே செருத்துணையார் பதியாதல் வலியுறுதல் காண்க.

ஆதி உலாவை வெளிப்படுத்திய சாத்தனர் எழுந்தருளியிருக்கும் பிடவூர்.

தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் தெய்வங்களுள் சாத்தனரும் ஒருவர். மகா சாத்திரன் என்ற பெயரே மாசாத்தன் என்று திரிந்தது என்பதும், இவர் பாசண்டமாகிய தொண்ணூற்றறுவகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவைகளிற் பயின்றவராதலால் பாசண்டச் சாத்தர் எனப்படுவர் என்பதும், சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரது கருத்தென்று புலப்படுகிறது. (சிலப்—கனத்—14—15)

சாத்தனருக்குக் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இக்காலத்தில் ஐயன் கோயில், ஐயனர்கோயில் என்ற பெயருடன் பல கோயில்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள் பிடவூர் என்பது ஒன்ருகும்.

இப் பிடவூர்ச் சாத்தனரைப்பற்றிய ஒரு வரலாறு, திருத்தொண்டர் புராணத்து வெள்ளானைச் சருக்கத்தால் அறியலாகும். அஃதாவது சேரமான்பெருமாணயனர் திருக்கயிலாயத்தில் சிவ்பெருமான் திருமுன்பு விண்ணப்பித்த ஆதி உலாவை மாசாத்தனர் கேட்டறிந்து வந்து திருப்பிடவூரில் வெளிப்படுத்தினர் என்பது. இதனை,

> சேரர் காவலர் விண்ணப்பம் செய்த
> அத்திருஉலாப் புறம்அன்று
> சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா
> சாத்தனர் தரித்திந்தப்
> பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில்
> வெளிப்படப் பகர்ந்தெங்கும்
> நார வேலைசூழ் உலகினில் விளங்கிட
> நாட்டினர் நலத்தாரே.

என்று பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கத்து 52-ஆம் திருப்பாட்டுச் செப்பும். அத்திருப்பாட்டில் குறிப்பிடப்பெற்ற பிடவூர் யாண்டுள்ளது என்னில் திருச்சிராப்பள்ளியிலிருந்து பிரம்பலூருக்குப் போகும் பெருவழியில் செருகனூருக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கின்றது.

பண்டைப் பெருமக்கள் தம் வரலாற்றுக் கருவூலமாய் அமைத்துள்ள புறநானூற்றின் 395-ம் பாட்டில்,

> "செல்லா நல்லிசை உறந்தைக் குணது
> நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
> அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும.
> (வரி—19—21)

என்பதில் பாட்டுடைத் தலைவன் பெயர் சாத்தனர் என்று குறிக்கப்பெற்றுள்ளது. அதன் கீழ்க் குறிப்பிலும் சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்று அவன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அப் பாட்டுடைத் தலைவனுக்கு அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மகாசாத்தனர் பெயரே இட்டிருக்கலாமென்று காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய. டாக்டர். ஐயர் அவர்கள் அப்பாட்டின்கீழ் குறிப்பெழுதியுள்ளார்கள். தம் ஊரில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள தெய்வத்தினது பெயரைத் தம் மக்களுக்கு இடும் வழக்கம் பண்டும் இன்றும் தமிழ் மக்களிடத்தில் காணப்படுவதொன்றேயாகும்.

இவ்வூர் இப்போது திருப்பட்டூர் என்று வழங்கப்படுகிறது. ஈண்டுள்ள ஐயனர்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.



திருப்பிடவூர் மாசாத்தனர் திருக்கோயிலின் தோற்றம்.

ஐயனர் கோயிலில் இஃதொன்றே கல்வெட்டுக்கள் அமையப்பெற்றதெனத் தோன்றுகின்றது. இக்கோயில் கல்வெட்டுக்களுள் இவ்வூர், பிடவூர் நாட்டுப் பிடவூர் என்று காணப்படுகிறது.

மேற்கூறிய புறநானூற்றுச் செய்யுளில், உறந்தைக்குணது பிடவூர் என்று குறிப்பிட்டிருப்பதாலும், உறையூருக்குக் கிழக்கே வேறு பிடவூர் காணப்படாமையாலும், ஈண்டுக் கூறிய பிடவூரிலே ஐயனர்கோயில் சிறப்பாக இன்றும் விளங்குவதாலும், இதுவே மேற் கூறிய புறநானூற்றுச் செய்யுளில் கூறப்பட்டதும், பெரியபுராணத்தில் கூறியாங்கு மாசாத்தனர் திருவுலாப் புறத்தை வெளியிடப் பகர்ந்ததும் ஆகிய பிடவூராகும் என்பதுதேற்றமாம்.

வெள்ளியங்கயிலையில் சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்த திருவுலாப்புறத்தை, இந்தப்பாரில் வெளியிட்டருளிய, திருப்பிடவூர் மாசாத்தனர். இவரது இடதுகையில் இருப்பது திருவுலாப்புறம் அல்லது ஆதி உலா. இவ்வூர் முதியோர் இந்த ஐயனரை அரங்கேற்றின ஐயனர் என்று அழைக்கின்றனர்.

இவ்வூர் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரியராகிய வேளாண் பெருமக்கள் வாழிடமாயும், தேவார வைப்புத் தலங்களில் ஒன்றாகியும், பொருளாளன் பிடவூரான் என்று தேவாரத்திலும் பாராட்டப்பெற்ற தலைவன் ஒருவன் வாழ்ந்ததாகவும் விளங்கும் சிறப்பமைந்ததாகும்.

இச்சாத்தனூர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களுள் ஒன்று பின்வருமாறு:—

இடம்:—திருக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் தென்புறம்.

வரி:—1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதுஞ் செயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க அருமறை விதியி னெறியணைத்துந் தழை

2. ப்பவரு முறையுரிமையில் மணிமுடித் திங்கள் வெண்குடைத் திசை களிறெட்டுந் தங்கு தனிக் கூடந்தானென விளங்கக் கருங்கலிப் பட்டியைச் செங்கோல்

3. துரப்பப் பொருங்கதிராழி புலி வளைத்துடன்வர வில்லவ ரிரட்டர் மீனவர் கங்கணர் பல்லவர் நுதலியர் பார்த்தி[பர்]பணிய எண்ணருங்கற்ப மண்ணகம்புரிந்து செம்பொன்வீர

4, ஸிம்ஹாதனத்து புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு எ-வது ருஷப நாயற்று

5. பூர்வபக்ஷத்துத் தசமியும் வியாழக் கிழமையும் பெற்ற அஸ்வதிநாள் புவனமுழுதுடையவளநாட்டுத்திருப் பிடவூர்நாட்டுத் தேவதான பிர்ம தேயந் திருப்பிடவூர் உடையார் திருமண்

6. டபமுடையார்க்கும் பிள்ளையார் திருவேப்பந்தெற்றி உடையாற்கும் ஆதி சண்டீசனென உடையார் திருமண்டப முடையார் கோயிலிற் கூத்தாடுந் தேவற்குத் திருவுடை யாடை சாத்தி அருளப் பொன்போ

7. தாமையிற் பொன்கொள்ளவேண்டுங் காசு இருனூறு. இக்காசு இருனூறுக்கும் இவ்வூர்ப் பிடாகை பெருங்கோனூரிருக்கும் வெள்ளாளன் போகழி உடையான் மூதிய மணவாளனாதித்த தேவனான கொலோத்துங்

8. க சோழ மூவேந்த வேளானுக்கு இவ்வூர் பிராமண பூஷணபோஜனமாக இவ்வூரிற் சத்திரத்திலேய் நித்தற் கலம் பத்துண்ண மடப்புறமாக விற்றுக்குடுத்த நிலம் இவ்வூர் செங்கலி குளமும் பாண்டன் குளமுந்

9. நீர் கோவை உழப்பட இக்குள மிரண்டும் மீக்குளங்களின் கீழ் விளை நில மறு வேலியும் மீக்குளத்துக்குக்குடியிருப்புப் பெருமக் குறிச்சி நத்தத்தில் வடக்கடையச் செம் பாதிக்கும் இத்தேவர்கள் கோயிலுக்கு இன்

10. னிலத்துக்கு இறுத்துவருமிறைக்குச் செலவாக இப் போகழி யுடையாங் கழகிய மணவாளந் நாதித்த தேவநாக கொலோத்துங்கசோழ மூவேந்த வேளான்பக்கல் இத் திருமண்டப முடையார் கோயிலிற்கூ

11. த்தாடுந் தேவற்குத் திருவுடையாடை சார்த்தியருளக் கொண்ட காசு இருனூறுங் கொண்டு முன் பேசப்பட்ட நீர்கோவை உட்பட இக்குள மிரண்டும் விளைநிலம் அறு வேலிக்கும் நத்தத்தி

12. ல் வடக்கடையச் செம்பாதிக்கும் முன்பு இறுத்துவருகிற இறைக்குச் செலவாகச் சந்திராதித்தவல் இக் காசு இரு நூறுமேய் ஸ்ரீபண்டாரத் துக்கு இறையாவதாகவும் இன் னிலங்களுக்கு இறை என்று

13. இத் தேவர்கள் கோயில்களில் தேவர் கன்மிகளும் ஸ்ரீ மாஹேஸ்வரகண் காணி செய்வார்களும் சொல்லக் கடவர்களல்லாராகவும் இப்படி ஸம் மதித்து இக்காசு இரு நூற்றுக்கும் இறை இழிச்

14 சிக் குடுத்தேன். இக் கோயில்களில் ஆதி சண்டீயசரேன் அருளால் விக் கோயில்களுக்கு இவ்வூர் மத்தியஸ் தன் திருவன்நியுடையானை மூவா யிரத்துமூன்னூற்று

15. வரேன். இவை எங்நெழுத்து.

எனவே இக் கல்வெட்டு ஆராய்ச்சியில் தமிழ் நூல்களில் விளங்காது கிடக்கும் இவை போன்ற பல செய்திகள் ஐயமற வெளிப்படும் என்பது திண்ணம். ஆகையால் தமிழின் ஆக்கங் கருதும் அன்பர்கள் பலரும் கல்வெட் டாராய்ச்சியில் முனைந்து பயிலுதல் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பேருதவி செய்ய ஏதுவாகும்.

திருப்பிடவூர் மாசாத்தனுர் பெரியநாச்சியார்களுடன்.

தமிழிசை

சங்கீதபூஷணம்,
ரா. சண்முகசுந்தரம் பிள்ளை.

இசை எல்லா உயிர்களையும் பிணிப்பது. அலைந்த மனத்தைக் களிப்பில் ஆழ்த்துவது. இசைக்கு உருகாதவன் ஒரு கொலைகாரனென்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். சொல்லொடு சொல்லுக்கு இணைப்பை உண்டாக்கும் இசை மனிதனோடு மனிதனைப் பிணைப்பது வியப்பல்லவே. புலியின் கொடுமையைப்—பாம்பின் சீற்றத்தை—யானையின் செருக்கை மாற்றும் இசை, எல்லா அறிவும் படைத்த ஒரு மனிதனுடைய குணங்களை மாற்றுகின்றதென்றால், அதிலும் மனிதனைத் தேவனாக்குகின்றதென்றால் இதில் என்ன வியப்பு.

இசை உயிர். செய்யுள் உடல். இந்த அருமைப் பாட்டை நமக்கு அறிவிப்பவர், "பாட்டிடைப் பண்ணொணைப்பாய்" என்ற சமயாசாரியப் பெருந்தகையே யாவர். பாட்டையும் பண்ணையும் பருந்தையும் நிழலையும் போலக் கண்டனர் இலக்கணக் கவிஞர். உலகியலறிவாளிகள் இசையை இலக்கியமாகக் காண்கின்றனர். ஏன்? எல்லாமாகத்தான் காண்கின்றனர். விஞ்ஞானக் கவிஞருடைய இசையுணர்ச்சியின் எழுச்சிதான் வானொலிவரையில் வளர்ந்து வந்தது. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே," என்று ஒரு பெரியார் அன்று உரைத்தார். அதனால் இறைவனோடு எங்குமாயிருக்குந்தன்மையைக் காட்டினார். அவரைப் போன்ற உண்மை ஞானிகளுக்கே உண்மையென்று விளங்குவதாயிற்று. அந்த உண்மை ஞானம் விஞ்ஞானியின் சட ஞானத்தில் சிறிது விளங்கப்பெற்றதால் எங்கிருந்தும் கேட்கிறோம். நாமெல்லோரும் உணர்கிறோம்.

அத்தகைய இசை யெழாத பாடமில்லை; எழாத நேரமில்லை. போர்க்களத்திலே தன்னை மறந்து தாய்நாட்டிற்காகச் சண்டையிடுகிறான்; வெற்றியடைகிறான்; வெற்றியின் விளைவு இசையாக எழுகிறது. தோற்கிறான்; தோல்வியின் துயரம் இசையாகிறது. அழகிற் சிறந்த அணங்கினை ஒரு தனித்த பூங்காவில் காளையொருவன் காண்கிறான். அவனுடைய உள்ள உணர்ச்சி இசையாக அவ்வணங்கிற்கு அனுப்பப்படுகிறது. இருவருமணக்கிறார்கள். மணத்தின் நிகழ்ச்சிகள் யாவும் இசையினாலேயே ஆகின்றன. மணத்தின் விளைவாக, மனத்தின் மாட்சி, குழந்தையாக இருவரிடமும் தவழ்கிறது. அதன் தூக்கம் இசை. அதன் விழிப்பு இசை. அதன் விளையாட்டு இசை. அதன் உணவு இசை. இப்படி மனிதனுடைய வீரம் முதல் காதல் வரை, குழந்தையினுடைய உறக்கம் முதல் உணவு வரை எல்லாம் இசையாக இருக்கின்றது. இசையை விட்டு மனிதன் இயங்குவதெப்படி? இசையே மனிதன், மனிதனே இசை. இறைவனுமப்படியே. "எம் இறை நல்வீணை வாசிக்குமே" என்றார் ஒரு பெரியார். எப்போது? சர்வ சங்கார காலத்தில். சத்தியும் சிவமாகிய தன்னகத் தொடுங்க தான் தனித்திருக்கின்ற அந்த நேரத்திலே, அவருடைய தனிமைக்குத் துணையாவது இசையென்றால், இசையின் ஏற்றந்தான் என்னே! இத்தகைய இசை-சைவத்துக்குத் துணையான இசை- சிவத்துக்கு இன்றியமையாத இசை- தமிழுக்கு உயிரான இசை- ஒழுக்கத்திற்குப் படியான இசை- மனவொருமைப்பாட்டிற்கு வழியான இசை, மக்களுடைய மனமாற்றத்தால, ஏன்? மதமாற்றத்தாலுங்கூட எத்துணை மாறுதல்கள் உற்றன.

தருமபுர ஆதீனத்தில்.....

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுடன்



ஆரம்பப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும்



வேத சிவாகம பாடசாலைமாணவர்களும், ஆசிரியர்களும்

சைவமுந் தமிழுந் தழைத்தது இசையால் என்பதை உணர்ந்து புறச் சமயத்தார்களாகிய சமணர்கள், இசையை அழித்தால் வைதீக சைவத்தையும் அழிக்கலாமென்று கனவு கண்டனர். இசை காம எழுச்சியின் பாதக வாயிலென்றெல்லாம் பரப்பினர். இசைப் பற்றைக் குறைத்தனர். அத்தகைய காலத்தில் ஞானசம்பந்தப் பிள்ளையாரென்னும் குழந்தை யெழுந்தது. அப்பரடிகள் என்ற எண்பது வயது கிழவர் எழுந்தார். குழந்தைப் பாட்டும் கிழவர் பாட்டும் தமிழிசையிலேயே நாட்டை முழுகச்செய்தன. மக்கள் புலவரை, இவர்கள் கூடவே கூட்டம் கூட்டமாய் வரச்செய்தன. இசையின் எழுச்சியைக் கண்ட சமணர்கள், இனித் தங்கள் சூழ்ச்சி பலிக்காதென்றுணர்ந் தனர். வெறுப்புணர்ச்சி மிகுந்த மதுரைச் சமணர் காதிலும், 'மானினேர் விழி மாதராய்' முதலிய இசை யேறிற்று. மனம் மாறிற்று. அன்புச் சைவம் தழைத்தது.

இடைப்பட்ட காலத்து இசைவழியாலேயே சமயம் பரவுகிறது என்றுணர்ந்த வடநாட்டவர்கள் தமிழிசையைத் தங்களுடையதாக மாற்றவும், அதனையே தமிழகத்துத் திரும்பப் பரப்பவும், அதன் வாயிலாகத் தங்களாதிக்கத்தை நிலைநாட்டவும் சூழ்சிகள் பல செய்தனர். தமிழ்நாட்டிலும் அரசியல் சூழ் நிலையே மக்களுடைய கலப்புக் குணப்பான்மையும் வந்தவர்களை நம்பி ஏமாறும் தன்மையும், இருந்தமையால் அவர்கள் சூழ்ச்சி பலித்தது. தமிழ்நாடு இசையாலும் தாழ்ச்சியுற்றது. சிறிது காலங்கழிய, வந்த ஆரிய சங்கீதமும் அதன் திரிபாகிய தெலுங்கு சங்கீதங்களும், தமிழுக்கு இசையுண்டோ யென்று கேட்கத் தொடங்கிவிட்டன.

அந்த நிலையாற்றான் இசைத் தமிழ் எழுச்சி இப்போது எழுவதாயிற்று. தமிழ் மக்கள் கண்விழித்தனர். கால ஏணிகொண்டு கருத்துலகையடைந்தனர். இசைத் தமிழின் ஏற்றம் இன்றியமையாதெனக் கண்டனர். அந்த ஆர்வத்திற்கு நெய்விட்டு வளர்த்தவர், ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள். இசைத்தமிழ் ஒளியில்லாத் தமிழாக, உண்மை ஒளியில்லாத் தமிழாக, தெய்வமணங் கமழா மலராக இருக்கலாகாது என்பதைத் திருவுள் ளங்கொண்டு தருமபுர ஆதீன மகா சந்நிதான மவர்கள் ஒரு தேவாரபாடசாலையை நிறுவிச் செவ்வனே நடந்திவருகிறார்கள்.

இத்தகைய மாற்றமான காலத்தில் ஒரு குழப்பமான நிலை ஏற்படுவது இயற்கையே. ஆதலால் தேவாரப் பண் முறைகளிலும் எத்தனையோ வழுவான இசை முறைகள் புகுந்து பண்ணின் பண்டைப் பெருமையின் அழகை மாற்றி வருகின்றன. பழமை பாதுகாக்கப்படவேண்டும். பழமையென்பது திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழிவந்த அருள் பெற்ற அம்மையார் ஆக்கித்தந்தது. அதனுடைய சீர்கேட்டிற்கு இன்றைய இசைநிலை இருக்குமானல் அதனை எந்தத் தமிழன் பொறுத்துக்கொண்டிருக்கமுடியும். பழமையென்றாலே தள்ளத்தகுந்தது; புதுமையென்றாலே கொள்ளத்தகுந்தது என்ற கொள்கையும் பொருந்தாது. சொந்தப் பிள்ளையை விட்டு அழகுக்காக அயலான் பிள்ளையை நமதென்று எண்ணமுடியுமா? நமது பிள்ளை அழகாயிருந்துவிட்டால் அதை ஏன் தள்ள வேண்டும். அதேநிலைதான் நமது பழைய பண் முறையிலும் இன்றைய சினிமா வர்ண மெட்டுக்களோடு அமைக்கப்பெற்ற தேவார முறையிலும்.

இந்த நிலை எனது தந்தையார் மனதை வருத்திக்கொண்டிருந்தமையின், அடிக்கடி அடியேனிடம் சொல்வதுண்டு. ஆகையால் எனது தந்தையாராகிய பாகவதர் தே. அ. இராசுப்பிள்ளை அவர்கள் பழைய பண்முறை கொடுக்க, பண் இருபத்துநான்கிற்கும், சுர பேதங்களமைக்க முன்வந்துள்ளேன். அதன் விளைவாகச் செவ்வழிப்பண்ணை முதற்கண் இங்கு தருகின்றேன்.

தேவாரம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியது.

பண் : செவ்வழி.
இராகம் : எதுகுலகாம்போதி.

தாளம் : திஸ்ரஜாதி திரிபுடை.
28-வது மேளம், முக்காலிடம.

ஆரோகணம் : ஸ ரி மா க ம ப த ஸ்ா
அவரோாணம் : ஸ் நி த ப ம க ரி க ரீ ஸா

தொண்டரஞ்சு களிறுமடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடுசெய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாயச் சுனைநீலமொட்டலரும் கேதாரமே.

1. ; ; ; கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . , தொண்ட ; | ர , . . . | ஞ்சு ; ; ; ||

மா கா மா ; பா ; | பா ; ; ; | பா ; ; ; ||
க . ளி ; . ; | றும் . . . | . . . . ||

2. ப த நி த த ப கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . . , . தொண்ட | ர . . . . | ஞ்சு ; ; ; ||

மா கா மா ; பா ; | பா ; ; ; | ப த நி த பா ; ||
க - ளி ; - ; | றும் ; ; ; | . . . . ; ||

3. ப த நி த த ப கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . . . . தொண்ட . | ர . . . . | ஞ்சு . . . ||

மா கா மா ; பா ; | ப த நி த பா ; | ப த நி த பா ; ||
க . ளி ; . ; | றும் . . . . ; | . . . . . ||

4. ப த நி த த ப கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . . . . தொண்ட . | ர . . . . | ஞ்சு ; ; ; ||

மா கா மா ; பா ; | ப த நி த ப த நி த | ப த நி த பா ; ||
க . ளி . . . | றும் . . . . | . . . . ||

தொண்டரஞ்சு களிறுமடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடுசெய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாயச் சுனைநீலமொட்டலருங் கேதாரமே.

— சம்பந்தர்.

கோபுலு

5. ப த நி த த ப கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . . . . . தொண்ட . | ர . . . . . | ஞ்சு ; ; ; ||

மா கா மா ; பா ; | ம ப த ப ப த நி த | ம ப த ப ப த நி த ||
க . ளி ; . ; | றும் . . . . | . . . . ||

6. ப த நி த த ப கா ஸா ; | ஸா மா ம க கா | மா ; ; ; ||
. . . . . . தொண்ட . | ர . . . . . | ஞ்சு . . . ||

மா கா மா ; பா ; | மா பா தா பா | தா நீ தா பா ||
க . ளி . . . | றும் . . . | . . . . ||

ப த நி த ப ம தா பா ; | தா ; ; ; | தா நீ தா ; ||
. . . . . . அ ட . | க்கி . . . | ச்சு . . ; ||

பா தா நீ நீ தா பா | மா பா தா பா | தா நீ தா பா ||
ரு - ம் பா . ர் | ம . . . | ல . . ர் ||

1. ப த நி த ப ம பா தா ; | ஸ்ா ; ; ; | ஸ்ா ; ; ; ||
அ . . . . . இ ண்டை | க ; . . | ட்டி . . . ||

தா ; ஸ்ா ; ; ; | த ஸ் ரி ஸ் நீ தா | தா ; பா ; ||
வ ; ழி ; . . | பா . . . . . | டு . . . ||

2. ப த நி த ப ம பா தா ; | ஸ்ா ; ; ; | ஸ்ா ; ; ; ||
அ . . . . . இ ண்டை | க . . . | ட்டி . . . ||

ஸ்ா ரி க் ரீ ஸ்ா ; ஸ்ா | த ஸ் ரி ஸ் நீ தா | தா ; பா ; ||
வ . . . ழி . . | பா . . . . . | டு ; . . ||

ப த நி த த ப மா மா ; | மா பா ம ப தா | தா ; தா பா ||
உ . . . . . செய்யு . | மி . . . . | டம் . . . ||

ப த ஸ்ா ; தா தா பா | மா ப த பா மா | ரீ ம ப மா கா ||
எ ன் . . ப . . | ரா் . . . . . | . . . . ல் ||

ரி க ம க ரி ஸ ஸா ஸா ; |
அ . . . . . வ ண் டு ; |

மற்ற இரண்டு வரியையும் இப்படியே பாடிக்கொள்ளவும்.



ஒரு சிறு நாடகம்

க. சொக்கநாதராலயம்

பாண்டியன்:- (சொக்கலிங்கப் பெருமான் சந்நிதானத்தில் நின்று வழிபட்டுத் துதிக்கின்றான்)

இராகம்: ரதிபதிப்பிரியா. தாளம்: ஆதி.

பல்லவி

சங்கரனே சோம சுந்தர மூர்த்தி (சங்)

அநுபல்லவி

தாய்மீனும் பிகை தழுவிடும் போதா
தகவுடையாய் பெறும் தாமரைப் பாதா (சங்)

சரணம்

எங்கள் குலதெய்வம் நீயன்றோ அருள்
எந்தையே திருவாலவாய் மேவிய
சாந்த தயாபர சதாசிவ மூர்த்தி
ஆந்துணை நீயே ஆண்டருள் வாயே (சங்)

அசரீரி:- பாண்டியனே! சண்பக மலர்களைக்கொண்டு மாலை தொடுத்து எமக்குச் சாத்திவந்த நின் திருத்தொண்டுக்கு மகிழ்ந்தோம். இன்று முதல் நினக்குச் "சண்பக மாறன்" என்னும்பெயர் விளங்குவதாக. நாமும் "சண்பகசுந்தரன்" என்னும் பெயர் கொண்டு விளங்குவோம்; நீ நீடு வாழ்க.

பாண்டியன்:- கருணையங்கடலே! சண்பக சுந்தரப்பெருமானே! என்னே அடியேன் பால் வைத்த கருணை (மீண்டும் துதிக்கின்றான்)

இராகம்: சாமா. தாளம்: ஆதி.

அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவா ரல்லர் தொண்டுசெய் வாரே.

உ. சண்பகவனம்

ஆடுவோம் வாருங்கள் பாங்கியரே
ஆனந்தமாக உல்லாசமுடன்— விளை (ஆடு)
சிந்தை திரவே மந்தமாருதம்
வந்து வீசும் இந்த நந்தவனந்தனில்—விளை (ஆடு)

(இவ்வாறுபாடிக்கொண்டு அரசி பாங்கியருடன் பூக் கொய்கின்றாள். மன்னன் அங்குவருகின்றான். கண்டவுடன் பாங்கியர்கள் அப்பாற்சென்று விடுகின்றார்கள். பாண்டியன் அங்குவருகின்றான்)

பாண்டியன்:-

இராகம்: சகானா.

வழுவிலா துன்னை வாழ்த்தி
வழிபடுந் தொண்டனேன் உன்
செழுமலர்ப் பாதங் காணத்
தெண்டிரை நஞ்சம் உண்ட
குழகனே! கோல வில்லி!
கூத்தனே! மாற்றாயுள்ள
அழகனே! ஆலவாயில்
அப்பனே! அருள்செய்யாயே.

(மணம்வீசுகிறது; சிந்திக்கின்றான்) ஏதோ புதுமணம்; இது வரையில் நுகர்ந்து அறியாத தாயிருக்கிறதே; பூவின் மணமோ ? இல்லை...... மணம் எங்கிருந்து வரக்கூடும் ?

(சற்றுசிதானித்துப்பார்க்கின்றான்)

தேவதருக்களின் மணமோ? இங்கு ஏது?......... அதோ காமவல்லியாகிய நமது தேவிதான் நிற்கின்றாள். மணமும் அவள் கூந்தலிலிருந்து தான் வரவேண்டும். ஆமாம்....... கூந்தலுக்கு மணம் ஏது?... பூசுவபூசி புனேவபுனேந்து வாரிக் கட்டி ஒப்பனே செய்தால்தானே. சரி பூவைத்த கூந்தலின் மணமாக இருக்கலாமோ.... இல்லை இல்லை....ஒரு பூவின் மணமும் அல்ல....ஒன்றும் புரியவில்லையே; சரி எல்லாந்தெரிந்த நம்புலவர் பெருமக்களைக் கேட்போம்.

௩. அரசசபை

(அரசன் மந்திரிகளுடன் வீற்றிருக்கின்றான்)

மந்திரி:- என்ன சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள் ?

பாண்டியன்:- அமைச்சரே ! என்மனத்தில் ஒருபெரிய சந்தேகம்.......ஒன்றும் புரியாமலிருக்கிறேன்.

மந்திரி:- உறுதியும் அசையாமையும்........ உள்ள தங்களுக்கா?............அரசியல் கோடாத உங்களுக்கா ?

பாண்டியன்:- அரசாட்சியைப் பற்றியது அல்ல....... அறிவைப்பற்றியது அது.

மந்திரி:- அறிவுக்களஞ்சியங்கள் நாற்பத்தொன்பது இருக்க ஏன் இவ்வளவு நீளமான யோசனே?

பாண்டியன்:- அவர்களை எப்படிக் கேட்பது ?

மந்திரி;- அறிவுக்கு ஆயிரம் பரிசுவைத்தால் போகிறது.

௪. ராஜவீதி

(காவலர்கள் முரசடித்துக்கொண்டு வருகின்றார்கள்)

ஊரவன்I:- ஏனப்பா ஒன்றும் புரியவில்லையே.

முரசடிப்போன்:- அரசருக்கு ஒரு சந்தேகமாம். அதைப் போக்குபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு அளிக்கப் போராராம். அப்படியே கட்டி ஆஸ்தானமண்டபத்தில் தொங்கவிட்டிருக்கிறதாம். சொன்னவர்களுக்கு அப்படியே.... .....

ஊரவன்II:- என்னப்பா...என்னப்பா.

முரசடிப்போன்:- ஆயிரம்பொன். ராஜா உள்ளத்தில் உள்ளதைச் சொல்பவர்களுக்கு.

ஊரவன்I:- இது யாரால் முடிகிற காரியமப்பா. பெரியபெரிய புலவர்களால்தான் முடியும். சங்கப்புலவர்களுக்குத் தெரிந்தால் போதும்........ போதும்....... அவர்கள் பாடுதான்.....

ஊரவன்II:- எங்கும் அறிவுக்குத்தான் மதிப்பு.... பரிசு... எல்லாம்.

ஊரவன்I.- இரும்பு அடிக்குமிடத்தில் ஈயுக்கு என்ன வேலை வா போகலாம்.

௫. சங்கமண்டபம்

(புலவர்கள் பேசிக்கொள்கின்றார்கள்)

கபிலர்:- உள்ளத்தில் உள்ளதையா சொல்லவேண்டும். ஓஹோ நமது சண்பகமாறன் பரம சிவபக்தனுயிற்றே. தனக்குக் கிடைத்த ஒரு பெரிய கௌரவப்பட்டத்தைப் பற்றியதா யிருக்குமோ ? ....இருக்காது. தொண்டுக்குப் பட்டம்; தொண்டுக்குப் பதவி இதில் என்ன சந்தேகம். ஒன்றும் புரியத்தானில்லை; பரணரே ! உமக்கு..........

பாணர்:- நேற்று அரசர் சண்பகவனத்தில் உலாவிக்கொண்டிருந்தாராம். நேரமோ மாலை நேரம்; பறவைக்கூட்டங்கள் பாடிக்கொண்டிருக்கும்; உண்டு ஓய்ந்த பறவைகள் கூட்டைத்தேடி வந்துகொண்டிருக்கும். பல நிறப்பூக்கள் மனதைக் கவர்ந்திருக்கும்; இதில் எதைப்பற்றி எண்ணினரென நாம் எண்ணுவது ?

கபிலர்:- போமையா; மன்னன் மனம் மன்னன் வாழ்வு எல்லாம் மலராலேதான் ஆனது. மலரும் மணமும் பிரியாதது. அதைப் பற்றி இருந்தாலும் இருக்கும்.

நக்கீரர்:- இருக்கலாம்; அரசன் அறியாத மலர் உண்டா? மணம் உண்டா? அறிந்த ஒன்றில் ஐயம் எழாதல்லவா? பொதுவாக அறிந்து, சிறப்பாக அறியப்படாத ஒன்றில் தானே ஐயம் பிறக்கும்.

கபிலர்:- எல்லோரும் இப்படி விட்டால்.... பரிசு சங்கப் புலவர்களுக்கு இல்லையோ? புலவர்கள் இருந்து வேறொருவர் பெற்றால்.... புலமைக்குப் பயன் என்னே?

நக்கீரர்:- என்ன சிந்திக்கிறீர்கள். இலக்கிய உலகிற் புகுந்து மன்னன் மனத்தைத் தேடுவோம். கிடைத்தால் சொல்லி மகிழ்வோம்; வேறு யாராவது சொன்னால் இகழ்விப்போம்; சொல்வன்மை நம்பால் உளது. பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே. இது உங்கள்நினைவிலிருக்கட்டும். கவலைவேண்டாம்.

சு. சொக்கநாதர் சந்நிதி

தருமி:- (துதிக்கிறான்)

இராகம்: நவரோஸ். **தாளம்: ஆதி.**

மறைகளாயின நான்கும்
    மற்றுள்ள பொருள்களும் எல்லாம்
துறையும் தோத்திரத் திறையும்
    தொன்மையும் நன்மையு மாய
அறையும் பூம்புனலானைக்
    காவுடை யாதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
    எம்மையும் ஆளுடை யாரே.

பரமேசா! முப்போதும் திருமேனி தீண்டுவார் குடியிற் பிறந்த எனக்கு உமது திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் நாள் என்றைக்கோ? இல்லறத்தில் ஈடுபட்டால் அல்லவா உம்மை அர்ச்சிக்கும் தகுதி பெறமுடியும். ஐயோ அதற்கு என் வறுமையல்லவா குறுக்கேநின்று தடுக்கின்றது. சிவப்பணிக்கும் பொருள் காரணமாயிருந்தால் பொருளின் சிறப்புத்தான் என்னே! பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றாரே. அவ்வுலகமும் யான் இல்லை என்பேன். ஆ கவலையில்லை. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' 'பேணப் பெரும் பொருள் தருவான் கண்டாய்' அண்மையிற் செல்வன்; அடிபணிவன்; சிவப்பணி செய்யப் பெரும் பொருள் வேண்டுவன்; இரப்பது என்கடன்; தருவது நின் கடன். படிப்பு இருந்தால் பரிசு ஆயிரம் பெறலாமே. அதற்கும் வழியில்லையே.

(வணங்கித் தோத்தரிக்கிறான்)

இராகம்: ஹரிகாம்போதி.

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைத்
    துன்பந் துடைத்தாள வல்லான் தன்னை
இறந்தார்கள் என்பே அணிந்தான் தன்னை
    எல்லில் நடமாட வல்லான் தன்னை
மறந்தார்கள் மதில்மூன்றும் மாய்த்தான் தன்னை
    மற்றொரு பற்றில்லா அடியார்க்கு என்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவால வாய்ச்
    சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

(பாசுரம் எழுதிய ஓலை கீழே விழுகிறது)

அசரீரி:- அன்பனே! இவ் வோலையைக் கொண்டு கருத்தை நிறைவேற்றிக்கொள்.

(ஓலையைக்கையில் எடுத்துப்பார்த்து மகிழ்கிறான்)

தருமி:- நான் புலவனல்ல. இப்போது எனக்குப் பரிசு கிடைத்தே விட்டது. என்ன. புலவர்க்குப் புலவர்பாட்டு. பாட்டு உடையவனுக்குத்தானே பரிசு. பாட்டு என்கையிலிருக்கிறது. பரிசு எனக்குத்தான். இப்பொழுதே இறைவனைத் தொட்டுப் பூசிக்கும் பேறு கிட்டிவிட்டது. ஆதிசைவனாகப் பிறந்ததன் பயனை இன்றே அடைந்தேன்.

எ. சங்க மண்டபம்

தருமி:- கவிக்குக் குற்றம் சொல்பவர்கள் புலவர்கள்தானே. முதலில் அவர்களிடம் காட்டி அநுமதி பெறுவோம். அரசர் மனமும் அரன் மனமும் ஒன்றுதான். அதைப்பற்றிக் கவலையில்லை.

(இவ்வாறு சிந்தித்துக்கொண்டே மண்டபத்தைச் சார்கின்றான்; புலவர்களைக் காண்கின்றான்)

இதோ இருக்கிறார்கள் புலவர்கள்.(வணங்குகிறான்) ஐயா ஒருபாட்டு. உள்ளத்தை உரைக்கும்பாட்டு. ஏற்குமோ என்று எண்ணிச் சொல்லுங்கள். (கொடுக்கிறான்)

இடைக்காடர்:-

(ஓலையை வாங்கிப் பார்த்துப் படிக்கின்றார்)

இராகம்: ஆரபி.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே.

ஆ. என்ன பொருட் சிறப்பு. அரசனுக்கு ஐயம் எழுந்த நேரம் மாலைக்காலம். தென்றற் காற்று. நந்தவனம். மலரும் மணமும். பாட்டோ மணத்தைப்பற்றிய பாட்டு. ...... பொருத்தமாகத்தான் இருக்கும். என்ன கபிலரே! எப்படி.........

கபிலர்:- தொல்காப்பியத்திலுள்ள நலம் புனைந்து உரைத்தல் என்னும் துறையல்லவா அமைந்திருக்கிறது. பொருளிலக்கணமும் நன்றாகவே இருக்கிறது.

(தருமியைப் பார்க்கின்றார்)

ஏனப்பா.......உன் பாட்டா.

தருமி:- ஆம்; நான்கொண்டுவந்ததுதான்.

பரணர்:- நமக்கேன் இந்தக் கவலை பாட்டோ அருமையானது. வளம் நம் அறிவை மயக்குகிறது. அரசன் செவி ஏற்றால்........ பரிசைப் பெறட்டுமே. கூலிக்குப் பாவம் குறுக்கேயா. வாருங்கள் அரசனிடம் போவோம்.

(யாவரும் அரசசபைக்குப் போதல்)

அ. அரசசபை

(அரசசபையில் நடன நிகழ்ச்சி. கண்டு மகிழ்கின்றான் அரசன்; நிகழ்ச்சி முடிகின்றது)

பாண்டியன்:- இவர்களுக்கு வெகுமதி அளித்து அனுப்புங்கள்.

(புலவர்கள் தருமியுடன் அங்கு வருகின்றார்கள்)

பரணர்:- அரசே! ஒரு குறும்புலவர் கொண்டுவந்த பாட்டு; இதோ இருக்கிறது. ஏற்று மகிழ்க.

பாண்டியன்:- பாட்டா. இவரா கொண்டு வந்தார். புலவரா இவர். உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து. இருக்கட்டும்.

(பாட்டை வாசிக்கிறான்; மகிழ்கிறான்)

என்ன பாட்டு. நல்ல வளம். உள்ளத்தை உள்ளபடியே எடுத்துக்காட்டும் பாட்டு.

(நக்கீரரைப் பார்க்கிறான்)

என்ன புலவர் திலகமே! பாட்டு....எப்படி.

நக்கீரர்:- பாட்டுக்கு என்ன. அழகுதான். பொருளோ........

பாண்டியன்:- பொருள் ... ... கொள்ளும் பொருள்தான்.

நக்கீரர்:- அவசரப்படாதீர்கள். ஆட்சி முறை அவ்விடத்தில், அறிவு........எம்மிடத்தில்.

பாண்டியன்:- அப்படியா. சரி தங்கள் கருத்து யாதோ?

நக்கீரர்:- பாட்டு என்ன சொல்லுகிறது? ஏ வண்டே! அழகிய சிறகுகளையுடைய வண்டே! தேனைத் தேடித் தேடி அலைந்து திரியும் வண்டே! நீ சொல்; ஆசையால் சொல்லாதே. உண்மையாக அறிந்ததைச் சொல். மயில்போலும் சாயல்; நெருங்கிய பற்கள்; செறிந்த நட்பு; இவற்றையுடைய எம் தலைவியின் கூந்தலைக்காட்டிலும் நறுமணம் கமழும் பூக்களும் உண்டோ? சொல்; இவ்வளவுதானே. இதனால் என்ன கிடைக்கிறது. கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்பதே. அரசே! என்ன.. பார்க்கட்டும். மக்கள் யாக்கை வினையின் வந்தது; வினைக்கு விளைவாயது; புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது. இதற்கு இயற்கை மணமா? இல்லை இல்லை, இதற்கா பரிசில்.

பாண்டியன்:- புலவரே! சினம் வேண்டாம். புலவர் திலகமாகியஉமது எண்ணத்துக்கு மாறாக நடப்பேனா. புலக்கோல்முன் குலக்கோல் செல்லுமா. உமது எண்ணம்போல் ஆகட்டும். (தருமியை நோக்கி) இளம் புலவரே எமது இப் புலவர்பெருமான் சொல்லும் குற்றங்களுக்குப் பதில் கூறி, பரிசைப் பெற்றுச் செல்வதில் எமக்குத் தடையில்லை. அறிவைக்கொண்டு அறிவை வெல்லும்.

தருமி:- அறிவா. என்னிடத்திலா. அறிவுக்கு அறிவுதான் இருக்கிறது. (சிந்திக்கிறான்) தமிழறியும் பெருமானே! திருவாலவாயா! நீ கொடுத்த பாசுரத்திற்கும் குற்றம் கூறுகின்றார்களே. இது உன் பெருமைக்கு இழுக்கன்றோ. இனி உன்னை யார்தான் மதிப்பார்.

இராகம்: பந்துவராளி.

வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
வழிபடும் அடியேன் நின்பால்
பெறுபொருள் இழந்தேனென்று
பேசிலேன்; யார்க்கும் மேலாம்
கறைகெழுமிடற்றோய்! நின்றன்
கவிக்குற்றம் சிலவாழ்நாட் சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால்
யார் உனை மதிக்கவல்லார்.

(பெருமான் புலவர் வேடத்துடன் ஆங்கு வருதல்)

புலவர்:- தருமி! பாட்டுக்குப் பரிசு கிடைத்ததா?

தருமி:- என்னமோ .... பொருளில் குற்றமாம்.

புலவர்:- பொருளிலா. என்ன குற்றம். யார் சொன்னது? வரட்டும் என் முன்னே. (அரசரை நோக்கி) அரசரேறே; தமிழறியும் தங்களது சபையிலா இத்தகாதசெயல்.

நக்கீரர்:- அரசரை அழைப்பது அப்புறம். கூறியவன் நானே. கூந்தலுக்கு மணம் இயற்கையோ? எங்கு கண்டீர்?

புலவர்:- மகளிர் எல்லாருடைய கூந்தலுக்கும் இல்லைதான். பதுமினிப் பெண்ணுக்கோ......புலவீர்! நீர் காமநூல் கற்றதில்லையே. மகளிரிலக்கணம் கூறும் காந்தம் முதலிய புராணங்களைக் கற்றதில்லையோ. இது தெரியாத உமக்கா.......புலமை......தலைமை.

நக்கீரர்:- என்ன சொன்னீர். எங்கே யார் சொன்னாலும் இல்லை என்பதுதான் துணிவு.

புலவர்:- தெய்வப் பெண்களுக்கு........

நக்கீரர்:- அவர்கள்தான் என்ன. பசு புண்ணிய விசேடத்தால் பதவி பெற்றவர்கள் தானே. அவர்களின் சரீரமும் கன்மத்துக்கு ஈடாகிய அசுத்த மாயையின் காரியப்பாடு தானே. நாற்றத்தில் குறைவு என்ன? மிகுதி என்ன? எல்லாம் ஒன்றுதான்.

புலவர்:- நல்லது. தாங்கள் நித்திய பூசையில் வழிபாடுசெய்துவருகின்ற காளத்தி நாதரின் அபின்ன சக்தியாகிய ஞானப்பூங் கோதைக்கோ........

நக்கீரர்:- (தனக்குள்) ஐயோ! அடிமடியில் கைவைத்துவிட்டாரே; சரி உண்மை எதுவாயினும் அறிவின் கௌரவத்தைக் காக்க அடித்துத்தான் பேசவேண்டும். புலவரே! ...அன்னையின் கூந்தலும் அப்படித்தான்.

தருமபுர ஆதீனத்தில்.....

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுடன்

கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும்



ஷை- கல்லூரி ஆசிரியர்களும், மாணவ அடியார்களும்

புலவர்:- அப்படியா? பார்த்துச் சொல்லும். புலமைச் செருக்கால், தலைமைப் பித்தால் தடுமாறுகிறீர். பசுபோதம் என்றும் நிலைத்தல் இல்லை. எண்ணிப்பாரும்.

(தனது தெய்வக்கோலத்தைக் காட்டுகிறார்)

நக்கீரர்:- ஆ புலவரா. காளத்திநாதரா? கண்ணுதல், கண்டக்கறை. கையில் மழுவும் மானும்; சடை, புலித்தோல், கையில் காலில் தலையில் கழுத்தில் எங்கும் பாம்பு. புலவரல்ல இறைவர். (தெளிந்து) ஐயா! புலவரே! மாயம் வேண்டாம். நெற்றிக் கண்ணைக் காட்டாதீர். குற்றம் குற்றமே.

புலவர்:- நக்கீரா தப்பிப்பிழை; உணர்ந்து நட. (நெற்றிக்கண்ணால் சுடுகின்றார்)

நக்கீரர்:- (உடம்பு எரிகிறது) ஐயோ எரிகிறதே; வேளைவிழித்த விழியல்லவா என்மேல் படுகிறது. (சோர்கின்றார்)

இடைக்காடர்:- அரசரே! புலவர்களே! நமது சங்கத்தலைமைப் புலவருக்கு இத்தகைய இடுக்கண் வந்துற்றதே; யாது செய்வோம்.

கபிலர்:- நமக்கேன் கவலை; அவனன்றி ஓரணுவும் அசையாதே; அவனைத் துதிப்பது தான் நமது கடன். (துதிக்கிறார்.)

இராகம்:- குரஞ்சி. தாளம்:- ஆதி.

வேதியா வேதகீதா விண்ணவர் அண்ணா என்றென்
றேதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள்காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செய்யாயே,

(உணர்வுபெற்றெழுகின்றார் நக்கீரர்)

நக்கீரர்:- உணர்ந்தேன். மூலமலமுனைப்பால் அறிவிழந்து ஐம்புலவேடரால் அயர்ந்து மயங்கும் ஆன்மாக்களுக்குச் சிவஞானம் அளிக்கும் செம்மலே! தவஞானச்செல்வமே!

இராகம்: பூரிகல்யாணி. தாளம்: ஆதி.

மாசில் வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

அசரீரி:- நக்கீரரே! இந்தப்பெருந்தாபமும் பிறவித்தாபமும் தணிவதாக.

நக்கீரர்:- தருமி! உணர்ச்சி தந்த உன்னைப் போல உறுதுணையாவார் யாருளர். நீயே என் பூஜைப்பயனுகிய பெருமானை என்னோடு போட்டி இட அழைத்துக்கொடுத்த புண்ணியவான்; இப்பரிசு உன்னுடையதே. அரசே! அவரை எடுத்துக் கொள்ளச் செய்யுங்கள்.

பாண்டியன்:- அப்படியே ஆகட்டும். எங்கள் குலமுதல்வர் சவுந்தரேசரின் திருவருட் பெருக்கு என்னே. இவ்விளங் குமரன் வாயிலாக இன்று எனக்குக் கிடைத்தது.கண்குளிரக் கண்டேன். என் உள்ளம் இறைவன் உள்ளம்; இறைவன் உள்ளம் என் உள்ளம். தமிழறியும் பெருமானே தாழ்சடைச்சொக்கன். அவனருளே காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி ஆட்கொண்டது. (துதிக்கிறான்)

இராகம்: கமாஸ்.

மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையோன்
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி [காண்
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனற்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும் புறவில் திருப்புத்தூரில்
திருத்தளியான் காண் அவன்என் சிந்தையானே.

மங்களம்.

எழுதினேர் தருமபுர ஆதினத்தமிழ்ப் புலவர், வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனப் பாடசாலை ஆருவது ஆண்டு விழாவின்போது மாணவர்களால் நடிக்கப்பெற்றது.

LIFE OF CHERAMAN PERUMAL I.

Thirumanthira Mani, Thudisai-Kizhar, **A. CHIDAMBARANAR**

(*Born*—642 A. D. Ascended the Throne—667 A. D.

Reigned till 712 A. D.)

I. Chera Country.

The country between the Himalayas and the Vindhyas was called Hindustan and the country South of the Vindhyas was called Deccan in the Vedic period . The country South of the Thungabadra river was called Tamilakam.

The Tamilakam was divided among the three crowned Kings Viz., Cherar–Cholar–and Pandyar. A number of Chieftains, such as first Seven Vallals, second seven vallals and third seven vallals of lower rank were ruling the country under the suzerainty of the above crowned kings. But these chieftains were always on the look out to throw off this suzerainty and to rule independently, if they could.

The present Malabar and South Canara Districts along with Travancore and Cochin states comprised the Chera Nadu. Though, Chera country was ruled by one crowned king, the country was divided into number of small states, such as:— Ven–Nadu (Travancore), Puzhi Nadu (Tulu), Kutta Nadu (Cochin), Kudam Nadu (Coorg), Katka Nadu (Palghat), Era Nadu (Calicut), Venga Nadu (Kollengode), Kolatthu Nadu (Chirakal), Nanji Nadu (Nagercoil), Ota nadu (Kayankulam) Walluva Nadu and Kadambar Nadu (Mangalore).

II. Cherar Family.

Pari–mel–Alagar, a well known Commentator to Thiru–Kural,[1] has said in his commentary[2] to a Kural couplet, that men, who have sprung up of a mighty and old families, like Cherar, Cholar and Pandyar, who were rulers from the time of the creation of the world, never fail in their duties even though when fortune has forsaken them.

Hence, Cherar Family is one of the old and mighty Royal families which have got origin in the pre-historic period.

Ramayana is considered to be the earliest Literature in the Aryavartha. In that book, Valmiki mentions about Chera King and his port Muziris. The period of Ramayana is said to be 6000 B. C.

---

[1] வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று. —குறள்.

[2] பழங்குடி தொன்றுதொட்டு வருகின்றகுடி; தொன்றுதொட்டு வருதலாவது சேர, சோழ' பாண்டியர் என்றாற்போல, படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவருதல்.

Muziris was a port referred to by Roman Pliny (23—79 A. D.) He says, " To those bound for India, it is most convenient to depart from Okelis (now Calla or Cella, a small bay within the straits of Babelmandeb). They sail thence with the wind Hippolos in 40 days to the first Emporium of India. Muziris is now called Kodungolur. Kodungolur was built after the port Muziris was ruined by a deluge.

The next old Literature is Mahabarata. Mahabarata war took place in 3105 B. C. [1] In Mahabarata, Veda-Viyasar [2] mentions about a Chera King called Perum-Chotru-Uthiyan Cheral-Athan, who performed Anthi-Itti by giving Perum-Chorru (Prabutha-Bali) to all warriors who died fighting in the Great War. [3]

Next comes Asoka's edicts. Asoka ruled between 272 B. C. and 232 B. C. In his second Rock Edict, he makes reference to South Indian Kings as then existed such as:— Cholar-Pandyar-Kerala-puthrar, Satyaputhrar and Tambrapanni. Here Kerala-Puthrar stands for Chera Kings; Satyaputhrar for Kosars.

The word Kerala is derived from the word Cheral, which in Tamil means 'Mountain Ranges' In Kanarese language Ch becomes K- like Chenni in Tamil becomes Kenni. Hence Cherala became Kerala in Kanarese and the northern people who had contact first with the Kanarese people adopted the word Kerala. Hence Asoka called Chera Kings as Kerala-Puthrar.

In the Sangam Literature, Kosars are spoken of as "Onru-Mozhi-Kosar" and Voy-mozhi-Kosar. Hence the Emperor Asoka called Kosars as Satyaputrars. Tambra-panni stands for Ceylon.

From time immemorial, up to and during the reign of Asoka, the three crowned Kings of the South India were independent.

Next, we come to Sangam Literature to know something of Cheras.

The third Sangam or Kadai-Sangam existed in the present Madura Town which is otherwise called Kudal between 1715 B. C. and 235 A. D. for 1950 years. Nakkirar was head of the Sangam in the last peirod i. e., in the 3rd century A. D. In his commentary on Erayanar Aga-Porul, he says about this Sangam and the previous two Sangams

Pathirru-Pathu is one of the Sangam books which deals solely on Cheras.

Pathirru-Pathu means ten-ten i. e., 100. that is a book of 100 stanzas. Each ten deals about a Chera King. Out of ten-ten we got only eight-tens and the first-ten and tenth-ten are lost. But in the existing stanzas there are indications to show that such and such Chera was sung in the first ten and such Chera was sung in the tenth-ten.

Apart from these 10 Chera Kings, we come across with some other Chera Kings from Pura-Nanooru and other Sangam works. For easy reference, I have tabulated the Chera Kings as found in the Sangam Literature and other records chronologically. Vide lists A and B attached.

So far as we know from the books, there were only two families among Cheras; one is Uthiyan Family and another is Porayan Family. Both are dayadies i. e., belong to the same Gothra namely Chera house. Sekkilar who is a poet, philosopher, Saint and a Minister to Rajendra Chola I (1013—1042 A. D.) says, in his monumental work called Periya-Puranam, that Uthian Family is older than Porayan family. Sekkilar lived between 992 and 1042 A. D.

---

[1] *Kalyana Kalpa Tharu Vol. XI—Nc. 10—335*

[2] *Seran Vunchi Vol.—1 to 3*

[3] அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ, நிலந்தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை, ஈரைம பதின்மரும் பொருதுகளத் தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய். —புறம்.

Out of the two Tamil Epics, Silapadhigaram is very helpful to fix the date of Cheran Senguttuvan. If that is fixed, then, it will be very easy to fix the dates of other Chera Kings.

In that book it is said that on a certain Friday in the month of Aadi, on the 8th day of Waning moon, when the Star Karthigai rise with the moon, the town Madura would be burnt. [1]

Several astrologers tried to fix the date with the data, but all were failed except one E. M. Subramaniya Pillai, an astrologer and a Tamil Scholar. So, He calculated carefully and fixed the date as 144 A. D. as the only date which satisfies every point. I need not repeat all those authorities as the date fixed by him satisfies other references. [2]

Deepa-Vamsa a book which deals with the history of Ceylon, says about Gaya-Vahu I that Gaya-Vahu ruled from 642 to 664 in Buddha-Nirvana Era Taking Budda Nirvana to be 493 B. C as per Deepa-Vamsa, we may safely say that Gaya-Vahu ruled from 148 to 170 A. D.

Gaya-Vahu came to Vanchi in 149 A. D. during the opening ceremony of the temple of Kannaki. It is stated that Senguttuvan was aged 50 then. So, he ought to have ascended the throne in the year 100 A. D. and reigned for 55 years, till 155 A. D.

